Registered at G. P. O. as a Newspaper

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO—12.

மெய்யெனபோர்க ஆட்டுப் பால் மா




இருமல், காசம் தொய்வு நோய் மூல வியாதி மற்றும் பலவீனம் முதலானவற்றிற்கு மிகச் சிறந்தது.

விபரங்களுக்கு:- க. கணேசன், 53, மெயின் வீதி, கொழும்பு.

புத்தகம் 10 துர்முகி ஞூ பங்குனி மாதம் 25 திகதி 7-4-57 ஞாயிற்றுக்கிழமை றம்ழான் பிறை 6 இதழ் 44

# ஆகஸ்ட் போராட்டத்திற்கு ஆயத்தங்கள்

## ஜூன் 5ல் சத்தியாக்கிரக ஞாபகார்த்த ஆர்ப்பாட்டம்

### அதற்கு முன்பு "தொண்டர் வாரம்" நடத்தி தொண்டர்கள் திரட்டப்படுவர்

### கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நேரடி நடவடிக்கைக் குழு தீட்டிய திட்டம்

(சுதந்திரன் நிருபர்)

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் கட்டுக்காவலோடு வெகு அந்தரங்கமாகக் கூடிய தமிழரசுக் கட்சியின் 'நேரடி நடவடிக்கைக் குழு' ஆகஸ்ட் போராட்டத்திற்கான நேரடி நடவடிக்கைத் திட்டங்களை முற்றுகப் பரிசிலனை செய்து முடிவுக்குவந்துவிட்டதென்று தெரிகிறது. இக்கூட்டத்தில் வெளியார் யாரும் அனுமதிக்கப்படவில்லையென்றும், யாழ்ப்பாணம் பட்டணத்தில் உள்ள ஒரு வீட்டின் பின் அறையில் இக்கூட்டம் மிகவும் இரகசியமாக நீண்ட நேரம் நடைபெற்றதாகவும் நமது யாழ்ப்பாண நிருபர் அறிவிக்கின்ருர்.

நமது நிருபர் தொடர்ந்து எழுதுவதாவது: தமிழரசுக் கட்சியின் நேரடி நடவடிக்கைக் குழு கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் கூடி ஆகஸ்ட் போராட்டத் திட்டத்தின் இறுதிக் கட்டங்களைப் பரிசீலனை செய்து ஏற்றுக்கொண்டது என்று தெரிகிறது. திட்டத்தின் விவரங்கள் வெளியில்தெரியவில்லை. மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்ட ஒரு தமிழரசுத் தலைவரைக் கேட்டபோது திட்டங்களின் விவரங்களை வெளியிட அவர் மறுத்துவிட்டார். தாம் அனைவரும் சத்தியப்பிரமாணத்தின்மீது ஒன்றுகூடி விவாதித்து முடிவு செய்ததாகவும், அதனுல் திட்டத்தின் அந்தரங்கங்களை தாம் வெளியிட முடியாதிருப்பதற்காக வருந்துவதாகவும் அவர் தெரிவித்தனர்.

### பிரமிக்கத்தக்க திட்டங்கள்

ஆனல் திட்டங்கள் நிறைவேற்றப்படும்போது அவை பிரமிப்பூட்டுவனவாக இருக்கும் என்றும், அரசாங்கத்தின் ஒரு பகுதியாவது ஸ்தம்பித்துப்போகும்படியான பலனை அவை நிச்சயம் தரும் என்றும், 'சிறீ' எதிர்ப்பு விஷயத்தில் அரசாங்கம் காட்டிய அசிரத்தையை ஆகஸ்ட் போராட்டத்தின் போது காட்ட முடியாதென்றும், அரசாங்கம் திக்குமுக்காடும் நிலையில் எப்படியும் நடவடிக்கை மேற்கொண்டே தீர வேண்டும் என்றும் அவர் கூறினுர்.

### சாத்வீகப் போராட்டம்

அவர் மேலும், "நமது நேரடி நடவடிக்கைகள் அனைத்தும் பலாத்காரம் துளிகூடக் கலவாதனவாகவும், காந்திய வழியைப் பின்பற்றி சாத்விகமானவையாகவும், அகிம்சாபூர்வமானவையாகவும், பெரும்பாலும் சட்ட மறுப்பு, சத்தியாக்கிரகம் ஆகியவற்றேடு சம்பந்தப்பட்டவையாகவுமே இருக்கும் என்று உறுதி கூறுவேன்" என்ருர்.

### தொண்டர் வாரம்

தொண்டர் படை திரட்டப்பட்டுவிட்டதா என்று கேட்டபோது, "கணிசமான அளவு தொண்டர்கள் நாட்டின் பலபாகங்களிலும் திரட்டப்பட்டிருக்கிருர்கள்; தொண்டர் படைதிரட்டும் வேலையை உத்வேகப்படுத்துவதற்காக ஏப்ரல் மத்திய பகுதியில் "தொண்டர் வாரம்" ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருக்கிறேம். ஏழு நாட்கள் நாடுபூராவும் தொண்டர்கள் மும்முரமாகத் திரட்டப்படுவார்கள்" என்று அவர் பதிலிறுத்தார்.

### சத்தியாக்கிரக ஞாபகார்த்த தினம்

அவர் மேலும் தெரிவித்ததாவது: "தொண்டர் படை திரட்டும் வேலை முடிவுற்றதும் அவர்கள் சேவையின் போது குறிப்பிட்ட "யூனிபோம்" உடை அணியும்படி கேட்டுக்கொள்ளப்படுவார்கள். அவர்களுக்கு பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்கப்படும். ஜூன் மாதம் 5ந்

(8-ம் பக்கம் பார்க்க)

## முத்திரையிலும் சிங்கள மொழி வெறி!

அரசினரால்புதிதாக வெளியிடப்பட்டுள்ள முத்திரைகள் படத்தில் தரப்பட்டிருக்கின்றன. இடமிருந்து வலம் (மேலே)85 சதம்; 35 சதம். இடமிருந்து வலம் (கீழே) 10 சதம்; 4 சதம்.



மேற்படி முத்திரைகளின்பெறுமதி (எழுத்தில்) சிங்களத்தில் மட்டுமே எல்லாவற்றிலும் குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதனுல் சிங்களம் தெரியாதவர்களுக்கு அவற்றின் பெறுமதிபற்றிச் சந்தேகங்கள் எழலாம்.

இலக்கங்களைக் கொண்டு அவை ரூபாவைக் குறிப்பிடுவனவா அல்லது சதத்தைக் குறிப்பிடுவனவா என்று எப்படிச் சிங்களம் தெரியாதவர்கள் அறந்துகொள்வார்களென்று அரசினர் கருதினுர்களோ நமக்குத் தெரியவில்லை.

ஆட்சியாளர்களின் சிங்கள மொழி வெறி தவருன வழிகளில் செல்வதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

## சிங்கள மொழியை திணிக்க மறைமுகமான மற்ருெரு சூழ்ச்சி?

### கல்வி அமைச்சரின் புதிய திட்டத்தை அனைவரும் ஒரு முகமாக எதிர்க்க வேண்டும்

### உதவி பெறும் பாடசாலை ஆசிரியர்கள் அரசாங்க ஊழியராவதில் உள்ள ஆபத்து

(சுதந்திரன் நிருபர்)

"உதவி நன்கொடை பெறும் பாடசாலை ஆசிரியர்களை அரசாங்க ஊழியர்களாக்கி விடுவதற்கு கல்விஅமைச்சர் திரு. தஹநாயகா உத்தேசித்திருக்கும் திட்டம் உதவி பெறும் பாடசாலை ஆசிரியர்களின் ஜீவாதாரமான உரிமைகள் பலவற்றைப் பறிப்பதோடு மாத்திர மல்ல, பொதுவாக நாட்டிற்கே தீமைபயக்கும் ஒரு அபாயகரமான சதித்திட்டமாகவும் அமையலாம்" என்று கொழும்பு விவேகானந்த வித்தியாலயத் தலைமை ஆசிரியரும் அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின்முன்னுள் செயலாளருமான திரு. கே.வி. செல்வத்துரை சுதந்திரனுக்கு அளித்த ஒரு விசேஷ பேட்டியின் போது கூறினுர்.

கல்வி அமைச்சர் திரு. தஹநாயகா தமது இலாகாவின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பியுள்ள ஒரு அறிக்கையில், உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் படிப்பிக்கும் ஆசிரியர்களையும் அரசாங்க ஊழியர்களாகவே கருதும்படியான ஒரு திருத்தத்தைக் கல்விச் சட்டத்தில் செய்ய வேண்டுமென்றும் அதற்காக வேண்டிய நகல் மசோதாவைத் தயாரிக்கும் படியும் கட்டளை பிறப்பித்துள்ளாராம்.

உதவி பெறும் பாடசாலை முகாமைக்காரர்களுக்கு எதிராக ஆசிரியர்கள் பலர் தம்மிடம் புகார் சொல்லியிருப்பதாகவும், இந்த மாற்றத்தைத் தாம் கொண்டு வருவதற்கு அதுவும் ஒரு காரணம் என்றும் திரு. தஹநாயகா கூறியுள்ளார்.

### கல்வி மந்திரியின் ஏதேச்சாதிகாரம்

"ஆனல் உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த மாற்றத்தில், நேரடியாகச் சம்பந்தப்பட்ட உதவி பெறும் பாடசாலை ஆசிரியர்களின் அபிப்பிராயத்தைக் கலந்துகொள்ளாமல் கல்வி அமைச்சர் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர முடிவு செய்திருப்பது ஏதேச்சாதிகாரமான செயலாகும்" என்று கூறிய திரு. கே. வி. செல்வத்துரை, மேலுந் தொடர்ந்து தெரிவித்ததாவது:

### தீங்கை எதிர்த்து போராட வேண்டும்

1. "இந்த மாற்றத்தினுல் ஆசிரியர் சமூகத்திற்கும் பொது மக்களுக்கும் பெருந் தீங்கு விளையும். அரசாங்க ஊழியர்களாக உதவி பெறும் பாடசாலை ஆசிரியர்கள் கருதப்பட்டால், அவர்களுக்கு வீட்டு வாடகை, இலவச இரயில் பிரயாணச் சீட்டு முதலிய அற்ப ஆதாயங்கள் கிடைக்கலாம் எனச் சிலர் அவாவுறக் கூடும். ஆனல் அவர்கள் இழக்கும் உரிமைகள் இந்த அற்ப ஆதாயங்களைவிட அதிகம் மதிப்புவாய்ந்தவை. நாட்டுப் பணிபுரியும் ஆசிரியர்களாகிய நாம், அரசாங்க ஊழியர்கள் ஆகாமலே, வீட்டு வாடகை, இலவச இரயில் பிரயாணச் சீட்டு ஆகிய சலுகைகளைப் பெறப் போராட வேண்டுமே தவிர இவற்றிற்காக எங்கள் கால்களிலும் கைகளிலும் நாங்களே விலங்கு பூட்டிக்கொள்ளக் கூடாது.

### நாட்டுக்கு நஷ்டம்

2. "உதவி பெறும் பாடசாலை ஆசிரியர்கள் இன்று கிராமாந்தரங்களில் பற்பல கிராம முன்னேற்ற வேலைகளில் ஈடுபட்டுள்ளார்கள். கிராம மக்களுக்கு அரசியல் விழிப்பு ஊட்டி வருபவர்களும் இவர்கள் தாம். அத்தோடு கிராமச் சங்கம், கூட்டுறவுச் சங்கம், ஜனசமூக சங்கம் ஆகிய ஸ்தாபனங்களுக்கும் இவர்களுடைய அரிய சேவைகள்பயன் பட்டு வருகின்றன. அரசாங்க ஊழியர்களினுல் நாடு இவர்களுடைய உழைப்பையும் ஊழியத்தையும் இழக்க வேண்டி நேரிடும்.

3. "உதவி பெறும் பாடசாலை ஊழியர்கள் அரசாங்க

(9-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகுணர்ச்சி மங்கையரின் பருவத்திற்கேற்ப மாறுபடவேண்டும்

## குறுந்தொகை காட்டும் கோதை எம்மவர்க்கோர் எடுத்துக்காட்டு

### மணமானவள் கணவனுக்கு இனியன ஊட்டுவதாலேயே அழகு செய்வதன் பயனை அனுபவிக்க முடியும்

அழகுணர்ச்சி பெண்களுக்கு அன்றும் இருந்தது; இன்றும் இருந்து வருகிறது; என்றுமே அது இருக்கத்தான் செய்யும். அதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால் அந்த அழகு உணர்ச்சி எப்படி எந்தப் பருவத்தில் அமைந்திருக்க வேண்டும் என்பதைத்தான் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும்.

இதை அறியாத காரணத்தாலேயே அநேக ஆரணங்குகளின் மிதமிஞ்சிய அழகுணர்ச்சி அவர்களை ஆட்டிப் படைத்து அனர்த்தங்களை விளைவிக்கும் விபரீதம் இன்று வளர்ந்து வருகிறது. இதனால், சங்ககால மங்கையரின் அழகுணர்ச்சிபற்றிக் சிறிது ஆராய்வது இன்றைய நிலையில் மிகவும் வேண்டற்பாலதாகும்.

★

இளமைப் பருவத்தை எட்டிப்பிடித்துவிட்ட ஒரு நங்கை, தன்னை அழகுபடுத்திக்கொள்வதை அவளின் அன்றாட வேலைகளில் ஒன்றாகவே கருதுகின்றாள். அதற்கென்று சில மணிநேரத்தை ஒதுக்கியும் வைக்கின்றாள். மணப் பருவம் நெருங்க அவளின் அழகுணர்ச்சியும் வளர்கிறது. எனவே தன்னை அழகுபடுத்த ஒதுக்கும் நேரத்தை அவள் சிறிது அதிகரித்துக்கொள்கிறாள். விரல்களைக் காந்தள் எனவும் கருவிழிகளைக் குவளை மலர்களென்றும் கூறத் தோன்றுமளவுக்கு அழகுபடுத்திக் கொள்கிறாள். இவை தவிர அங்கமெல்லாவற்றையுமே தங்கமெனத் தெரியப்படுத்திக்கொள்கிறாள்.

#### திருமணமாகுமுன் அழகுணர்ச்சி

ஒருநாள் அவள் தாய், கட்டித் தயிரைப் பிசைந்து, தாளித்து, தயிர்க்குழம்பு வைக்கும்படி அவளிடம் கூறினாள். அதைக் கேட்ட அவள், தன்னுடைய அழகு விரல்கள் அந்த முற்றிய தயிரைப் பிசைவதால் எங்கே அழகு கெட்டு விடுமோ என எண்ணி அதை மறுத்துவிடுகின்றாள். தாயின் சொல்லைத் தட்டும் அளவிற்குத் தன் அழகின்மீது அவள் அதிக கவனம் செலுத்திக் கொண்டு வருகின்றாள்.

**எம். என். சண்முகநாதன்**

#### திருமணமான பின்.....

திருமணமாகிறது. தனித்திருந்து அழகைப் பேணி வந்த அவள் துணைவனைப் பெற்று இல்லற வாழ்க்கையில் எடுத்தடி வைக்கிறாள். அப்போது அவளுக்கு, வெளியில் சென்ற தலைவன் திரும்பி வரும்போது விதவிதமான கறி சமைத்து அவனுக்கு உணவு அளிக்கவேண்டும் என்ற எண்ணமே மேலோங்குகிறது. அவளுக்குத் தாய் சொல்லிய தயிர்க்குழம்பு ஞாபகத்திற்கு வருகின்றது. தயிர்க் குழம்பு சமைக்க கட்டித் தயிரை எடுத்து, காந்தள் மலர் போன்ற விரல்களினால் பிசைகின்றாள். பிசைந்து பின் அதைத் தாளிக்கச் செல்லுகின்றாள். தாளிக்கும்போது, அந்த தாளிப்புப் புகையும், தீயின் வெப்பமும் அவள் கண்களுக்குள் புகுகின்றன. ஒரே நீர்த்துளிகள், குவளை மலர்க் கண்களிலிருந்து கொட்டுகின்றன. காந்தள் மென்விரல்களால் கட்டித் தயிரைப் பிசைந்து தயிர்க் குழம்பு சமைக்கும் அந் நேரத்தில் அவள் இடையில் சுற்றியுள்ள பட்டுச் சேலை சிறிது நெகிழ்கிறது. உடனே அதையும் அந்தக் கைகளினாலேயே தொட்டுச் சொருகிக் கொள்கின்றாள். இப்படிச் சிரமப்பட்டு ஒருவிதமாக அந்த தயிர்க் குழம்பைச் சமைத்துவிடுகின்றாள்.

#### கணவன் பாராட்டு

வெளியில் சென்றிருந்த தலைவனும் வந்துவிடுகின்றான். அவனுக்கு அவள், தான் சமைத்த சாப்பாட்டைப் பரிமாறுகின்றாள். தலைவன் எப்படிப்பட்டவன் தெரியுமா? எப்படித்தான் தன் தாய் சுவையுடன் சமைத்துப் போட்டாலும் அதில் ஏதாவது குறைகூறும் சுபாவம் உடையவன். அப்படிப்பட்ட தலைவன், தலைவி சமைத்த உணவை சாப்பிட்டுவிட்டு அவளைப் பார்த்து, "ஆகா! அருமையான சுவையும் நறுமணமும் உடைய சாப்பாடு" என்று பாராட்டுகின்றான். [illegible] தும் அவளது உள்ளம் உவகையால் மலர்கின்றது. அதன்பிரதிபலிப்பாக அவள் கோவைக்கனி இதழ் விரிந்து கொத்து முல்லையைக் காட்டுகின்றது. இதோ அந்தப் பாடல்:

முளிதயிர் பிசைந்த
காந்தன் மெல் விரல்
கழுவுறு கலிங்கம் கழா
அது உடீஇக்
குவளை உண் கண்குய்ப்புகை
கமழத்
தான் துழந்து அட்டதீம்
புளிப்பாகர்
சினிதெனக் கணவன்
உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று
ஒண்ணுதல் முகனே!

(குறுந்தொகை - 167)

தன்னை அழகுபடுத்திப் பார்த்தலில் கண்ட இன்பத்தைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக இன்பத்தை, தன் கையால் சமைத்துப் பரிமாறிய உணவைக் கணவன் 'பேஷ்' கொடுத்துப் பாராட்டி உண்டானே என்பதைக் காண்பதில் அடைகிறாள் அவள். ஆடையில் அழுக்குப் படிந்து அழகு கெட்டுவிட்டதே, காந்தள் விரலில் இருந்த கவர்ச்சி போயிற்றே, குவளைக் கண்கள் புகைக்குடித்து கண்ணீரைக் கக்குகின்றனவே என்ற உணர்வே அந்த நேரத்தில் அவளுக்கு ஏற்படுவதாயில்லை. தான் சமைத்த உணவைக் கணவன் சந்தோஷமாகச் சுவைத்து உண்டான்; இன்புற்றான். இதைக் காட்டிலும் மேலாகக் கணவனை எந்த வகையில் மகிழ்விக்க முடியும்?

#### உண்மை இன்பம்

அழகு இன்பம் தருவது. காண்பவர்களுக்கு அது கிடைக்கிறது. காண்பவர்கள் அழகை அழகென்று கண்டு இன்பமடைந்து இன்முகம் காட்டியோ அல்லது வாய்விட்டுச் சொல்லியோ தெரிவிக்கும் போதுதான் அதன் உடையவர்களின் இதயத்திலே இன்ப ஒளி பரவுகிறது.

கணவனிடமிருந்து மனைவி இத்தகைய அற்புத உணர்வைப் பெறுவது எப்பொழுது என்பதை மேற்காட்டிய பாடல் எடுத்துக் காட்டுகிறது. அங்கமெல்லாவற்றையும் தங்கமாக்கித் தகதகக்க வைத்தாலும்; பரிமாறும் உணவு மட்டும் பக்குவமாயில்லையென்று கண்டால் கணவனின் அன்போ, ஆதரவோ, பாராட்டோ எதுவும் மனைவிக்குக் கிடையாது. அழகு செய்ததின் பலனும் பெறப்படாதுபோகும்.

★ G. C. E. பரீட்சை
(ஆங்கிலமும், தமிழும்)

★ ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி பிரவேசப் பரீட்சை

ஆகிய வகுப்புகளுக்கு தபால் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

★ மேல் வகுப்புகளுக்கு ஆங்கில, தமிழ்க் கட்டுரைப் புத்தகம் ஒவ்வொன்றின் விலை ரூ. 3-00.

★ ஆங்கிலம்
★ ஹிந்தி

பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

விபரங்களுக்கு,

சாந்தி கல்லூரி,
தபால் பெட்டி 1398.
கொழும்பு.

FOR YOUR

PRINTING TYPES

10. pt. 'Monotype' Times Roman
Types imported from England are high in price. The English types made by us are very much cheaper in price than types imported from England or India. Those interested will please ask for our price list of types made by us.

12 pt. 'Monotype' Times New Roman
This Foundry makes English and Tamil types of various faces. Those interested will please ask for a seperate folder showing specimen of our types.
This paragraph is composed with 12 pt. Monotype Times New Roman cast on a 12 pt body.

14 pt. 'Monotype' Times Roman
We cast types on ordinary type metal and on harder type metal. The ordinary type metal is hard enough for most purposes, and the types cast on it would be cheaper than the types cast on the harder metal. It is open to customers to choose either the ordinary or harder quality type metal.

18 pt. 'Monotype' Times Roman
Many printers will have their old types which they would wish to recast. We are prepared to accept the old types unmelted for recasting in the faces referred to in this column.

'Monotype' Times Bold and Times Italics Types can also be cast in 10 pt., 12 pt. 14 pt. and 18 pt in our Foundry.

For further details:—

The Manager,
SutantiranType Foundry.

194-A, Silversmith St.,
Colombo 12.

#### இளைஞர் பகுத்தறிவு மன்றம்

வவுனியா இளைஞர் பகுத்தறிவு மன்றத்தின் முதற் கூட்டம் சென்ற 24-3-57ல் வவுனியா குடியிருப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் தோழர் நா. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

மன்றத்தின் வளர்ச்சி பற்றி பட்டின சபைத் தலைவர் ச. சுப்பிரமணியம், வவுனியா தமிழரசுக் கிளையின் முன்னாள் செயலாளர் வை. சிற்றம்பலம், பொ. தி. சம்பந்தன், சோ. மணி, நா. சுப்பிரமணியம் இன்னும் பலரும் பேசினர். அதன் பின்னர் மன்றத்தின் நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

தோழர் நா. சுப்பிரமணியம் தலைவராகவும் சோ. மணி துணைத் தலைவராகவும் பொ. தி. சம்பந்தன் செயலாளராகவும், ஏ. இராசலிங்கம் பொருளாளராகவும், தோழர்கள்: வி. கைலாசபிள்ளை, க. கார்த்திகேசு, ச. சவுந்திரநாயகம், கே. கனகசபை, வ. இராமசாமி ஆகியோர் செயற்குழு உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

# தொழிற் கல்வி பயில தமிழர்க்கு மொழித் தடை

—:0:—

## நுண்கலைக் கல்லூரி படிப்படியாக சிங்கள மயமாக்கப்படும்

(சுதந்திரன் நிருபர்)

**1960-ம்** ஆண்டிற்குப் பின் அரசாங்க நுண்கலைக் கல்லூரி (Ceylon Technical College) தமிழ் பேசும் மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலை ஏற்படப்போகிறது. இலங்கை மாணவர்கள் நுண்கலை கற்பதற்கு உள்ள கல்லூரி இதுவொன்றுதான் என்பதும் அதுவும் வருங்காலத்தில் முற்றாக சிங்கள மாணவர்களுக்கே பயன்படப் போகிறதென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இக் கல்லூரியில் நடைபெற்று வரும் சகல கல்வித் துறைகளையும் படிப்படியாகச் சிங்கள மயமாக்கிவிட அரசாங்கம் அந்தரங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சுதந்திரனுக்கு நம்பத்தகுந்த ஒரு செய்தி கிடைத்திருக்கிறது.

இந்த மாற்றத்தின் காரணமாக அடுத்த ஆண்டிலிருந்து சிங்களம் தெரியாத மாணவர்கள் இக்கல்லூரி நடத்தும் பல வகுப்புகளில் இடம்பெற முடியாதவர்களாய்ப் போய்விடுவார்கள். இங்கு போதிக்கப்படும் நெசவுத் தொழில், மண்பாண்டத் தொழில், தச்சுத் தொழில், மோட்டார் யந்திரத் திருத்தத் தொழில், ரேடியோத் தொழில், அச்சுத் தொழில் யாவற்றிலும் எதிர்காலத்தில் சிங்கள இனத்தைச்சேர்ந்தவர்களே பயிற்சி பெற்றுப் பிழைக்க வேண்டும் என்பதும் தமிழ் பேசும் மக்கள் தொழில் வளமற்ற அடிமைகளாக மாறவேண்டும் என்பதுந்தான் அரசாங்கத்தின் அந்தரங்கத் திட்டமாகும்.

1960-ம் ஆண்டில் இக்கல்லூரியைச் சர்வ சிங்களமயக் கல்லூரியாக்கிவிட வேண்டும் என்று அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலீஸ் இலாகா மீது எம். ஈ. பிக்கு வளர்ந்து வரும் அவநம்பிக்கை?

## கட்டளை பிரதமருடையதானலும் பொலீஸாருக்கு மிகத் திட்டவட்டமாக அது முற்றிலும் எழுத்தில் வேண்டுமாம்!

## இதனல், உத்தேச ஆகஸ்ட் போராட்டம் நமது முதலமைச்சரின் அடிவயிற்றைப் பலமாகக் கலக்க ஆரம்பித்து விட்டது!!

இலங்கைப் பொலீஸ் படையிலும், பொலீஸ் உத்தியோகஸ்தரிடத்திலும், பொலீஸ் இலாகாவிலும் எம். ஈ. பி. அரசாங்கத்திற்கும், அதன் மந்திரிகளுக்கும் உள்ள அவநம்பிக்கை நாளிலும் பொழுதிலும் அதிகரித்து வருவதாக நம்பப்படுகிறது.

பொலீஸ் இலாகா மீது திரு. டபிள்யு. தஹநாயகா போன்ற மந்திரிகள் அவ்வப்போது தொடுக்கும் கண்டனக் கணைகள் பொலீஸ் மேலதிகாரிகளைப் புண்படுத்திவிட்டனவாம். இதன் காரணமாக அவர்கள் தங்கள் கடமைகளை ஏனோ தானே என்ற ரீதியில்தான் கவனித்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

### யூ. என். பி.க்கு பொலீஸ் ஆதரவு

இன்றும் பொலீஸ் இலாகாவிலே யு. என். பி.க்குத்தான் அதிக ஆதரவு இருந்து வருவதாகவும், பொலீஸ் இலாகாவைச் சேர்ந்த பல உயர்தர அதிகாரிகளும், வெளியூர் பொலீஸ் நிலையங்களுக்குப் பொறுப்பாய் இருக்கும் பல பொலீஸ் தலைவர்களும் இப்பொழுதும் அந்தரங்கமாக யு. என். பி. யுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும், யு.என்.பிக் கட்சிக்கும் அதைச் சார்ந்த பிரமுகர்களுக்கும் அநுசரணையாக இருந்து வருவதாகவும் எம். ஈ. பி. யினர் சந்தேகிக்கின்றனர்.

### மான் சுட்ட சம்பவம்

நேப்பாள மன்னன் மகேந்திரன் மான் சுட்ட சம்பவத்தை இரகசியமாகவும், அந்தரங்கமாகவும் வைத்திருக்கும்படி ஸ்தல ஸ்தாபன கலாச்சார மந்திரி திரு. ஜயவீர குருப்பு கட்டளையிட்டிருந்தும், பொலீஸ் இலாகாவைச் சேர்ந்த சிலர்தான் சகல செய்தியையும் உண்மை விபரங்களையும் யு. என். பி. வட்டாரத்தில் அவிழ்த்துவிட்டிருக்க வேண்டும் என்று பிரதமர் திரு. பண்டாரநாயகாவும் மற்றும் சில மந்திரிகளும் ஆத்திரமும் கவலையும் அடைந்துள்ளார்கள்.

### கல்வி மந்திரியின் நிருபணம்

பிரஸ்தாப மான்சுட்ட சம்பவம் குறித்து அரசாங்கத்தின் சார்பாக பொதுஜன மன்னிப்புக்கோரி அண்மையில் படிகமையில் ஒரு பொதுக்கூட்டத்தில் கல்வி மந்திரி திரு தகநாயகா பேசுகையில், உயர்தரப் பொலீஸ் அதிகாரிகள் இந்த அரசாங்கத்தைக் கவிழ்க்க உழைத்து வருகின்றனர் என்று தாம் அடிக்கடி சுட்டிக் காட்டியுள்ளதாகவும், மான் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் உயர்தர பொலீஸ் அதிகாரிகளைப்பற்றித் தாம்கூறிய கண்டனங்கள் நியாயமானவை என்பதை நிரூபித்துள்ளதென்றும் கூறியது இங்கு குறிப்பிடத்தக்கனவாகும்.

### ஆகஸ்ட் போராட்டம்

நாட்டில் நெருக்கடியான ஒரு கட்டம் வரும்போது பொலீஸ் படையினர் அரசாங்கத்துடன் விசுவாசமாக நடந்து கொள்வார்களா என்ற கலக்கம் பொதுவாக மந்திரி மண்டலத்தைச் சூழ்ந்திருக்கிறது. விசேஷமாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியார் ஆகஸ்ட் 20-ல் நேரடி நடவடிக்கையில் இறங்கி சத்தியாக்கிரகம், சட்ட மறுப்பு, ஒத்துழையாமை முதலிய பொதுஜன இயக்கங்களில் ஈடுபட்டு அரசாங்கத்திற்கு உபத்திரவம் தரக்கூடிய நெருக்கடியான நேரங்களில் பொலீஸ் இலாகாவும் பொலீஸ் படையும் சதி செய்து விட்டால் ஆட்சியை எப்படி நடத்துவதென்று இவர்கள் பலமாக ஆலோசித்து வருகின்றனர்.

### "தொண்டர் படை"யில் காடையர்கள்

அவசர காலங்களில் பொறுப் பேற்கக்கூடியதாக சகல சிங்களக் கிராமங்களிலும் அரசாங்க ஆதரவோடு கூடிய தொண்டர் படைகளை அமைக்க வேண்டும் என்றும், இனவெறியும் முரட்டுத்தனமும் உள்ள காடையர்களை அவற்றில் சேர்க்க வேண்டும் என்றும், வேண்டும் போது அரசாங்கம், அவர்களுக்குப் பொலீஸ் அதிகாரங்கள் வழங்கக் கூடியதாக சட்டங்கள் செய்யப்பட வேண்டும் என்றும் காத்திரமான அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளனவாம். இந்த அபிப்பிராயங்களைப் பிரதமர் ஏற்றுக் கொண்டார் என்றும், விரைவில் இத்தகைய "காடையர்கள் தொண்டர் படைகள்" அங்குரார்ப்பணம் செய்யப்படலாம் என்றும் தெரிய வருகிறது. இந்தப் படைகளில் கூடியவரை பிற சமயத்தவர்களைத் தவிர்த்து (அதாவது கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த சிங்களவர்களைத் தவிர்த்து) பெரும்பாலும் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவர்களையே திரட்ட வேண்டும் என்றும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

### முஸ்லிம்களுக்கு மாயவலை

தமிழ்ப் பேசும் மக்கள் வாழும் கிராமங்களில் இத்தகைய "கூலிப் படை"யில் சேர தமிழர்கள் முன்வரார்களாதலால் முஸ்லிம்களைப் பயன் படுத்த வேண்டும் என்றும் தற்காலிகமாக முடிவு செய்யப்பட்டுள்ளதாம். இந்த முடிவு அரசாங்கத்தின் வாலில் பிடித்துக் கொண்டு தொங்கும் முஸ்லிம் தலைவர்களைக் கலந்தாலோசித்த பின்பு தான் ஊர்ஜிதம் செய்யப்படுமாம்.

### பிரதமரின் சீற்றமும் சினமும்

சிங்கள 'சிறீ' எதிர்ப்பாளர் சம்பந்தமாக தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள பொலிஸார் நடந்துகொண்டவிதம் பிரதமர் திரு. பண்டாரநாயகாவிற்கு எரிச்சலையும் கோபத்தையும் உண்டாக்கியிருக்கிறது. அண்மையில் அவர் கூட்டிய ஒரு பொலீஸ் அந்தரங்க மகாநாட்டில் அவர் சீறிச் சினந்து நடந்து கொண்ட மாதிரி இந்த உண்மையை அம்பலப்படுத்துவதாயிருந்தது. ஆனல் பொலீஸ் அதிகாரிகள் அவருடைய மிரட்டலுக்கும் உருட்டலுக்கும் ... கொடுக்காமல் அவரை இக்... முக்காடச் செய்தனராம்.

## "சிறீ" எதிர்ப்பு மகாநாட்டில் பிரதமரின் சீற்றமும் சினமும்

சமீபத்தில், சிறீ எதிர்ப்பு சம்பந்தமாக பிரதமர் திரு. பண்டாரநாயகா பொலீஸ் உயர்தர அதிகாரிகளைக் கொண்ட ஒரு அந்தரங்க மகாநாட்டைக் கூட்டினர். இம்மகாநாட்டில் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலும், ஐந்துடிபியூட்டிகளும் பங்குபற்றினராம். அப்போது 'சிறீ' எதிர்ப்பாளர்மீது நடவடிக்கை எடுப்பதற்கும் பொறுப்பாளராயிருந்த டிபியூட்டிக்கும் பிரதமருக்குமிடையே காரசாரமான கேள்வி பதில்கள் பரிமாறப்பட்டதாகத் தெரிய வருகிறது. அங்கு நடந்த பேச்சுவார்த்தைகளின் சாரத்தைச் சம்பாஷணை ரூபத்திலேயே இங்கு தருகிறேம்:

**சுதந்திரன் ஒற்றர் குழு உறுப்பினர்**

பிரதமர்: 'சிறீ' எதிர்ப்பாளரான தமிழரசுக் கட்சியார்மீது நடவடிக்கை எடுக்கச் சொன்னல், எவ்வளவு முட்டாள்தனமாக நடந்துகொண்டிருக்கிறீர்? கொஞ்சம் கூடப் புத்தியில்லை! வன்னியசிங்கத்தையும், அமிர்தலிங்கத்தையும் மற்றும் தலைவர்களையும் மறித்துக் குறிப்பெடுப்பானேன்? சிறீயை எதிர்க்கும் சாதாரண பேர்வழிகள் மீதல்லவோ நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று நான் கருதினேன். சாதாரணமான இரண்டொருவர்மீது நடவடிக்கைஎடுத்திருந்தால் மற்றவர்கள் எல்லோரும் பயந்து கொண்டு அடங்கிப் போயிருக்கமாட்டார்களா? நீர் என்னடா என்றல் தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி நிர்வாகம் நடத்தியிருக்கிறீர். இந்த புத்தியற்ற செயலினல் எல்லாவற்றையும் குழப்பியடித்துப் பாழாக்கிவிட்டீரே.

டிபியூட்டிகளில் ஒருவர்: நான் என்ன ஐயா செய்வது? ஒவ்வொரு பிரிவிலும் பரீட்சார்த்தமாகப் பத்துப் பேர்மீது மட்டும் நடவடிக்கை எடுக்கும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டது. எல்லோர்மீதும் நடவடிக்கை எடுக்கும்படிச் சொல்லியிருந்தால் வந்தவர், போனவர், காத்தான், கறுப்பன் எல்லார் மீதும் நடவடிக்கை எடுத்திருப்போம். 10 பேர் என்றதும், பிரதானமானவர்கள் பத்துப் பேர்மீது தான் நடவடிக்கை எடுக்கச்சொல்லப் பட்டிருப்பதாக நான் விளங்கிக் கொண்டேன். அப்படித் ... புப் பகுதியிலுள்ள அதிகாரிகளும் விளங்கிக் கொண்டார்கள்போல் தெரிகிறது. இதில் தவறு என்னுடையதுமல்ல, அவர்களுடையதுமல்ல.

பிரதமர்: (கோபத்தோடு சிறிக்கொண்டு) இப்போது என்ன செய்வது? தலைவர்கள் மீதல்லவா நடவடிக்கை எடுத்துத் தொலைத்திருக்கிறீர். அவர்கள்மீது வழக்குத் தாக்கல்செய்தால் யாழ்ப்பாணத்தில் வீண் கிளர்ச்சிகள் எல்லாம் ஏற்படும். மேலும்அவர்கள்எதிர்த்து வழக்காடலாம். அப்படி ஆடினல் சட்டத்தில் ஓட்டை யிருக்கிறதென்பது உமக்குத்தெரியாதா? வழக்காடாமல் அவர்கள் தண்டனையை ஏற்றல் தமிழ்மக்கள் கண்ணில் அவர்கள் வெற்றிவீரர்களாகவும் தியாகிகளாகவும் ஆகிவிடுவார்கள். இந்த நிலை ஏற்படவிடலாமா?

டிபியூட்டி: அப்படியானல் நான் என்ன ஐயா செய்யட்டும்? என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?

பிரதமர்: சொல்வதற்கு என்ன இருக்கிறது? தலைவர்களை விட்டு விட்டு வேறு சாதாரணப் பேர்வழிகள் நாலுபேர் மீது வழக்குத் தாக்கல் செய்யுங்கள்.

டிபியூட்டி: அதெப்படி முடியும் ஐயா. பொதுமக்கள் பொலிஸாரைப் பற்றி என்ன நினைப்பார்கள்? என்ன சொல்லுவார்கள்? ஏற்கனவே தலைவர்களை மறித்து மோட்டார்களை படம் பிடித்து, அவர்கள் பெயர் விவரங்கள், லைசென்ஸ், இன்சூரன்ஸ் விபரங்கள் ஆகியவற்றையெல்லாம் குறித்துக் கொண்டதைப் பொது மக்கள் அறிவார்கள். அவர்கள் மீது வழக்குத் தொடராமல், அவர்களை விட்டுவிட்டு, வேறு சாதாரணப் பேர்வழிகள் மீது மட்டும் வழக்குத் தொடர்ந்தால் பொலீஸார் தலைகாட்ட முடியுமா? நான் சொல்லுகிறேன் என்று தாங்கள் குறை எண்ணக் கூடாது. என்னை மன்னிக்க வேண்டும். இப்போதே பொலீஸார் மீது புகார்கள் சதா பொழிந்துகொண்டிருக்கின்றன. போதாக் குறைக்கு மந்திரிமாரும் எங்களைப்பகிரங்கமாகப்புடாத பாடுபடுத்தி வருகிறார்கள். இந்த நிலையில் தாங்கள் சொல்லுகிறபடி நாங்கள் நடந்துகொண்டால் தமிழ் பிரதேசங்களில் பொலீஸ் இலாகா இழிவுக்கும் ஏளனத்திற்கும் இலக்காகிவிடும். இதைச் சொல்ல வேண்டியது எங்கள் கடமை. இதற்கு மேலும் தாங்கள் எங்களை வற்புறுத்தினல் தங்கள் கட்டளையை எழுத்தில் தாருங்கள் நாங்கள் செய்து முடிக்கிறேம்.

(11-ம் பக்கம் பார்க்க)

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

சிறந்த அழகு ★ ஒரிய வேலைப்பாடு

இலங்கையின் மிக மிகப் பெரிய நகை வியாபாரிகள்

போன்: 161.



தந்தி: "ஜுவல்லர்ஸ்"

யாவும் அமைந்த தங்க நகைகளுக்கு

யாழ்ப்பாணம்

உயரிய கலைத்திறன் ★ உத்தரவாதம்

தங்கமாளிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "குறுக்கு வழியால் காங்கிரஸ் வெற்றி கண்டது!

## கழகத்தின் வளர்ச்சியையும், அளப்பரிய ஆற்றலையும் தேர்தல் விளக்கியுள்ளது

## மக்கள் ஆதரவும், வசவாளர் வாழ்த்தும், பத்திரிகைப் பாராட்டும் குறித்து மிக்க மகிழ்கிறேம்"

### தேர்தல் பற்றி தி. மு. க. பொதுச் செயலாளர் திரு. இரா நெடுஞ்செழியன் அறிக்கை

பொதுவாக இந்தியத் துணைக் கண்டத்தில்—குறிப்பாகத் தமிழகத்தில் பொதுத் தேர்தல் நடைபெற்று முடிந்துவிட்டது. இந்தத் தேர்தலில் ஈடுபட்ட பல்வேறு கட்சிகளும், பொதுமக்களும் தேர்தலின் விளைவால் ஏற்பட்டுள்ள தெளிவான நிலைமைகளை ஆராய்ச்சி செய்வதில் இப்பொழுது இறங்கியிருக்கிறார்கள்.

திராவிடமுன்னேற்றக் கழகத்தவராகிய நாமும் தேர்தலின்விளைவுகளை ஆராய்ந்து பார்க்க வேண்டிய இன்றியமையாத கட்டத்துக்கு வந்துள்ளோம்.

**கழக வளர்ச்சியும் தகுதியும்**

இன்றைய சூழ்நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் உண்மையும் உறுதியும் அறிவும் ஆற்றலும், தகுதியும் திறமையும் பெற்ற எதிர்க்கட்சியாக இயங்கக் கூடியதாகும் என்பதை இந்தத் தேர்தல் நாடறியச் செய்துவிட்டது.

காங்கிரசுக்கு அடுத்தபடியாக வலிவுள்ள—தமிழகமெங்கும் விரிவாகப் பரவியுள்ள பெருங் கட்சியாக வளர்ந்திருப்பது திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை அரசியல் தலைவர்களும் பத்திரிகையாளர்களும் பொதுமக்களும் சுட்டிக்காட்டி வருவது நமக்கெல்லாம் பூரிப்பையும் பெரு மதிப்பையும் தருவதாகும்.

**உண்மை நிலை**

நாம் இந்தத் தேர்தலில் 16,28,598 வாக்குகளைப் பெற்றிருக்கிறோம். ஆதிக்க பலமும், அதிகார பலமும், பண பலமும், தீய படை பலமும் பெருவாரியாகக் கொண்ட காங்கிரஸ் 201 இடங்களில் போட்டியிட்டு 50,40,587 வாக்குகளைப் பெற்றிருக்கிறது.

ஆனல், நாம் 15 இடங்களைப் பெற்றிருக்கிறோம்—காங்கிரஸ் 151 இடங்களைப் பெற்றிருக்கிறது. நம்மை விட இரண்டு பங்கு மட்டுமே அதிக வாக்குகளைப் பெற்ற காங்கிரஸ், ஒன்பது பங்கு அதிகமான இடங்களைப் பெற்றிருக்கிறது. இதற்குக் காரணம், திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்கள் பல இடங்களில் கணிசமான வாக்குகளைப் பெற்றிருந்தும், குறைந்த அளவு எண்ணிக்கை வித்தியாசத்தில் தோல்வியடையும் நிலை ஏற்பட்டதுதான். பெரும்பான்மையான திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்களுக்குப் போதுமானஇன்றியமையாத அடிப்படை வசதிகள் அறவே இல்லாமையே, இந்நெருக்கடியான நிலை ஏற்பட்டதென்பதை உண்மை நிலையைஆராய்ந்து பார்ப்போர் எளிதில் உணரலாம்.

**காங்கிரஸின் குறுக்குவழி**

இந்தப் பொதுத் தேர்தலில் காங்கிரஸ், ஆட்சி பீடத்தில் அமர்ந்துகொண்டு அரசாங்கத்தையும், சலுகைகளையும், வசதிகளையும் தனக்கு முழுக்க முழுக்க சாதகமாக்கிக்கொண்டதோடு, நாடெங்கிலும் கோடிக்கணக்கான ரூபாய்களையும் பக்க பலமாக்கி, வெற்றிகாண குறுக்கு வழிகளையும் அமைத்துக்கொண்டதென்பதை நாட்டினர் எல்லோரும் நன்கு அறிவார்கள்.

**தி. மு. க.வுக்கு இருந்த இடைஞ்சல்கள்**

காங்கிரஸ் ஆதிக்கமும் ஜனநாயகமற்ற போக்கும் நமக்குத் தொல்லை கொடுக்காமல் தடுத்து நிறுத்தவே சில தொகுதிகளில், கழகம் தனது அபேட்சகர்களை நிறுத்திற்று. வேறு சில இடங்களில் கழகத்தின் சக்தி சிதருமல் காப்பாற்றப்படவும், கழகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு உறுதுணையாய்இருக்கவேண்டுமென்று கருதியும் கழக அபேட்சகர்கள் நிறுத்தப்பட்டார்கள். நாம் எதிர்பார்த்த இடங்கள் சிலவற்றில் வெற்றி கிட்டாமற் போனதற்கு நிதி வசதியின்மையே முக்கிய காரணமாகும்.

தேர்தலுக்கு முன்னல் நாம் முடிவு செய்தபடி ஐந்து இலட்சம் ரூபாய் திரட்டுவதற்கான வழிவகைகள் நிறைவேற்றியிருக்குமானல், மேற்கண்ட குறைபாடுகளை எளிதில் தவிர்த்திருக்க முடியும்.

நமது கழகத்திற்கென தனிச் சின்னம் கிடைக்கப் பெருததும் சில தொகுதிகளில்தொல்லைகளுக்குக் காரணமாயிருந்திருக்கிறது.

**தீய சக்திகளுக்கு காங்கிரஸின் பாதுகாப்பு**

கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு பணியாற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நம்மைப்போன்றவர்களுக்கு நீதி வழங்கவேண்டிய தேர்தல் சட்டம், நாணயமற்ற—நேர்மையற்ற—தீய சக்திகளின் அக்கிரமங்களைத் தடுத்து நிறுத்த சக்தியற்றதாயும், இன்னும் சொல்லப்போனல் அத்தீயச் சக்திகளுக்குப் பாதுகாப்பாயும் அமைந்திருப்பது கண்டு மிகவும் வருந்தவேண்டியிருக்கிறது.

நமது நாட்டிலே தேர்தல் என்பது மிக்க செலவினம் பயக்கக்கூடிய ஒன்ருகவும், நாணய மாணவர்கள்—நேர்மையானவர்கள்—ஏழைகள் துணிந்து அணுக முடியாத ஒன்ருகவும் அமைந்திருப்பதும் வருந்தத் தக்கதாகும். இரட்டை உறுப்பினர் தொகுதிகளில் பெரும்பான்மையான வரக்குகள்செல்லுபடியாகாமற் போகுந் தன்மையிலும் தேர்தல் முறை அமைந்திருக்கிறது. இந்தக் குறைபாடுகளை நீக்காமற் போனது மிக வருந்தத்தக்கதாகும்.

இவை மட்டுமல்லாமல், மற்ற அரசியல்கட்சிகள் எல்லாம் தனித்தனியாகவும், கூட்டாகச் சேர்ந்துகொண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தை முழுமூச்சுடன் எதிர்த்திருக்கின்றன.

**திரு அண்ணாத்துரை தி. மு. க. சட்ட சபை கோஷ்டி தலைவர்**

சென்னை சட்ட சபையில் திராவிட முன்னேற்றக் கழகக் கோஷ்டியினர் தலைவராகத் திரு. சி. என் அண்ணாத்துரை தெரிவு செய்யப்பட்டார்.

உபதலைவராகத் திரு. அன்பழகனும் பிரதம கொறடாவாகத் திரு. மு. கருணாநிதியும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

திருவாளர்கள் எம். பி. சுப்பிரமணியமும் ஏ. கோவிந்தசாமியும் செயலாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

**நல்ல நிலைமை உருவாகியுள்ளது**

இத்தேர்தலில் நாம் பெற்றுள்ள புதிய அனுபவமும் ஆர்வமும், மேலும் பல இடங்களில் புதிய கிளைகள் தழைக்கவும், கழகக் கொள்கையைப் பரப்பவும், எதிர்கால வெற்றிக்கு ஆக்கந் தேடவும் ஆன நிலை உருவாகியிருப்பதைக் கண்டு நாம் பெரிதும் பூரிப்படைகிறோம்.

வடநாடு—தென்னுடு பற்றிய ஏற்றத்தாழ்வு பிரச்னைகளையும், இந்திய அரசியலார் இழைத்துவரும் அநீதி

(9-ம் பக்கம் பார்க்க)

# சிங்களக் குடியேற்ற அம்பு கிழக்கைத் தாண்டி வடக்கை நோக்கி விரைகின்றது

## ஒற்றுமை, ஒத்துழைப்பு ஏக இலங்கை கோரும் 'தலைவர்களு'க்கு புரியவில்லையா இது?

## தமிழுக்கு சம அந்தஸ்து மட்டுந்தானு தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்னை?

**செ. குமாரசாமி**

[சென்றவாரத் தொடர்ச்சி]

இங்கள அரசாங்கம் தேர்ந்தெடுத்த அடுத்த கேந்திரஸ்தானம் புல்மோடல். உலக முக்கியத்துவம் பெற்றுவிட்ட கொள்ளை விலை பெறும் அணுசக்தி உலோகங்கள் அபரிமிதமாகக் கிடைக்கும் தமிழ்ப் பிரதேசமாகிய புல்மோடல் திருகோணமலைக்கு வடக்கே இருக்கிறது. போக்குவரத்துக்குள்ள ஒரேயொரு ரோட்டும் தமிழ்ப் பிரதேசமாகிய திருமலைக்கூடாகத்தான் செல்லுகிறது. இந்த நிலையில் அணுசக்தி மணற்சாலைகளில் வேலை செய்வதற்குத் தமிழ் தொழிலாளிகள் போக வேண்டி வருவதைத் தடுக்கவும் சிங்களத் தொழிலாளிகளையும் செல்வாக்கையும் தமிழ்ப் பிரதேசத்தில் தொடர்ந்து விஸ்தரிப்பதற்கு உதவியாகவும் அரசாங்கம் சிங்களப் பிரதேசமாகிவிட்ட பதவியாக்கரையிலிருந்து புல்மோட்டலுக்கு நேர் ரோட்டுப் போடுகிறது.

**கோட்டை சரிந்து விடும்**

திருமலைக்கு வடக்கே புல்மோடல், மேற்கே பதவியா, தென்மேற்கில் கந்தளாய், தெற்கே அல்லைக் குடியேற்றம் தொடர்ந்து சில மாதங்களில் இந் நாலு பிரதேசங்களிலும் இன்னும் சில சிங்களக் குடும்பங்கள் குடியேறிவிட்டால் இன்று திருகோணமலையிலுள்ள சுவாமிமலைக்குக் கிடைக்கும் அரோகரா தமிழ் பேசும் மக்களுக்குத்தான் கிடைக்கும். இப்படிச் சிங்களப் பிரதேசங்களினுல் சுற்றிவளைக்கப்பட்டதும் நேர்த் தாக்குதல் எதுவும் தேவையின்றியே திருமலைக் கோட்டை சரிந்து விடும். ஆனல் இந்த நிச்சயமான—ஆனல் ஆமை வேக—வெற்றியைக்கொண்டு சிங்கள வெறி அடங்குவதாகக் காணும்! காணி மந்திரியின் அலுவலகத்திலிருந்து தந்தி மூலம் கட்டளைகள் பறந்துகொண்டிருக்கின்றன, திருமலை மாகாண அதிபருக்கு. தந்தி வேகத்தில் நடைபெற்று வரும் இக்குடியேற்றம்பற்றிய செய்திகளைக் கடந்த வாரம் கவனித்திருக்கலாம்.

**வெறும் பூச்சாண்டியா?**

ஐ. தே. க. அரசாங்கத்தின்கீழ் பிரசித்தமற்ற முறையில் இன்றுவரை நடந்து வந்த சிங்களக் குடியேற்றம் இப்பொழுது எம். ஈ. பி. அரசாங்கத்தால் பகிரங்கமாகத் துணிகரமாக நடைபெறுகிறது. திருமலை மட்டக்களப்பு நகர சபை எல்லைகளுக்குள்ளேயே இக்குடியேற்றம் நடைபெறுவது பற்றித் திருமலை நகர சபைத் தலைவர் சென்ற வாரம் வயிற்றிலடித்துக் கொண்டதை யாரும் மறந்திருக்கமாட்டார்கள். தெற்கே பொத்துவில் கல்லோயாவிலிருந்து காரியப்பரின் கல்முனைக்கூடாக மட்டக்களப்பு நகர சபை எல்லைக்குள் நுழைந்து, இதன் வடக்கே கந்தளாய் அல்லைப் பிரதேசங்களைத் தாண்டி,

(9-ம் பக்கம் பார்க்க)


**விற்பனைக்கு**

6 பரப்பு நிலம் (60 Perches)—யாழ்ப்பாணம் கடற்கரைத் தெருவில் - நேர்த்தியான இடத்தில். விண்ணப்பிக்கவும்:

விளம்பரதாரர்:
C/o தபால் பெட்டி 1183,
கொழும்பு.

**கமலா பீடி**

பீடி இலை, பீடிப் புகையிலை, இன்னும் பீடிக்குத் தேவையான சாமான்களும் எங்களிடம் சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு: V. P. P. ஆடர்கள் அவசியம் கவனிக்கப்படும்.

ஒருமுறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்.

போன்: 3597 6522
**கமலா ஸ்ரோர்ஸ்,**
நிர். 15, செட்டியார் தெரு,
கொழும்பு—11.
தந்தி: "தாமரை"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மை "காணுத" பிக்குவுக்கு சிசுருஷை செய்ய முன் வந்தவர் யார்?

:o:

## தொண்டுக்காகவே வாழும் கிறிஸ்தவ சகோதரியா, அன்றிக் கடமைமறந்த கங்காணியா?

:o:

## 250 வருடங்களுக்கு முன் கண்டியில் கோரத் தாண்டவமாடிய அம்மையை அகற்றியவரும் 'வாஸ்' பாதிரியாரே!

### உயிரைப் பணயம் வைத்து நமக்கு உதவ வந்த தியாகச் 'சுடர்'களையா துரத்துவது?

இலங்கையில் நோய்வாய்ப்பட்டு உழலும் மக்களுக்கு இன்றியமையாத சிசுருஷை செய்யும் மேலான தொண்டை முறைப்படி மேற்கொண்டிருப்பவர்களும் அதனுல் தங்களைத் தாங்களே இம்மைக்குள்ளாக்கிக் கொண்டுள்ளவர்களும் மேனாட்டிலிருந்து மனித சேவைக் கென்றே இங்கு வந்துள்ள கிறிஸ்தவ தாதிமாரும், சகோதரிகளும், தாய்மாருமாவர்.

அவர்களின் சேவை அநேகமாக நாடு பூராவிலுமுள்ள எல்லா வைத்திய நிலையங்களிலும் விசேஷமாக குஷ்ட ரோக நிலையம் க்ஷயரோக நிலையம் போன்ற இடங்களிலும் வியாபித்திருக்கிறது. அதனுல் பயனடைந்து அது காரணமாக அவர்களைப் பாராட்டாத நோயாளர்களில்லை.

இத்தகைய சேவையாளர்களுக் கெதிரான ஒரு இயக்கம் சிங்களவர்களுள் ஒரு சாராருக்கிடையே உருவாகி வளர்ந்து வருகிறது. இது எவ்வளவு வருந்தத் தக்கது என்பதையும் இதன் மதியீனத்தையும் இக் கட்டுரை விளக்குகிறது. —ஆசிரியர்

திருடன் பாதுகாப்புக்காகப் பொலீஸ் ஸ்டேஷனுக்குள் ஓடி ஒளிந்துகொண்டதுபோலக் கொடிய அம்மை நோய், போயும் போயும் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் போய்ப் புகுந்துகொண்டது.

காலடிக்கு வந்த திருடனைக் கைது செய்து பாடம் கற்பிக்கப் பொலீஸாருக்குத் திராணி உண்டோ என்னவோ, நமது பெரியாஸ்பத்திரி பெரிய சிறிய வைத்திய சேவையாளருக்கு உள்ளே புகுந்துகொண்ட அம்மையை அணுகவோ, அடிமைப்படுத்தவோ, அகற்றவோ துளியும் துணிவில்லை என்பதைப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

### உள்ளிருந்த பூதம் வெளியே

பெரியாஸ்பத்திரியில் 26ம் நம்பர் வார்ட்டுக்கு ருகம வார்ட்டு என்று பெயர். இங்குள்ள நோயாளர்களில் 6 பேருக்கு அம்மை கண்டிருப்பதாக வைத்திய அதிகாரிகளுக்குத் தெரிய வந்தது. தெரிந்துமென்ன? அதிவிரைவிலேயே ஆறு பேரில் மூவர் மரணமடைந்தார்கள். விஷயமறிந்து, வார்ட்டிலிருந்து இருவர் கள்ளத்தனமாகக் கம்பிநீட்டிவிட்டார்கள்.

இதுபற்றி, ஆஸ்பத்திரிக்குள்ளிருந்த பூதம் வெளியிலும் வந்துவிட்டதே என்று பொதுவாகப் பொதுமக்கள் கவலைப்படலாம். ஆஸ்பத்திரிச் சிப்பந்திகள் விஷயத்தில் நிலைமை வேருகவே இருக்க முடியும். "அப்பாடா, ஓரளவுக்குப் பீடைதொலைந்தது" என்று அவர்கள் ஆறுதலும் தேறுதலும் அடையலாம். இது அவர்களின் சேவையின் இலட்சணம்!

### உரியவர்கள் பயந்தால்...?

அப்படியில்லாவிட்டால் இந்த விசித்திரம் நடக்க முடியுமா? வைத்திய சேவைக்கென்றே வந்தவர்கள்—அதற்கு ஊதியம் பெறுபவர்கள், வியாதிக்காரனுக்கு அருகில் போகவோ, அவனுக்கு சிசுருஷை செய்யவோ பயந்து நடுங்கிப் பின்வாங்குவதென்றால் நோயை அகற்றுவதெப்படி? மக்களைப் பாதுகாப்பதுதானெப்படி?

### நம்மவர் மறுத்ததை அந்நியர் செய்தார்

பெரியாஸ்பத்திரியில் அம்மை கண்டவர்களுள் புத்த பிக்குவும் ஒருவர். அவருக்கு அருகில் சென்று அன்னருக்கு சிசுருஷை செய்யக் கங்காணிமார்கள் அடியோடு மறுத்துவிட்டனர். கங்காணிமார்களில் பெரும்பாலானேர் சிங்களவர். அவர்களின் பயமெல்லாம் தங்களுக்கும் அம்மை தொற்றிவிட்டாலோ! என்பதுதான்.

இந்த நிலையில், பிரஸ்தாப பௌத்த பிக்குவுக்குச் சிசுருஷை செய்ய மனமுவந்து, சேவையுணர்ச்சியால் உந்தப்பட்டு முன்வந்தவர் ஒரு கிறிஸ்தவ சகோதரியார் ஆவர். மேல்நாட்டிலிருந்து சேவைக்கென்றே இங்கு வந்த அவர் இங்குள்ளவர்கள் தம்மவருக்குச் செய்ய மறுத்த தொண்டைச் சிரத்தையோடு செய்தார்.

★

சுமார் 250 வருஷங்களுக்கு முன்னர்—1697ம் ஆண்டு! விமலதர்மசூரியா என்ற சிங்கள மன்னனின் ஆட்சி இலங்கையில் நிலவிய காலம்! கண்டியில் கொடிய தொற்று நோய் பரவியது.

### அம்மையின் கோரம்

அதைத் தடுக்க அந்நாளில் யாருக்கும் வழி தெரியாது. நோய்வாய்ப்பட்டவர்கள் ஆயிரக் கணக்கில் இறந்துபட்டார்கள்! வீதிகளிலே—வீடுகளிலே, ஏரிகளிலே—குளங்களிலே, காடுகளிலே—கரம்பைகளிலே எங்கும் பிணக்குவியல்கள்! மூக்கைத் திருப்பிய பக்கமெல்லாம் தைப்பது பிணவாடை! கோலத்தைக் கண்டவர்கள் கலங்கினர்; நாற்றத்தை முகர்ந்தவர்கள் வாந்தி எடுத்தனர்!

வகையறிந்த சிலர் மாள்பவரை மாளவிட்டுத் தாம் மீள எண்ணி பல மைல் தூரத்துக்கப்பால் காடுகளிலே போய்க் கரைந்துறைந்தனர். மன்னன் விமலதர்மசூரியா கூட நோயின் கோரம் கண்டு கலங்கி, உயிர் சோரம்போய் விடுமே என்று அஞ்சி, ஓடி ஒளிந்துகொண்டான்.

### ஜோசப் வாஸ் பாதிரியார்

இந்த நிலையில் ஜோசப் வாஸ் என்ற ரோமன் கத்தோலிக்க பாதிரியார் ஒருவரும் அவருடைய மருகரான கார்வாலோ என்பவரும் தமது உயிரைப் பணயம் வைத்து நோய்வாய்ப்பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்தார்கள். நோயாளர்களைத் தொட்டுக் கழுவினுர்கள்; துடைத்தார்கள், மற்றும் வேண்டிய விலக்கு வழிகளைச் செய்தார்கள். இச்செய்தி ஒளிந்துகொண்டிருந்த மன்னன் காதுகளுக்கும் எட்டியது. பாதிரியாரின் சேவையால் நிலைமை சீர்பெறுவதாகவும் செய்தி கிடைத்தது அவனுக்கு. மனதாரப் பாதிரியாரை வாழ்த்திஞன். வாஸ் பாதிரியாரின் சலியாத உழைப்பாலும், காலநிலை காரணமாகவும் நோயின் கோரம் படிப்படியாகக் குறைந்து இறுதியில், இருந்த இடம் தெரியாமல் மறைந்தது.

### மன்னன் பாராட்டிஞன்

மன்னன் அரண்மனைக்குத் திரும்பிஞன். வாஸ் பாதிரியாரின் தன்னலமற்ற சேவையை வியந்து பாராட்டிஞன். தனது மணிமகுடத்தையே வாஸ் பாதிரியார் காப்பாற்றிஞர் என்று கருதி அன்னுரைப் புகழ்ந்தான். வாஸ் பாதிரியாரைப் போன்ற பல கிறிஸ்தவ பாதிரிமார் தனது இராச்சியத்தில் என்றென்றைக்கும் இருக்க வேண்டுமென்ற தனது விருப்பத்தை வாய்விட்டுச் சொன்ஞன். இவற்றை இலங்கைச் சரித்திரம் சொல்லுகிறது.

★

இன்று என்ன நடக்கிறது நாட்டிலே? விமலதர்மன் பரம்பரையினரின் ஆட்சி நிலவுகிறது. ஆபத்துக்குதவுபவர்கள் சேவைக்கே தங்களை அர்ப்பணித்த தியாகசீலர்கள்-மேல்நாட்டுப் பாதிரிமார் என்றும் அவர்கள் என்றென்றைக்கும் இங்கிருந்து தொண்டாற்ற வேண்டுமென்று அவன் செப்பியதையும் மண்ணேடு மூடி மறைத்துவிட்டு, இனவெறியால் பகுத்தறிவை இழந்து, போலித்தேசியவாதம் பேசி, அன்னவரை ஏசிப் புண்படுத்தி, இங்கிருந்து வெளியேற்றிவிட விடாப்பிடியாக நிற்கிருர்கள் இவர்கள்.

### தொழு நோய்

தொழு நோய், அதாவது குஷ்டரோகம் இருக்கிறதே, இது அம்மையின் அண்ணனை நோய். தொழு நோயால் அழுந்துபவர்களை பார்க்கவே யாருக்கும் சகிக்காது. உலகத்தின் விகாரமத்தனையையும் தொழு நோய் பிடித்தவனின் உருவத்தில் காணலாம். உடம்பு முழுவதும் புற்றெடுத்து அவற்றிலிருந்து சீழ் ஊற்றெடுத்த வண்ணம் இருக்கும். கிட்டப் போனல் ஒருநாள் நாற்றம் நாலு நாளைக்கு நினைவிலிருந்து நெஞ்சையழுத்தும்—வாந்தி வாந்தியாக வாரியிறைக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக இது அம்மை க்ஷயரோகம் நெருப்புக் காய்ச்சல் போன்றவற்றைக் காட்டிலும் பயங்கரமானதோர் தொற்று நோய்.


### இங்கும் அவர்களே

இதைப் பெற்ற துர்ப்பாக்கியசாலிகளுக்கும்கூட நமது நாட்டிலே உள்ள ஆஸ்பத்திரிகளில் சிசுருஷையும் சிகிச்சையும் செய்பவர்கள் நம்மவர்களல்ல. நம்மேல் அன்புகூர்ந்து அங்கிருந்து இங்கு வந்திருக்கும் கிறிஸ்தவ தாதிமாரும், சகோதரிகளும், தாய்மாருமேயாவர். நாம் கிட்ட நெருங்கவோ, கண்ணுல் பார்க்கவோ, கையால் தொடவே நடுங்கி ஒதுங்கிக்கொள்ளுமளவு பயங்கரமான நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள நம்மவர்களுக்குத் தம் அப்பழுக்கற்ற சேவையுணர்ச்சியின் பெயரால், தியாகப் பண்பின் பெயரால், தெய்வத்தின் அசைக்க முடியாத நம்பிக்கையின் பெயரால், மனித குலத்தின் மாண்புமிக்க ஜீவகாருண்யத்தின் பெயரால் மலர்ந்த முகத்தோடு, மட்டற்ற மகிழ்ச்சியோடு, தமது உடலிலே தெம்புள்ளவரை நாடெங்கிலுமுள்ள பல்வேறு ஆஸ்பத்திரிகளிலும்

(8-ம் பக்கம் பார்க்க)


## உத்தரவாதமான உபயோகத்திற்கு

# 'எக்கோ' வானெலிப் பெட்டிகள்



**மொடல் B. 241**

டிரை-பட்டரி-வானெலிப் பெட்டி மிகவும் சிறந்தது. அதற்கு இணையான வானெலிப் பெட்டிகளே கிடையாது. அதிதீவிர உணர்ச்சி உடையது. புதிதாக இதில் அமைக்கப்பட்ட குறைவான மின்சாரம் உபயோகிக்கும் வால்வ்கள் பாட்டரியின் ஆயுளை நீடிக்கச்செய்கின்றன.

பிரசித்தி பெற்றதும் திறமையுடையதுமான பலவித விதமான 'எக்கோ' வானெலிப் பெட்டிகளேயும், ரேடியோக் கிறும்களேயும் இன்றே பார்க்க வாருங்கள். உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்யக் கூடிய வானெலிப்பெட்டி 'எக்கோ'தான்.

'எக்கோ' வானெலிப் பெட்டிகளை நீங்கள் நம்பி இருக்கலாம்.

# அக்மி டிரேடிங் கம்பெனி லிமிட்டெட்,

பூந்தோட்ட வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தென்றல் திரு. வி. க. வின் ஈழத்து ஆசான்

## சைவமும் தமிழும் தழைக்க சளைக்காதுழைத்த பெரியார்

## அறிஞருலகின் முன்னோடி, விருதுகள் பல பெற்ற வீரர், தசாவதானி கதிரவேற்பிள்ளை

தெள்ளுற்ற தமிழமுதின் தீஞ்சுவையையும் மேன்மைகொள் சைவநீதியின் மேற்சிறப்பையும் உலகம் அறியும். இவை கால நீரோட்டத்தில் கரைந்து போகாது. சாலச் சிறந்த முறையில் சலியாத உழைப்பினால் கட்டிக்காத்த உத்தமர்கள் இருந்து வந்திருக்கிறார்கள் என்பது ஈழம் கண்ட வரலாற்று உண்மை. இந்நாட்டிலன்றி எந்நாட்டிலும் ஏறுபோல் வீறுகொண்டு ஏற்றம்பெற்ற எம்மவர்கள் பலர். இந்தியா சென்று இறவாப்புகழ் ஈட்டியவர்களுள் யாழ்ப்பாணத்து மேலைப் புலோலி சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் ஒருவர்.

### சைவ சித்தாந்த சண்ட மாருதம்

கற்றோர் ஏத்தும் கதிரைவேற்பிள்ளை அவர்களை கல்வித் தமிழுலகம் நன்கறியும். ஆறுமுக நாவலர் அவர்களுக்குப் பின்னர், சைவசித்தாந்த சண்டமாருதமாக திகழ்ந்தனர். புனிதத் தமிழுக்குப் புது மெருகும் புது வளமும் பெருக்கித் தந்தார். இவர்போன்ற பெரியார்களைப் பெற்ற தமிழகமும் சைவ உலகமும் இறும்பூதெய்தாமல் இருக்க முடியுமா?

### இளமையும் இயல்புகளும்

பெரியார் கதிரைவேற்பிள்ளை அவர்கள் 1860ம் ஆண்டு மார்கழி மாதம் 3ம் திகதி மேலைப்புலோலியில் சைவநெறியும் தமிழ்ப் பண்பும் நிறைந்த குடும்பத்தில் திரு நாகப்பிள்ளை என்பவருக்கு மகனாகப் பிறந்தார். சிறு வயதில் இவர் புலோலிச் சைவ வித்தியாசாலையில் கல்வி பயின்றார். விரித்தாராயும் விழைவும் சுறுசுறுப்பான இயல்பும் நுண்மையாகக் கிரகித்துக்கொள்ளும் தன்மையும் அவரிடம் சிறு பிராயத்திலேயே காணப்பட்ட இயல்புகள். பண வசதி இல்லாத குடும்பத்தில் பிறந்தபடியால் அவர் பள்ளிப் படிப்புக்கு வெள்ளெனவே முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதற்குள்ளாகவே அன்னார் ஆறுமுக நாவலரின் சிறந்த மாணாக்கரான நல்லூர் தியாகராசப்பிள்ளை அவர்களிடம் தொல்காப்பியம் முதலாம் இலக்கணங்களையும், தருக்க நெறிகள் சித்தாந்த தத்துவங்கள், வடமொழிக் கிரந்தங்கள், முதலியவற்றை கற்றிருந்தார். சிறிதுகாலம் அவ்வூர் நொத்தாரிசு சிதம்பரப்பிள்ளை என்பவருக்குக்கீழ் இலேகராகக் கடமை பார்த்து வந்தார். ஆனால் அவருக்கோ இந்த அடிமை வாழ்வில் அருவருப்பு உண்டாயிற்று. தமது 22வது வயதில் தனக்கும் நொத்தாரிசுக்கும் இடையில் ஏற்பட்ட ஒரு பிணக்கைச் சாட்டாகக் கொண்டு இந்த வேலைக்கு தலை முழுக்குப் போட்டுவிட்டு இந்தியா சென்றார்.

### இந்தியாவில்: தருக்கப் பேச்சு

இந்தியா சென்றபொழுது அங்கு உத்தியோகத்தில் அமர்ந்திருந்த திருகோணமலை திரு த. கனகசுந்தரம் பிள்ளை அவர்களிடம் தொல்காப்பியம் முதலிய நூல்களைத் தெளியக் கற்றார். ஆழ்ந்த அறிவுடையவராக இருந்தபடியால் இவரை ஆங்காங்கு அழைத்துச் சென்று சொற்பொழிவாற்றுவித்தனர். அது மட்டுமன்றி பேச்சு வன்மையும் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. மணிக்கணக்கில் சரமாரியாகப் பொழிந்து தள்ளுவார். தானும் இளைக்க மாட்டார். கேட்பவருக்கும் சலிப்புத்தட்டாது. இப்படி அபூர்வமாகப் பேசுதல் அவருக்கு கிடைத்த ஒரு தனிப் பாக்கியம் என்றே சொல்ல வேண்டும். அவர் தருக்க நெறிகளை வெறுமனே கற்றறிந்தவர் அல்லர். நடைமுறையிலேயே தருக்கிப்பதில் ஒரு தனிப் "புலி"யாகத் திகழ்ந்தார்.

### "மாயாவாத தும்ஸ கோளரி"

நாவலர் பெருமான் வாழ்ந்த காலத்திலேயே மாயாவாதம் தலை தூக்கியது. ஆனால் நாவலர் பெருமான் இவர்கள் கொட்டத்தை அடக்கி வைத்தார். நாவலர் மறைந்ததும் இந்தப் பைத்தியம் மீண்டும் தலைவிரித்தாடத் தொடங்கியது. இவர்களைச் சும்மா விட்டு வைக்க கதிரைவேற்பிள்ளை அவர்களா இலேசுபட்டவா? தலையடி கொடுத்து அவர்கள் கொட்டத்துக்கு உலைவைத்தார். ஒருமுறை சைதாப்பேட்டையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் மாயாவாதிகள் சூழ்ந்திருந்தனர். இக்கூட்டத்தில் பிள்ளை அவர்கள் மடைதிறந்தாற்போலப் பேசிக்கொண்டிருந்தார். அங்கு பல கேள்விகள் எழுந்தன. அவற்றிற்கெல்லாம் அடலேறுபோல் விடை கொடுத்தார். அத்துடன் விட்டுவிடவில்லை. காணும் வினாக்களை வீசி அவர்களை திணறித் திகைக்க வைத்தார். இந்த அவைக்குத் தலைமைதாங்கிய காசிவாசி செந்திநாதசுவாமிகள் பிள்ளை அவர்களுக்கு "மாயாவாத தும்ச கோளரி" என்னும் மாண்புடைப் பட்டத்தை அணிவித்தார்.

### சமஸ்தான வித்துவான்

இவர்புகழ் விரவிப் பரவியதில் வியப்பில்லை. ஆரணி அரசர் இவரைத் தமது சமஸ்தான வித்துவானாக ஆக்கினர். அத்துடன் இவருக்கு "அத்துவித சித்தாந்த மகோத்தாரணர்" என்ற சிறப்புப் பெயரையும் நல்கினர். இப்படியாக இவர் சைவசமயம் செழித்து வாழ பல இன்னல்களுக்கிடையிலும் பலவாறு பாடுபட்டார். வெற்றியும் கண்டார்.

### முத்தமிழ் புலவர்கள் மத்தியில் முழக்கம்

அந்த நாட்களில் அட்டாவதானம் செய்துவர்கள் இருந்தனர். தசாவதானம் செய்வதே ஒரு பெரிய காரியம். ஒருநாள் சென்னை இலக்குமி விலாச மண்டபத்தில் மக்கள் திரள்திரளாகக் குவிந்து இருந்தனர். ஆனால் அங்கு இருந்தவர்கள் சாமான்ய மக்களும் அல்ல-முத்தமிழ்ப் புலவர்கள்-சமஸ்கிருதப் பண்டிதர்கள் தத்துவசாத்திர நிபுணர்கள்-வித்தியாதிகாரிகள்-வழக்கறிஞர் சிங்கங்கள்-ஆங்கிலக் கலை வல்லுனர்கள்-இன்னோரன்ன பிறரும் அங்கு குழுமி இருந்தனர். அங்கு கூட்டம் ஞானனந்த சுவாமிகள் தலைமையில் ஆரம்பமாயிற்று. தனது குலதெய்வமாகிய முருகனை வணங்கிக்கொண்டு கூட்டத்தில் இருந்து கிளம்பிய தலை தெறிக்கும் கேள்விகளைத் தவிடுபொடியாக்கிப் பதிலிறுத்தார். மயிலை அரங்கசாமி நாயக்கர் எழுந்து "கோலம்" என தொடங்கி "பார்" என முடியும் ஓர் நேரிசை வெண்பாவில் சைவசித்தாந்தத்தாலன்றி முக்தி கிடைக்காது எனும் பொருளையடக்கிப் பாட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். உடனே கதிரைவேற் பிள்ளை அவர்கள்

"கோலஞ்சேர் வைவமெனுங்
கொள்கையரங்கப்பேர்
மேலுமோர் சாமியைச் சேர்
கோலவனே-ஞாலமதில்
சித்தாந்த ஞானஞ்சிறந்த
தன்றி யெவ்வுயிர்க்கும்
பக்தி முக்தி சேரா நீபவர்"

என்று முழங்கினார்.

### தசாவதானி

பெரியபுராணஉரையாசிரியர் கா. ஆலாலசுந்தரம் பிள்ளை அவர்கள் எழுந்து "சிவபெருமானுக்கும், அவதான சபைக்கும், சமுத்திரத்துக்கும் சிலேடையாய் மூன்றும் அடியில் சைவசித்தாந்த கருத்துடையதாய் "சங்கப் புலவ', என்றெடுத்து 'ர்' என முடியும் ஓர் நேரிசை வெண்பாப் பாட வேண்டும் என்றார், உடனே பிள்ளை அவர்கள்

"சங்கப் புலவ மனிசார்தலாற்
றத்துவத்தால்
தங்கக் கலைமதியஞ்சார்தலாற்-
றுங்கமதாற்
பேராற் சதசத்தடக்கலாற்
பெம்மானும்
நேரவையும் வேலையுமே
நேர்"

என்று பாடி முடித்தார்.

இப்படியாகஅன்னார் அனல் பறக்கும் கேள்விகளுக்கு ஆப்பறைந்தார். இந்த கூட்டத்திற்குத் தலைமைவகித்த ஞானவந்த சுவாமிகள் பிள்ளை அவர்களை பூலோகங் கண்ட சதாவதானி என்று திருவாய்மலர்ந்தருளினார்.

### அருட்பா—மருட்பா: ஞாபகச் சின்னம்

இந்தக் காலத்தில் அருட்பா—மருட்பா பிரச்னையும் தலை தூக்கியது ராமலிங்க சுவாமிகளின் பாடல்கள் மருட்பா அல்ல அருட்பா என்று "மருட்பா மறுப்பு" என்ற நூலில் எழுதினார். இதில் 27 காரியங்கள் பொய்யாக எழுதப் பட்டவை என்று ராமலிங்க சுவாமிகளின் தமையன் மகனான வடிவேற் பிள்ளை 1904-ம் ஆண்டு ஜூன் மாதம் சென்னைப் பொலிசுக் கோட்டில் வழக்கு தொடர்ந்தார். ஆறு மாத விசாரணையின் பின்னர் சென்னை பெருமன்றத்து நீதிபதி திரு. அஜ்ஜீதின் சாகிபு வழக்கைத் தள்ளுபடி செய்தார். இந்த வெற்றியைக் கொண்டாட சிதம்பரத்தில் எண்ணாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தனர். அவர்கள் மத்தியில் அருட்பாவைப் பற்றி அரிய சொற்பொழிவாற்றினார். காஞ்சியில் அன்னாரை ஊர்வலமாக அழைத்துச் சென்று வெற்றி விழா கொண்டாடி அரநம் பதித்த கௌரி சங்கர கண்டியை ஞாபகச் சின்னமாக அளித்தனர். இதை அறிந்த ஈழத்து அன்பர்களும் அவரை அழைத்து விமரிசையான விழாக்கள் கொண்டாடினர். "போலியருட்பாப் பிரபந்த நிர்க்கந்த சிஞ்சுக் கண்டன பிரசண்ட மாருதம் சைவ சித்தாந்த மகாசரபம்" என்னும் சிறப்புப் பட்டங்களை அளித்தனர்.

### தமிழ்ப் பேரகராதி

அவர் சைவமதத் துறையிலன்றி மொழித்துறையிலும் அளப்பரும் சேவை செய்துள்ளார். தமிழ்ப் பேரகராதியை இயற்றினார் என்றால் அதைவிடப் பெரிய தொண்டு மொழிக்கு யார்

(11-ம் பக்கம் பார்க்க)

---

## மக்கள் குரல்

## கல்விப் பிரச்னை

தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் வாதப் பிரதிவாதங்களுக்கிடமான கல்விப் பிரச்னைகளைக் கல்வியுலகில்முக்கியதொண்டாற்றுவோரும் மற்றும் பொது நோக்குடையோரும் நியாய பூர்வமாக ஆராய்தல் இன்றியமையாததாகும்.

முதலில் அரசினர் பாடசாலைகள் என்றால் என்ன? என்பதை எடுத்துக் கொண்டால் அவைகள் முற்றும் அரசாங்கத்தாலேயே நிர்வகிக்கப்படுவன என்பது புலனாகும். அதாவது அப்பாடசாலைகளின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயங்களில் தலையிட எவருக்கும் இடமில்லை என்பதாகும். இது பற்றியே சில அரசினர் பாடசாலைகளின் ஆசிரியர்களை மாற்றவோ அவர்களின் மாற்றத்தை நிறுத்தவோ பெற்றோர் ஆசிரிய சங்கங்களும் கூட, கேட்பதை அரசாங்கம் கவனிப்பதில்லை. அப்படி ஒரு சிலரின் விருப்பத்தை நிறைவேற்றுமிடத்து அது இலங்கையின் மறு பகுதியிலுள்ள வேறு பலருக்கு நியாயம் கிடைக்க மறுப்பதாகும் என்பதே. இது போன்றே பாடசாலை சம்பந்தமான எந்த விடயத்தையும் இலங்கை மக்களின் சார்பில் அரசாங்கமே தீர்மானித்து அமுல் செய்யும்.

### பாஷை அடிப்படையில் பெயர்

அரசாங்க பாடசாலைகளில் ஒவ்வொரு பாடசாலையிலும் [illegible] கல்வி போதிக்கப்படுகிறதோ அந்தப் பாஷைப் பெயராலேயே அப்பாடசாலையை அழைப்பது நடைமுறையிலுள்ளது. இவ்வாறு அரசினர் சிங்களப் பாடசாலையென்றும், அரசினர் ஆங்கிலப் பாடசாலை யென்றும், அரசினர் தமிழ்ப்பாடசாலையென்றும் வழங்கப்பட்டு வருகிறது. உதவி நன்கொடைபெறும் பாடசாலைகள் தத்தம் சமய விருத்திக்காக உழைப்பனவாதலாலும் அவற்றின் நிர்வாகம் பெரும்பாலும் முகாமைக்காரரிடம் இருப்பதாலும் முகாமைக்காரரிடும் பெயர்களை அங்கீகரிப்பது வழக்கம். ஆனால் அரசாங்க பாடசாலைகளை ஒரு சாதிப் பெயராலோ ஒரு சமயப் பெயராலோ அழைப்பதில்லை. ஏனெனில் அப்பாடசாலைகள் இலங்கையில் வாழும் ஒவ்வொரு பிரசைக்கும் சம உரிமையுடையன. ஆங்கிலத்தில் போதிக்கும் ஒரு அரசாங்க பாடசாலையில் முழுவதும் சிங்களப் பிள்ளைகளே பயின்றாலும் அதனைச் சிங்களப் பாடசாலையென்றோ பௌத்த பாடசாலையென்றோ சொல்வதில்லை. சமீபத்தில் முஸ்லிம் பிள்ளைகள் பெரும்பான்மையாகப் படிக்கும் பாடசாலைகள் முஸ்லிம பாடசாலைகளென வழங்கப்படல் வேண்டுமென விதிக்கப்பட்டது. இவைகள் உண்மையில் முஸ்லிம் பிள்ளைகள் அதிகம் படிக்கும் பாடசாலைகளேயொழிய முஸ்லிம் பாஷையில் கற்பிக்கப்படும் பாடசாலைகளல்ல. அரசாங்க பாடசாலை எதிலும் எந்த இலங்கைப் பிள்ளையும் அந்தப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும்பாஷையில் கல்வி கற்க உரிமையுண்டு. ஏனெனில் அது மக்களின் பிரதிநிதியாகிய அரசாங்கத்தின் பாடசாலை. அதாவது மக்களின் பாடசாலை.

### தொழிலளவில் முஸ்லிம்களும் தமிழாசிரியர்களே

இப்பாடசாலைகளெல்லாம் (தமிழில் போதிக்கப்படும்) அரசினர் தமிழ்ப் பாடசாலைகளே. அங்கு தமிழில் கற்பிக்கும் ஆசிரியர்கள் யாவரும் தமிழ் ஆசிரியர்களே. ஏனெனில் அவர்கள் தமிழ்ப் பரீட்சையில் சித்தியெய்தியவர்கள். தமிழ்மொழி வாயிலாகக் கற்பிக்கிறவர்கள். அவர்கள் எந்தச் சாதியைச்சேர்ந்தாலும், எந்தச் சமயத்தைச் சேர்ந்தாலும் பொருட்படுத்துவதில்லை. உதாரணமாகத் தமிழில் பயிற்றப்பட்ட ஒரு கத்தோலிக்க ஆசிரியருக்கு அவர் கத்தோலிக்க ஆசிரியர் என்று தராதரப் பத்திரம் கொடுப்பதில்லை. இவ்வாறே சிங்களவரொருவர் தமிழில் ஆசிரிய தராதரம் பெற்றால் அவரும் தமிழ் ஆசிரியரே. முஸ்லிம் சமூக ஆசிரியர்கள் தங்களை இஸ்லாமிய ஆசிரியர்கள் என்கிறார்கள். தொழிலைப் பொறுத்த அளவில் அவர்கள் யாவரும் தமிழ் ஆசிரியர்களே.

### ஒரே உரிமை

இவ்வாறன அரசினர் தமிழ் ஆசிரியர்கள் யாவருக்கும் அரசாங்க உத்தியோகத்தர் என்ற முறையில் ஒரேவிதமான உரிமையே உண்டு. அவர்கள் யாவரும் அரசாங்கம் அவர்களை அனுப்பும் பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டும். அரசாங்க உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து கற்பித்தல் வேண்டும். கற்பிக்கும்போதும் பிள்ளைகளிடம் வேறுபாடு காண

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியன் நாளடைவில் சாம்பலாக மாறலாம்!

# வெம்மை தாங்காது பூமியே எரிந்தாலும் எரியலாம்

## கதிரவனில் கரும்புள்ளிகளாகத் தெரியும் குளிர்ந்த வாயு நிறைந்த பகுதிகள்

### பகலவனைப்பற்றி விஞ்ஞானிகள் தரும் பரபரப்பான கருத்துகள்

வான வெளியிலே கதிரவனை நடுநாயகமாகக்கொண்டுதான் பூமியும் பிற கோள்களும் வட்டமிட்டு வருகின்றன. கதிரவனைச் சுற்றி வட்டமிடும் கோள்கள், கதிரவன் ஆகியன சேர்ந்தபகுதியே ''கதிரவன் மண்டலம்'' எனப்படுகிறது.

வட்டவடிவமான கதிரவனின் விட்டம் ஏறக்குறைய 8,64,000 மைல்களாகும். பூமியிலிருந்து கதிரவனுக்குள்ள தூரம் ஏறக்குறைய 9,30,00,000 மைல்களாகும். கதிரவன் தன் அச்சைச் சுற்றித் தன்னைத் தானே சுற்றிக்கொள்ள 25.38 நாட்கள் ஆகின்றனவாம்!

கதிரவனிடத்துள்ள பொருள் திணிவு பூமியின் பொருள் திணிவைவிட ஏறக்குறைய 3,30,000 மடங்குகள் அதிகமாக இருக்கின்றதாம்! கதிரவனின் மேற்பரப்பிலுள்ள வெம்மை 6000 டிகிரி சென்டிகிரேட்டாகும். மையப் புள்ளிக்கு அருகிலுள்ள வெம்மையோ 40 மில்லியன் கணக்கான டிகிரி சென்டிகிரேட்டாகும்.

#### கரும் புள்ளிகள்

சாதாரண ஒரு வண்ணக் கண்ணாடி கொண்டு கதிரவனைப் பார்த்தால் எரிமலைப் பாறையிலுள்ள சில வெடிப்புப் பிளவுகள் போன்ற கருமையான பகுதிகள் சிலவற்றைக் காணலாம். இவை கதிரவனிடத்துள்ள 'கரும் புள்ளிகள்' எனப்படுகின்றன. இவ்விதப் புள்ளிகளிலொன்றை எடுத்து ஆராய்ந்து பார்த்தால் நடுவே முற்றிலும் இருள் படர்ந்த ஒரு பகுதியையும் அதைச் சுற்றி மென்மையான இருள் படர்ந்த பகுதியையும்காணலாம். ஹென்றி நாரிசு ரஸ்ஸெல் என்ற விஞ்ஞானி கூறுகிறார். ''வேறெங்குமில்லாதபடி மிகக் குளிர்ந்த வாயுக்கள் நிறைந்த பகுதியே 'கரும் புள்ளி'யாகும். அவ்வித வாயுக்களால் தான் அப்புள்ளி ஒளிர்கிறது. காண முடியாத மிக ஆழமான பகுதிகளிலிருந்து மேனோக்கி வரும் வாயுக்கள் மேலே வர விரிவடைகின்றன. அப்போது அவை குளிர்ச்சியடைகின்றன. கதிரவனின் மேற் பரப்பை அடையுங்கால் அவை கரும்புள்ளிகளாக உருவமடைகின்றன. இதுவே கரும்புள்ளிகள் ஏற்பட்ட வரலாறு''. மிகச் சிறிய புள்ளிகள்கூட 500 மைல் நீளமுள்ள விட்டங்களுடையனவாக உள்ளன. ஒரே மூச்சில் பல கோள்களை விழுங்கிவிடக் கூடிய அளவான அத்தனை பெரிய புள்ளிகளும் இருக்கின்றனவாம்.

#### 25 நாட்கள்

கதிரவனின் வட்டப்பகுதியின் மேற்கு விளிம்பிலுள்ள புள்ளிகள் வட்டப் பகுதியினூடே அடிக்கடி இடம் மாறுகின்றன. அவை கிழக்கு விளிம்புக்கு வருகின்றன. பின் மறைகின்றன. மறுபடியும் மேற்கு விளிம்புக்கு வருகின்றன. இவ்வண்ணம் சில புள்ளிகள் ஆறு மாதங்களாக ஒரே இடத்தில் காணப்படலாம். சில ஓரிரு நாட்களே இருந்து பின் மறையலாம். அல்லது இடம் மாற்றம் அடையலாம். இங்ஙனம் நிகழும் புள்ளிகளின் போக்கைக் கவனித்து ஆராய்ந்து பார்த்தால் கதிரவன் தன்னைத்தானே சுற்றிக்கொள்ள ஏறக்குறைய 25 நாட்கள் ஆகும் என்பது உணரலாம்.

#### வெம்மையும் மின் சக்தியும்

கரும்புள்ளிகளின் வெம்மை 4000 டிகிரி சென்டிகிரேட்டாகும்.

தன்றாகக் காயும் வெய்யிலே கதிரவனைக் கிரினிச் போன்ற பல விஞ்ஞான ஆய்வுக் கூடங்களில் புகைப் படம் எடுத்து ஆராய்ந்திருக்கின்றனர். அப்புகைப் படங்களில் கரும்புள்ளிகள் மிகத் தெளிவாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு புகைப் படத்திலும் புள்ளிகளின் எண்ணிக்கை, அவற்றின் பரப்பு, அவை இருக்குமிடம் ஆகியன மிகக் கவனத்தோடு ஆராயப்பட்டன. கதிரவனின் மத்தியக் கோட்டிற்கு மேலும் கீழும் தொகுதி தொகுதியாகக் கரும்புள்ளிக் கூட்டங்கள் தெரிந்தனவாம்! கதிரவன் வட்டத்தின் ஓரங்களில் புள்ளிகள் அவ்வளவு அதிகமாகத் தெரியவில்லையாம்! மேலும் பல ஆண்டுகள் தொடர்ச்சியாக இதை ஆராய்ந்து பார்த்ததில் புள்ளிகள் எண்ணிக்கையும், போக்கும் மாறுபட்டுக் காணப்பட்டனவாம்!

கரும் புள்ளிகளின் போக்குகளால் வாயு மண்டலத்தில் காந்தப் புயல் ஏற்பட்டு அது பூமியில் ஆர்க்டிக் பகுதிகளையும் தாக்குகிறது. இதோடு மின் சக்திப் புயலும் ஏற்படுகிறதாம்!

#### தீச்சுவாலை

முழுக் கதிரவன் கிரகணம் ஏற்படும்பொழுது கதிரவனுக்கு அப்பாலுள்ள வாயு வெளியில் மிக நீண்ட சுவாலையுள்ள தீ பெரும் அளவில் பரந்து கிடப்பதைக் காணலாம். அச்சுவாலை அழுத்தமான சிவப்பு நிறமுள்ளதாகவும் பல வடிவங்களுடையதாகவுமிருக்கும். சில சமயங்களில் அச்சுவாலை பல ஆயிர மைல்கள் தூரம் நீண்டிருக்கவும் கூடும். 1919ல் கதிரவன் கிரகணத்தால் ஏற்பட்ட இந்நிகழ்ச்சியிலுண்டான சுவாலை 4,75,000 மைல் உயர எழும்பிற்றும்! அது பல பூமிகளை ஒரே மூச்சில் விழுங்கிவிடக்கூடிய ஆற்றல்வாய்ந்தது. சேர் ஜேம்ஸ் ஜீன்சு என்பார் கூறுகிறார்: ''கதிரவனின் உட்பாகம் பல சக்திகளின் பிறப்பிடம். அச்சக்திகளால் பிறப்பிக்கப்பட்டு வெளியேற்றப்படும் ஒருவித 'சக்தி'யினால்தான் கதிரவனின் உட்பாகம் கடுவெம்மையாக இருக்கிறது. ஆகவே மிகப் பரந்த வெம்மை மேல் பாகம்நோக்கிச் செலுத்தப்படுகிறது எனவே கதிரவனின் மேல் பாகம் எப்பொழுதும் கடுவெம்மையை வெளியே செலுத்திக்கொண்டேயிருக்கிறது. இவ்வித வெம்மையின் வெளியேற்றத்தினால் தான் கிரகண நாட்களின் போது மிகப் பெரிய தீச்சுவாலை ஏற்படுகிறது. கதிரவனின் மேல் பாகம், விரைந்து வந்துகொண்டேயிருக்கும் வெம்மையை உடனுக்குடன் வெளிவிடத்து முடியாத காரணத்தால் முன்னர் சொன்ன தீச்சுவாலையையும் முதலிற் கூறிய கரும்புள்ளிகளையும் ஏற்படுத்திக்கொள்கிறது.

#### கற்றைக் கதிரொளி

காலையில் கிழக்கே கதிரவன் தோன்றுவதற்குச் சிறிது முன் நேரத்திலும் மாலையில் மேற்கே கதிரவன் மறைவதற்குச் சிறிது முன் நேரத்திலும் வானவெளி பல சிதறிய ஒளிக்கற்றைகளால் ஒளிர்வதை நாம் காணக் கூடும். வானமும் பூமியும் சேருமிடத்தில், கதிரவனிடத்துள்ள சில நுண் பொருள்களால் கதிர் ஒளி சிதறடிக்கப்பட்டுப் பலகற்றைகளாகத் தெரிவதே அவ் ஒளி!

#### மூட நம்பிக்கை

விஞ்ஞானம் சிறு குழந்தையாக இருந்த காலத்தில் கதிரவனே பூமியைச் சுற்றி வருகிறான் என்று நம்பியிருந்தனர் மக்கள். பூமி அசையாமல் அப்படியே இருக்கிறது; கதிரவனே கிழக்கிலிருந்து மேற்கு பக்கமாகச் சுற்றி வருகிறான் பூமியை என்று எண்ணியிருந்தனர். 'பூமிசுற்றுகிறது என்று கூறினால் கடவுளுக்கு இழுக்கு மதத்திற்கு இழுக்கு' என்றுகூட அக்காலத்தில் நம்பினர் சில மதவாதிகள். பின்னர் ஏற்பட்ட விஞ்ஞான வளர்ச்சியால் 'பூமியே கதிரவனை மேற்குப் பக்கத்திலிருந்து கிழக்குப் பக்கமாகச் சுற்றுகிறது; அதனால்தான் கதிரவன் கிழக்கில் தோன்றி மேற்கில் மறைவதாகக் காணப்படுகிறான்' என்று தெளிந்தனர்.

#### தோற்றம்

உலகம் பிறக்காத ஆதி காலத்தில் பூமியும் கதிரவனோடு அதன் ஒரு பகுதியாக இருந்து சுற்றிக்கொண்டிருந்ததாம். அப்பொழுது கோள்கள்கூடப் பிறக்கவில்லை. இயற்கையில் ஏற்பட்ட ஒரு திடீர் விளைவால் கதிரவன் சிதறுண்டானாம். அச்சிதறலினால் ஏற்பட்ட ஒரு சிறு துண்டுதான் நாம் வாழும் பூமியாம்! அனற்பந்தெனச் சுற்றிக்கொண்டிருந்த கதிரவனிடத்திருந்து பிரிந்த அனற்துண்டாகிய பூமி குளிர்ந்து தற்போதைய நிலைக்கு வரப் பல கோடி ஆண்டுகள் பிடித்தனவாம்! இங்ஙனமேதான் பிற கோள்களும் பிறந்தனவாம்!

#### உயிரினம் இல்லை

கதிரவனின் வெம்மை 6000 டிகிரி செண்டிகிரேடுக்கு மேற்பட்டு இருப்பதால் அங்கு எந்தப் பிராணியும் உயிர்வாழ்தல் அரிது. கதிரவனிடத்திருந்த வரும் வெம்மையாலேயே இறந்து போகும். உயிரினங்கள் அக்கதிரவன் ஒளியின் நிழலிலே மறைந்து வாழ்தல் முடியுமா? 'பூமியிலுள்ள பொருள்களிற் பெரும்பாலான கதிரவனிடத்துமுள்ளன; ஆனால் அவை வாயு உருவத்தில் உள்ளன' என்று விஞ்ஞானிகள் விளம்புகின்றனர்.

#### 'காண்ட்' விஞ்ஞானியின் ஆராய்ச்சி

கதிரவன் மண்டலம் பற்றிய ஆராய்ச்சியான கூறுபாட்டினை முதன் முதல் விளக்கியவர் காண்ட் என்ற விஞ்ஞானி ஒரு காலத்தில் கதிரவனைச் சூழ்ந்திருந்த புகை போன்றதொரு ஒளி மண்டலத்திலிருந்தே கதிரவன் மண்டலத்திலுள்ள கோள்கள் பிறந்திருக்க வேண்டும் என்று அவர் எண்ணினார். 1796ல் லாப்லேசு என்ற விஞ்ஞானி கணித வழியில் காண்ட்டின் ஆராய்ச்சியைப் புலப்படுத்தினார். ''கதிரவனைச் சுற்றிச் சூழ்ந்திருந்த அப்புகை போன்றதொரு ஒளிப்படலம் வெப்பமாகவும் மெதுவான சுழற்சியுடையதாகவும் இருந்திருக்க வேண்டும். வெப்பம் தணிந்து குளிர்ச்சி ஏற்பட அது சுருங்கி அதிவேகமாகச் சுழல ஆரம்பித்தது. அதன் வேகமும் பூமியின் ஈர்ப்பு வேகமும் ஒரே அளவாக வந்தகாலை ஒரு வட்ட வளையமான பகுதியைக் கதிரவனைச் சுற்றி நிறுத்திவிட்டு, மீதியான பகுதி பின்னும் குறைய ஆரம்பித்தது. அப்பகுதிகள் சிறு சிறு வளையங்களாக மாறின. அவ்வித ஒவ்வொரு வளையமும் நாளடைவில் வாயு வாலான கோளாக மாறியது. பழைய ஒளிப்படலத்தின் பாதையையே அக்கோள்களும் பற்றிக்கொண்டன. அக்கோள்களுள் பல பின்னும் குளிர்ச்சியடைந்து அவ்வட்ட வளையங்களை விட்டுப் பிரிந்தன.

சனி என்ற கோளைச் சுற்றியுள்ள வட்ட வளையங்கள் இங்ஙனம் ஏற்பட்டவையே' என்று கூறுகிறார் அவர்.

#### பூமியும் நிலவும்

சாம்பர்லின், மோல்ட்டன் என்ற இரு விஞ்ஞானிகளும் பழங்காலக் கதிரவனை உராய்ந்துகொண்டுபோன ஒரு விண்மீன் கதிரவனிடத்திருந்து பிரித்த பொருளே கோள்களின் கூட்டமாகும் என்பர். சாப்ரி என்பவரோ விண் மீனொன்றும் கதிரவனும் நேரே மோதியதால் ஏற்பட்ட நூலிழைபோன்றதொரு பொருள் நாளடைவில் கோள்களாகக் குறுகியிருக்கலாம் என்பர். சர் சேம்சு சீன்சு கூறுகிறார்; சில இரண்டாயிரம் மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தன் போக்கில் சென்றுகொண்டிருந்த ஒரு விண்மீன் எதிர்பாராத விதமாகக் கதிரவனுக்கருகே கூப்பிடு தூரத்தில் வந்து கதிரவனிடத்து வேலா ஏற்றத்தை எழுப்பியிருக்க வேண்டும். இவ்வேலா ஏற்றம் கதிரவனும் நிலவும் பூமியிடத்து ஏற்படுத்தும் வேலா ஏற்றம் போன்றதே. அவ்விதம் ஏற்பட்ட மிகப் பெரிய வேலா ஏற்றமொன்று கதிரவன் மேற்பாகத்தில் பயணம் பண்ணி மிகப் பெரிய மலையொன்றினை உண்டாக்கியிருத்தல் வேண்டும். விண் மீன் தன் பாதை நோக்கி மறுபடியும் செல்ல ஆரம்பித்தபொழுது அதன் ஈர்ப்புச்சக்தி மிக அதிகமாகி அதனால் அம்மலை துகளாகி அவைகளிலிருந்தே கோள்கள் ஏற்பட்டன. இவ்விதமே பூமியும் நிலவும் ஏற்பட்டன''

மேற் கூறிய ஆராய்ச்சிகளில் இறுதியில் கூறிய ஆய்வே ஏறக் குறைய உண்மையானதாகும் என நம்பப்படுகிறது. எனினும் இதிலும் குறைபாடுகள் இல்லாமலில்லை. உயர்ந்த ஆராய்ச்சிகளைக் கண்டுபிடித்து உண்மையை நிலைநாட்டியிருக்கின்றனர் விஞ்ஞானிகள்.

#### கதிரவன் கிரகணம்

பூமியைச் சுற்றி வரும் நிலவு, கதிரவனுக்கும் பூமிக்குமிடையே வந்து; அவை மூன்றும் ஒரே நேர் கோட்டில் அமையுங்கால், நிலவு கதிரவனை நம்மிடமிருந்து ஒரு பாகமாகவோ அல்லது முழுவதுமாகவோ மறைக்கும். அப்போது கதிரவன் கிரகணம் ஏற்படுகிறது. பூமி நிலவு, கதிரவன் ஆகிய மூன்றும் அமையும் நிலைக்குத் தக்கபடி கிரகணம் ஒருபாகமாகவோ அல்லது முழு உருவமாகவோ தெரியக் கூடும். கதிரவன் கிரகணம் எப்பொழுதும் அமாவாசை நாட்களில்தான் நிகழும்.

#### கதிரவன் சாம்பலாகலாம்

தற்கால விஞ்ஞான ஆய்வுப்படி நாம் கதிரவனை நோக்கி முன்னேறிச் செல்லுகிறோம் அதிவேகமாக என்

(11-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக்குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், ''ஆனந்தா தைலத்தை''த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00

வி. பி. பி. செலவு வேறு.

புரொப்ரைட்டர்: எம். பொன்னையா.

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1957 ஏப்ரல் மாதம் 7-ந் திகதி

194 ஏ, தட்டா தெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


# குரூபியின் கோபம்

ஒழுக்கக் குறைவானதும், தவறானதுமான நடத்தையினால் ஒரு மன்னன் கொடிய குஷ்ட ரோகத்தைச் சம்பாதித்துக்கொண்டான். பூரண கலைச் சந்திரனைப்போல ஜொலித்த அவனுடைய முகம் தொழு நோயின் கொடூரத்தினால் விகாரமடைந்தது. ஒரு காலத்தில் அனங்கனையும் வென்ற அழகனாய் விளங்கிய அம்மன்னன் நோயின் உக்கிரத்தினால் கூனிக் குறுகிக் குரூபியாகிவிட்டான்.

அவனுடைய சுந்தர சௌந்தரியங்களையெல்லாம் நாளிலும் பொழுதிலும் பிரதிபிம்பித்து அவனை மகிழ்வித்துக்கொண்டிருந்த அரண்மனை நிலைக் கண்ணாடிகளை இப்போது அவனால் ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை. தன்னை அவலட்சணமாகக் காட்டிய அக்கண்ணாடிகளின்மீது அவனுக்கு கோபம் ரௌத்திராகாரமாக வந்தது. தான் ஒரு குரூபியாகக் காணப்படுவதற்கு கண்ணாடிகளில் உள்ள கோளாறுதான் காரணம் என்று எண்ணினான் போலும் அந்த அறிவுகெட்ட அரசன். தவறான நடத்தையினால் தான் தேடிக்கொண்ட குறைபாடுகளையே கண்ணாடிகள் பிரதிபலிக்கின்றன என்ற உண்மையை உணர முடியாமல் கண்ணாடிகள்மீது அவனுக்கு ஆத்திரமும் அசூயையும் பிறந்தன. ''அரண்மனையிலுள்ள கண்ணாடிகள் அனைத்தையும் நொறுக்குங்கள்'' என்று கட்டளையிட்டான். அது மட்டுமல்ல தன் இராச்சியத்தில் தான் பார்க்கும் இடங்கள் எதிலுமே கண்ணாடிகள் இருக்கக் கூடாது; அப்படியிருந்தால் அவை திரையிடப்பட்டு மறைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் ஆணை பிறப்பித்தான்.

குரூபியாகிவிட்ட இந்த முட்டாள் மன்னனின் கோபத்தை ஒத்ததாகவே இருக்கிறது நமது பண்டாரநாயகா அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்திருக்கும் பத்திரிகை வாய்ப்பூட்டு சட்டமும். பத்திரிகை என்ற காலக் கண்ணாடியைச் சட்டம் என்ற திரையைப் போட்டு மூடி மறைத்துத் தன் குரூர ரூபம் தெரியாவண்ணம் தப்பித்துக் கொள்ளலாம் என்று மனப்பால் குடிக்கிறது இந்த மண்டு அரசாங்கம்.

மந்திரி சபையின் அந்தரங்க செய்திகளை எந்தப் பத்திரிகையும் வெளியிடக்கூடாது என்று ஒரு உளுத்துப்போன பத்தாம் பசலிப் பிற்போக்கு சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு மேற்படி அரசாங்கம் கடந்த வாரம் ஆலோசித்திருக்கிறது.

ஒரு சர்வாதிகார நாட்டில், அல்லது ஒரு கொம்யூனிஸ நாட்டில் ஆட்சியதிகாரத்திலிருப்போர் தங்கள் அந்தரங்கத் திட்டங்களை, மக்களுக்குத் தெரிந்துவிடாத வண்ணம், மூடி மறைத்து வைப்பதுமுண்டு; அப்படி வைப்பதற்குச் சட்டத் திரைகள் போட்டுக்கொள்வதுமுண்டு. ஜனநாயக நாட்டில் மக்கள்தான் எஜமானர்கள் என்று சொல்லப்படுகிறது. அரசாங்கத்தினர் மக்களின் ஊழியர்கள்தாம். வீட்டு வேலைக்காரன் வீட்டு நிலைமையைப்பற்றித் தன் எஜமானிடம் மூடிமறைத்து நடந்துகொள்வது எப்படி அடாத செயலாகுமோ, அப்படிப்பட்டதே மக்கள் அரசாங்கம் என்று சொல்லும் ஒரு அரசாங்கம் தன் நடவடிக்கைகளை மக்கள் அறியாவண்ணம்சட்டத்தைக்கொண்டு, ஜனநாயகத்தைப் பாதுகாத்து வளர்க்கக் கடமைப்பட்ட பத்திரிகைகளுக்குத் தடைபோட்டு, மூடிமறைத்து வைப்பதுமாகும்.

ஜனநாயக நாட்டில் பத்திரிகைகள் முகம் பார்க்கும் கண்ணாடிகளைப்போன்றவை. அரசாங்கம் தன் சுயரூபத்தைப் பார்த்துக்கொள்வதற்குப் பத்திரிகைகள் பயன்படுகின்றன. அதேசமயத்தில் மக்கள் அபிப்பிராயம் என்ற ஒளிக் கிரணங்களை ஏற்று அவற்றை அரசாங்கத்தை நோக்கி பிரதிபலிக்கும் கடமையும் திறமையும் நல்ல பத்திரிகைகளுக்கு உண்டு. பிரதிபலிக்கப்படும் மக்கள் அபிப்பிராயம் என்ற ஒளிக் கிரணங்கள்பட்டு அரசாங்கத்தின் கண்கள் கூச வேண்டிய சந்தர்ப்பமும், குத்தல் எடுக்கும் கட்டங்களும் வரத்தான் செய்யும். அப்படியான நிலைமை ஏற்படும்போது கண்ணாடிகளை அடித்து நொறுக்குவதோ அன்றிக் கண்ணாடிகளுக்கு பிற்போக்கு சட்டங்களைக்கொண்டு திரைபோடுவதோ அல்ல அரசாங்கம் செய்ய வேண்டிய வேலை. பத்திரிகைக் கண்ணாடி பிரதிபலிக்கின்ற ஒளி எங்கிருந்து சுடர்விடுகிறதோ அந்த இடத்தில்தான் அரசாங்கம் கவனத்தைச் செலுத்த வேண்டும். அதாவது மக்கள் அபிப்பிராயத்தை அறிந்து அதற்கு ஏற்றபடி நடந்துகொள்ள வேண்டும்.


பத்திரிகை வாய்ப்பூட்டுச் சட்டம்போன்ற ஒரு பிற்போக்குச் சட்டத்தை அரசாங்கம் கொண்டுவருவது அது தன் பலவீனத்தையும், கையாலாகாத்தனத்தையும் பகிரங்கமாகவே ஒப்புக்கொள்வதாகும். மந்திரி சபையின் இரகசியங்களைப் பாதுகாக்க வேண்டுமானால் அந்தக் கடமையும் பொறுப்பும் மந்திரி சபையைச் சேர்ந்த உறுப்பினர்களையும், உத்தியோகஸ்தர்களையும் சார்ந்தனவாகவே இருக்க வேண்டும். கூட்டுப் பொறுப்போடு அந்தரங்கத்தைப் பாதுகாக்க முடியாத ஓட்டைவாயர்களையும், உளறுவாயர்களையும் மந்திரி சபையில் வைத்துக்கொண்டு, மந்திரி சபையின் அந்தரங்கங்களைப் பத்திரிகைகள்தான் பாதுகாக்க வேண்டும், மீறினால் பத்தாயிரம் ரூபாய் அபராதம் அல்லது பல ஆண்டுகள் மறியல் என்று சட்டம் செய்வது வெட்டி வேலையாகும்.

அரசாங்கம் பத்திரிகை வாய்ப்பூட்டுச் சட்டம் என்று ஒன்றை அவசர அவசரமாகக் கொண்டுவர முற்படுவதன் உள்ளாந்தரம் என்ன என்பதைத் தமிழ்பேசும் மக்கள் ஆராய்ந்து அறியவேண்டியது அவசியமாகும். சமீபகாலமாக பண்டாரநாயகாவின் மந்திரி சபையில் இனவிரோதமான நடவடிக்கைகள் பல ஆலோசிக்கப்படுகின்றன. தமிழ் பேசும் மக்களையும், தமிழ் மொழியையும் ஒழிப்பதற்கான இரகசியத் திட்டங்கள் பல நாளிலும் பொழுதிலும் தீட்டப்படுகின்றன. இந்நடவடிக்கைகளும் திட்டங்களும் பத்திரிகைகளில் அம்பலமாகிவிட்டால் அவற்றை மின்னுமல் முழங்காமல் வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் நிறைவேற்றி வைக்க முடியாதே என்பதுதான் அரசாங்கத்தின் கவலையாகும்.

பத்திரிகை வாய்ப்பூட்டுச் சட்டம் என்று ஒன்று உருவாக்கப்பட்டால் அதன்கீழ் உக்கிரமாகத் தண்டிக்கப்படக்கூடிய முதல் பத்திரிகை சுதந்திரனாகத்தான் இருக்கும் என்பதை நமது நேயர்கள் அறிவார்கள். அரசாங்கத்தின் அந்தரங்கங்களை இலங்கையிலுள்ள வேறு எந்தப் பத்திரிகையையும்விட முன்னதாகவும், பட்டவர்த்தனமாகவும் அம்பலப்படுத்தி விடுவது சுதந்திரன் ஒன்றுதான். இந்த வேலையைச் சுதந்திரன் கடந்த பத்து ஆண்டுகளாக வெற்றிகரமாகச் செய்து வருகிறது.

எந்தச் சட்டம் வந்தாலும், எந்தத் தண்டனையைப் பெற்றாலும் இந்தப் பணியை, பயமோ பணிவோ இன்றிச் சுதந்திரன் தொடர்ந்து செய்து இந்த நாட்டில் [illegible] மக்கள் உரிமையையும் [illegible] ற்காது என்று உறுதி கூறுகிறோம்.

## மானாய்ப் பிறந்திலமே இந்த மானிலத்தே!




### என்ன அமளி?

இலங்கையில் மனிதகொலையின் விகிதம் மலையளவில் வளர்கிறது. இதைப்பற்றிக் கவலையில்லை ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் அசகாயசூரர்களுக்கு. மான் ஒன்று சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டதைப் பிரமாதப்படுத்தி முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள். பாராளுமன்றத்திலே சரமாரியான கேள்விகள்—பத்திரிகைகளிலே அவற்றிற்குப் பிரமாதமான விளம்பரங்கள்—அரசியல் வட்டாரங்களிலே 'குசுகுசு,' கூட்டங்களும் நிலைமையைச் சமாளிக்க நவநவமான திட்டங்களும். அப்பப்பா! என்ன அமளி?

### மானுக்காக முதலைக் கண்ணீர்

புனித புத்த ஜெயந்தி வருஷத்திலா அப்பாவி மான் கொல்லப்பட வேண்டும், இது அடுக்குமா என்கிறார்கள் இந்த 'அகிம்சாமூர்த்தி'கள்! மான் கொலைக்கு வருந்தி முதலைக் கண்ணீர் வடித்து, பொதுஜன மன்னிப்புக் கோருமளவுக்கு 'ஜீவகாருண்ய சிந்தைத்' படைத்த அரசியல் அன்பர்கள் அறிவார்களா இதை?...

### மாதமொன்றுக்கு 40 கொலைகள்

நம் நாட்டிலே மாதமொன்றுக்கு சுமார் 40 கொலைகள் நடக்கின்றன. அதாவது வருஷத்து 365 நாட்களில் ஏறத்தாழ 480 கொலைகள் நடக்கின்றன. அதிகமேன்? இந்த வருஷத்தில் கடந்த மூன்று மாதங்களில் மொத்தம் 118க்குக் குறையாத கொலைகள்—பரிதாபகரமான படுகொலைகள் நடந்திருக்கின்றன. பொலிஸார் தாம் அறிந்தமட்டில் தரும் புள்ளி விபரம் இது.

### புத்த ஜெயந்தி விழா?

இத்தனையும், புத்தரின் அகிம்சாதர்மத்தைக் கடைப்பிடித்துத் தர்பார் நடத்துகிறோம் என்று தம்பட்டமடிக்கும் நமது சிங்களச் சகோதரர்கள் அதிகப்படியாக வாழும் இந்த நாட்டிலேயே நடக்கிறது. இந்த இலட்சணத்தில் புத்த ஜெயந்தி வேறு கொண்டாடுகிறார்கள்!

### தீரன் நடராஜன் கொலை

வாழப்பிறந்த இந்நாட்டு மக்கள் நூற்றுக்கணக்கில் நித்தம் நித்தம் வீணில் கொலையுண்டு மாள்கிறார்கள். திருப்பூர்க் குமரன் தீர பரம்பரையிலே திருமலை தந்த தியாகி நடராஜன் செந்தமிழ் காக்க விரைந்தபோது செங்குருதி கொட்டச் சுட்டுக்கொல்லப்பட்டானே இனவெறி பிடித்த ஈனன் ஒருவனால், இதைப் பற்றி ஒரு வார்த்தை பேசினார்களா— வருத்தம் தெரிவித்தார்களா? மானைச் சுட்டதுக்கு மன்னிப்புக் கோருகிறார்களே, மனிதனைச் சுட்டதுக்கு மனவருத்தமாவது தெரிவித்தார்களா?

இவர்கள்தான் தாங்கள் பௌத்தர்களாம்—ஜீவகாருண்யத்தை உலகுக்கு உபதேசித்த உத்தமராம் புத்தரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர்களாம்! வாழ்க, இவர்கள் 'ஜீவகாருண்யம்'!

## ஆகஸ்ட்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திகதியைச் சத்தியாக்கிரக ஞாபகார்த்த தினமாகக் கொண்டாடவும் முடிவு செய்துள்ளோம். அந்தத் தினத்தில் தொண்டர்களின் அணிவகுப்பும், ஆர்ப்பாட்டமும் தமிழ் பிரதேசம் முழுவதிலும் நடைபெறும். 'யூனிபோம்' அணிந்த தமிழரசுத் தொண்டர்கள் தெருத்தெருவாகப் பவனிவந்து பொதுக் கூட்டங்கள் நடத்துவார்கள். இந்த நிகழ்ச்சி தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு அற்புதகாட்சியாகவும், உறுதியும் நம்பிக்கையும் ஊட்டும் நிகழ்ச்சியாகவும் அமையும் என்பது திண்ணம். அதைத் தொடர்ந்து, ஆகஸ்ட் போராட்டம் உக்கிரமாக நடைபெறும்''

## அம்மை காணாத...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் பல இடங்களிலும் அயராது அருஞ்சேவை செய்து வருகிறார்கள்.

### உதவுபவர்களை உதைத்துத் தள்ளுவதா?

இத்தகையவர்களைத்தான் மதத்தாலும் இனத்தாலும் அந்நியர் என்று கூறித் தேசியம் என்ற போர்வையில் அன்னவருக்கு எதிராக—அவர்களின் பொன்னான சேவைக்குப் பாதகமாகப் பேசக்கூடாதவனவற்றைப் பேசி நாட்டைவிட்டே அவர்களை ஓட்டிவிடத் துணிந்துவிட்டார்கள் இன்றைய அரசியல் பிரமுகர்களும் அவர்களின் பக்கப்பாட்டுக்காரர்களும். உதவுபவர்களை உதைத்துத் தள்ளும் உதவாக்கரை பண்பு எங்கிருந்துதான் இந்தக் குறுமதியாளரிடம்வந்து குடிகொண்டுள்ளதோ தெரியவில்லை.

### பரம்பரைப் பண்பு

இவர்கள்தான் தாங்கள் விமலதர்மன் வழிவந்தவர்கள் என்று வீறுப்புப் பேசுகிறார்கள். ஆமாம் அதிலும் அவ்வளவாகத் தப்பில்லை. குடிகளின் குறையைப் போக்க வேண்டிய கோன்—மன்னுயிரைத் தன்னுயிராக மதித்து வாழ வேண்டிய மன்னன், இராசதானியிலே கொடுநோயைக் கண்டதும் ஓடோடியும் போய் காட்டிலே கரந்துறைந்தானே, அவனின் பரம்பரையினர்தான் இவர்கள்! ருகமை வார்ட்டிலே தமது மத குருவுக்குக் கூட சிசுருஷை செய்ய மறுக்கும் பண்பு அவர்களுக்கு எங்கிருந்து வரும்? பரம்பரையென்று ஒன்றிருக்கிறதல்லவா!

கடைசியாகஒருவார்த்தை. அன்று விமலதர்மனுக்கு ஞானோதயம் ஏற்பட்டது போல இன்றுள்ள சிங்கள வெறியர்களுக்கும் ஒருநாள் அறிவுவரத்தான் போகிறது. அந்த நன்னாளிலேனும், சொந்த நாட்டைத் துறந்து, இங்கு நலியும் நமக்கு மனமுவந்து நம்மவரும் மறுக்கும், நற்தொண்டைச் செய்யும் நல்லவர்களை நாத்தழும்பேற வசவு பேசாமல், பதிலுக்கு வாழ்த்துவார்கள் என்பது திண்ணம்.

குறிப்பு: இக் கட்டுரையில் குறிப்பிட்ட பிக்குவுக்குக் கண்டிருந்தது அம்மையல்ல என்று பிந்திக் கிடைத்த ஆதாரமற்ற செய்தி ஒன்று கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறங்கு முகம் நோக்கிப் பிரதமர்!

## சமஷ்டி பற்றித் தமிழரசுக் கட்சியினரோடு கலந்து ஆலோசிக்க தான் தயாராம்

### தமிழ் பேசுவோருக்கு கவலையோ தொல்லையோ கொடுப்பது தமது நோக்கமில்லையாம்: நம்பச் சொல்கிறார்!

தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகள் குறித்து பிரதமர் திரு பண்டாரநாயகா தற்போது பேசும் தொனியில் கணிசமான அளவு பணிவும், அவரது நிலையில் குறிப்பிடத்தக்க அளவு இறக்கமும் தென்படுகின்றன. இந்தவருட ஆரம்பகாலத்தில் சமஷ்டி அரசியல் என்ற பேச்சுக்கே தன்னிடம் இடமில்லையென்று திட்டவட்டமாகத் தெரிவித்த பிரதமர் தற்போது சமஷ்டி அரசியல் பற்றித் தமிழ் அரசுக் கட்சியினரோடு பேச்சு வார்த்தைகள் நடத்தத் தாம் சித்தமாயிருப்பதாக அறிவித்திருக்கிறார்.

இதுமட்டுமல்லாமல், பாராளுமன்றத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு வன்னியசிங்கம் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் திரு பண்டாரநாயகா கீழ்க்கண்டவாறு பணிவன்புடன் கூறினார்:

#### உரிய அந்தஸ்து

"தமிழ் நண்பர்களுக்குத் தொல்லையோ அல்லது கவலையோ கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தினால் கடித உறைகளில் சிங்களம் பாவிக்கப்படவில்லை. நாடு பூராவிலுமே தமிழுக்குரிய அந்தஸ்து நிச்சயமாக அங்கீகரிக்கப்படும். அதிகாரிகள் தமிழில் கடிதம் எழுதும் பட்சத்தில் அதையும் நாம் ஆட்சேபிக்க மாட்டோம்.

நாட்டில் பல்வேறு பிரச்னைகளைப்பற்றியும் விசேஷமாக சுயபாஷைக் கொள்கையை அமுல்நடத்துவது பற்றியும் தமிழரசுக் கட்சியுடன் பேச்சு வார்த்தைகள் நடத்த நான் தயாராய் இருக்கிறேன். தமிழரசுத் தலைவர் திரு செல்வநாயகம் இதற்கு ஒரு திகதி குறிப்பிடுவாராஞல் அதை நான் மனதார வரவேற்பேன்"

#### திரு. வன்னியசிங்கம் கேள்வி

திரு வன்னியசிங்கம், அரசாங்க தமிழ் மேலதிகாரிகள்கூடக் கடித உறைகளில் சிங்கள அதிகார முத்திரை பதிக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தப் பட்டிருப்பதும், பிரஸ்தாப அதிகாரிகள் தமது ஆங்கில அதிகார முத்திரை பதிக்கும் கருவிகளைத் திருப்பி அனுப்பிவிட்டு அவற்றிற்குப்பதிலாக அனுப்பப்படவிருக்கும் சிங்களக் கருவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டிருப்பதும் ஏனென்று பாராளுமன்றத்தில் பிரதமரைக் கேட்டார். மேலும், வடக்கு மாகாணத்திலுள்ள தமிழ்பேசும் மக்களில் 98 விதமானேருக்கு அடியோடு சிங்களம் தெரியாதிருக்கும் பொழுது இப்படிச் செய்வது நியாயமா என்றும், சுவபாஷை இலாகா சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் தனது மேற்பார்வையிலேயே நடைபெறுவதாகச் சொல்லும் பிரதமர் பிரஸ்தாப நடவடிக்கைக்குச் சம்மதமளித்தாரா என்றும் திரு வன்னியசிங்கம் கேட்டார்.

இதற்குப் பதிலளிக்குமுகமாகவே பிரதமர் பண்டாரநாயகா மேற்குறிப்பிட்டபடி தெரிவித்தார்.

#### கடித உறையில் சிங்களம்

திரு வன்னியசிங்கம் தனது குற்றச்சாட்டுகளை நிரூபிக்குமுகமாக ஒரு அரசாங்க கடித உறையையும் பாராளுமன்றத்தில் பிரதிநிதிகள் கவனத்துக்குக்கொண்டு வந்தார். அதில் திரு ஏ. முருகேசு என்ற தமிழ்ப் பெயர் சிங்களத்தில் இருந்தது.

## யாழ்ப்பாணத்தில் இரண்டு விசேஷ பொலீஸ் அதிகாரிகள்!

### தமிழரசுக் கட்சியைக் கண்காணிக்க நியமனம்

### மட்டக்களப்பிற்கும் ஒருவர் அனுப்பப்பட்டிருக்கிறார்

(சுதந்திரன் நிருபர்)

யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகளையும், அக்கட்சியைச் சார்ந்த தலைவர்களின் நடமாட்டங்களையும் இரகசியமாகக் கவனித்து அவ்வப்போது மேலிடத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இன்ஸ்பெக்டர்கள் தரத்திலுள்ள இரண்டு பொலீஸ் அதிகாரிகள் முழுநேர வேலையாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது.

மேற்படி அதிகாரிகளில் ஒருவர் தமிழர். மற்றவர் பறங்கியர். இருவரும் ஏற்கனவே வேலை ஆரம்பித்துவிட்டார்கள். இப்படியான ஒரு பொலீஸ் அதிகாரி மட்டக்களப்புக்கும் அனுப்பப்பட்டிருக்கிறாராம். அவர் ஒரு மலாய்க்காரரர் என்றும் இரகசிய பொலீஸ் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் சொல்லப்படுகிறது.

யாழ்ப்பாணத்தின் பொலீஸ் அதிபராய் இருக்கும் திரு. ஜெபநேசன் தமக்கு வேறு இடத்திற்கு மாறுதல் தரவேண்டும் என்றும் தாம் ஒரு தமிழராய் இருப்பதால் எதிர்வரும் ஆகஸ்டில் எக்காரணம் கொண்டும் யாழ்ப்பாணத்தில்இருப்பது உகந்ததல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டியிருப்பதாகத் தெரிகிறது. திரு ஜெபநேசனுடைய திறமையிலும், விசுவாசத்திலும் பொலீஸ் இலாகாவிற்குப் பரிபூரண நம்பிக்கை இருக்கிறது. ஆயினும் ஆகஸ்ட் நெருக்கடியின்போது அவர் எவ்வளவு திறமையாகவும் விசுவாசத்துடனும் கடமை பார்த்தாலும் தவருன அபிப்பிராயங்களுக்கு இடமேற்பட வழியுண்டு என்று திரு ஜெபநேசன் பயப்படுவதாகத் தெரிகிறது. எனவே அவர் தம்மைச் சிங்களப் பிரதேசத்திற்கு மாற்றிவிடும்படிக் கேட்டுள்ளாராம்.

## "குறுக்கு. . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களையும், திராவிடம்தனித்து வாழவேண்டிய அவசியத்தையும் கிராம மக்களும் பொதுவாகப் புரிந்துகொள்ளக்கூடிய நிலைமையை இப்பொதுத் தேர்தல் உணர்த்தியுள்ளதை நாமெல்லாம் அறிந்து மகிழத்தக்கதாகும்.

#### பாராட்டு

இந்தப் பொதுத் தேர்தலில், அரசியல் கண்ணியத்தையும் எடுத்துக்காட்டியதோடு, தேர்தல் காலத்தில் அமைதியை நிலைநாட்ட திராவிட முன்னேற்றக் கழகம் அரும்பாடுபட்டு வந்திருக்கிறது. கழகத்தின் இப்பண்பு மாற்றுக் கட்சியினராலும், பத்திரிகையாளர்களாலும் அரசாங்க அதிகாரிகளாலும் போற்றப்படுவது நமக்கெல்லாம் பூரிப்பை அளிக்கிறது.

ஆட்சி பீடத்திலுள்ளவர்களின் போக்கு எவ்வாறிருப்பினும், இப்பொதுத் தேர்தலைப் பொறுத்தவரையில் அச்சம் ஊட்டும் அளவுக்கு பெருங்குழப்பமோ, சண்டை சச்சரவுகளோ ஏற்படாத வகையில் திறம்பட நடுநிலையில் நின்று பொலீஸ் இலாகாவினர் பணியாற்றியிருப்பது பாராட்டக் கூடியதாகும்.

#### வேண்டுகோள்

நாடெங்கிலுமுள்ள கழகக் கிளைகளும், கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் மேலும் உற்சாகமுடன் உறுதிகொண்டவர்களாகக் கழகப் பணியாற்றி எதிர்கால வெற்றிக்கான சூழ்நிலையை ஆங்காங்கு உருவாக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேம்.

## சிங்களக் குடியேற்ற....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திருமலையை அடைந்து, இதற்கும் வடக்கே புல்மோடைக்கும் பொறி வைத்துவிட்ட சிங்களக் குடியேற்றம், வெறும் பூச்சாண்டி என்று இன்னும் சில தலைவர்கள் எம்மை நம்பும்படி கேட்கிருர்கள்.

#### யாழ்ப்பாண எல்லையில் குடியேற்றம்

ஆபத்து ஏதோ தொலையிலிருப்பதாகவும் மொழிப் பிரச்னைதான் பயங்கரமானது என்ற பிராந்தியில் இன்னும் இருக்கும் தமிழ் பேசும் பொதுமக்கள் சிலர் இதுவொன்றைக் கவனித்துக்கொள்ளட்டும். கிழக்கிலங்கையின் தென் கோடியிலிருந்து வடக்கே புல்மோடைவரை விரிக்கப்பட்ட குடியேற்ற வலை யாழ்ப்பாணத்திலிருந்து ஒன்றும் அதிகதூரத்தில் இல்லை. புல்மோடைக்கு வடக்கேயுள்ள ஊர் வேறெதுவுமல்ல வடமாகாணத்தின் முல்லைத்தீவுதான்! சிங்களக் குடியேற்றம் யாழ்ப்பாணத்து எல்லையை அடைந்துவிட்டது. பிரமையல்ல இது, நிஜம்.

இந்த நேரத்திலுமா ஒற்றுமை, ஒத்துழைப்பு, ஏக இலங்கை கோரும் தமிழ் தலைவர்கள் சிலருக்கு அநியாயம் புரியவில்லை, அபத்தம் விளங்கவில்லை? மொழிப் பிரச்னை ஒன்றுதானா எமது பிரச்னையா? (தொடரும்)

## சிங்கள மொழியை திணிக்க..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர்களாக்கப்பட்டால் இவர்கள் இரண்டு எஜமானர்களின் கீழ் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாவார்கள். அரசாங்கம் ஒரு எஜமானராகவும், முகாமைக்காரர் மற்ருெரு எஜமானராகவும் இருப்பார்கள். இரண்டு எஜமானர்களின் கீழ் வேலை செய்வதில் உள்ள கஷ்டங்கள் ஒரு புறமிருக்க, பாடசாலைகளின் முன்னேற்றமும் பிள்ளைகளின் கல்வித் தராதரமும் இதனுல் பெரிதும் பாதிக்கப்படும்.

#### இதுவா நீதி?

4. "முகாமைக் காரருக்கு மாருகப் புகார்கள் கிடைத்திருப்பதாலேயே இந்த மாற்றத்தைச் செய்ய விரும்புவதாக கல்வி அமைச்சர் கூறுகிருர். முகாமைக்காரருக்கு எதிராகப் புகார் கிடைத்தால் முகாமைக்காரரைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டத்திருத்தங்களைச் செய்வதை விட்டுவிட்டு, ஆசிரியர்களின் உரிமையில் கைவைக்கும் சட்டத்திருத்தத்தை ஏன் கொண்டுவர வேண்டும்? குற்றம் செய்கிறவர்களைத் தண்டிப்பதற்குப் பதிலாக குற்றம் செய்யப்படுபவர்களைத் தண்டிப்பது தான் கல்வி அமைச்சர் கையாளும் நீதி முறையோ என்று கேட்க வேண்டியிருக்கிறது.

#### ஆசிரியர்களுக்கு இடைஞ்சல்

5. "உதவி பெறும் பாடசாலை ஆசிரியர்கள் அரசாங்க ஊழியர்கள் ஆக்கப்பட்டால், நாளடைவில் அவர்கள் ஸ்தலஸ்தாபன ஊழியர்களின் தரத்தை அடைவார்கள். அப்போது அவர்கள் இடத்திற்கு இடம் மாற்றம் செய்யப்படலாம். இந்த நிலை ஏற்படுவது, சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு இடைஞ்சலாக இருப்பது ஒருபுறமிருக்க, சில பாடசாலைகளின் கல்வி முன்னேற்றத்திற்கு இது குந்தகமாக அமையும். இந்தத் துர்ப்பாக்கிய நிலை ஏற்படுவதை எந்த உதவி நன்கொடை பெறும் பாடசாலையும், அதன் முகாமைக் காரரும் விரும்புவதற்கில்லை என்பதும் திண்ணம்.

#### சிங்களத்தைப் புகுத்த பூர்வாங்க சதித் திட்டம்

6. "எல்லாவற்றிற்கும் மேலாக இந்த மாற்றத்தினுல் இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் ஏற்படக்கூடிய அபாயத்தையும் சிக்கலையும் ஆசிரியர்களும் முகாமைக்காரர்களும், தமிழ் பேசும் பொது மக்களும் எண்ணிப்பார்க்க வேண்டும். உதவி பெறும் பாடசாலை ஆசிரியர்கள் நேரடி அரசாங்க ஊழியர் ஆக்கப்பட்டபின் ஆசிரியர்களுக்கும் முகாமைக்காரருக்குமிடையில் அல்லது முகாமைக்காரர்களுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் ஏதாவது பிணக்கு ஏற்பட்டால் அரசாங்கம் அதைச் சாட்டாக வைத்துக்கொண்டு பாடசாலை முழுவதையும் தன் சொந்த அதிகாரத்துக்குக் கீழ் சுவீகரித்துக்கொள்ள இடமுண்டு. ஸ்தல ஸ்தாபனங்கள் சில இப்படி சுவீகரிக்கப்படுவதை உதாரணமாகக் கொள்ளலாம். இதனுல் சில உதவி நன்கொடைப் பாடசாலைகளின் தனிச் சுதந்திரமும், மத சுதந்திரமும், மொழிச் சுதந்திரமும் பறிபோய் விடலாம். இப்போது அரசாங்கம் அரசாங்கப் பாடசாலைகளில் கட்டாயப்படுத்தி சிங்கள ஆசிரியர்களை நியமித்து வருகிறது. சிங்களத்தைப் பாடமாக ஏற்று நடக்கும்படி வற்புறுத்தி வருகிறது. உதவி நன்கொடைப் பாடசாலையின் முகாமைக்காரர்களும் ஆசிரியர்களும் இதை எதிர்த்து நிற்கிருர்கள். ஆசிரியர்கள் அரசாங்க ஊழியர்களாகிவிட்டால் பின்பு எப்படி வெளிப்படையாக எதிர்க்க முடியும்? எனவே கல்வி அமைச்சரின் இந்தப் புதிய திட்டம் முக்கியமாக தமிழ் பாடசாலைகளில் சிங்களத்தைப் புகுத்துவதற்குப் பூர்வாங்கமாக வகுக்கப்படும் சதித்திட்டமோ வென்று சந்தேகிப்பதற்கு இடமிருக்கிறது.

#### எதிர்க்க வேண்டும்

7. "எனவே இந்தத் திட்டத்தை சம்பந்தப்பட்ட ஆசிரியர்களும், ஆசிரிய சங்கங்களும், முகாமைக்காரர்களுக்கும், இதர கல்வி ஸ்தாபனங்களும், தமிழ்ப் பொது மக்களும் ஒன்றுதிரண்டு எதிர்க்க வேண்டும் என்பதே என் அபிப்பிராயமாகும்."


## சட்ட மறுப்பு

என்றால் என்ன? எதற்காக? எப்படி?

என்பதை விளக்கும் ஓர் அரிய நூல்

திருமலைத் தியாகி நடராஜனுடைய படத்துடன் மேலும் பல படங்கள் அடங்கிய அழகிய அரசியல் பிரசுரம்

தொகுப்பாசிரியர்கள்: திருவாளர்கள்:
எஸ். டி. சிவநாயகம், எஸ். வி. பி. பிள்ளை

வெளியிடுவோர்:
**தமிழ் ஆட்சிப் பதிப்பகம்,**
156, செட்டியார் தெரு, கொழும்பு—11.

எமது அடுத்த வெளியீடு: "ஈழத் தமிழகத்தின் தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களுக்கு எம். ஈ. பி. அரசாங்கம் சலுகை அளிப்பது உண்மையா?

## மூதூர்த் தொகுதியின் கல்வி விவசாய அபிவிருத்திக்கு அரசாங்கம் செய்ததென்ன?

நமது மூதூர் தொகுதியில் சனத் தொகை அதிகமாக உள்ள கிராமம் கிண்ணியா. சனத் தொகையில் இரண்டாவதாக விளங்கும் கிராமம் மூதூர். இந்த இரண்டு ஊர்களிலும் பெரும்பான்மையினராக வாழும் குடிகள் முஸ்லிம்களே. இந்த உண்மை அனைவருக்கும் தெரியும்.

### முதல் பரிசு: ஒதுக்கிய பணம் ரத்து

தொகுதியில் முக்கியத்துவம் பெற்ற கிராமமான மூதூருக்கு ஓர் 'இறங்கு துறை' அமைப்பதற்காகப் பழைய அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்திற் பணம் ஒதுக்கிற்று. அந்த வேலையும் நடைபெறுவதாகவே இருந்தது. ஆனால் இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்ததும் முதலாவது வரவு செலவுத் திட்டத்திலேயே இறங்கு துறைக்கென்று ஒதுக்கப்பட்ட பணத்தை நிராகரித்துவிட்டது! இந்த வகுப்புவாத அரசாங்கம் முதல் வருடத்தில் நமக்குத் தந்த பரிசு இது! இந்த அழகிற்தான் அதன் தலைவர்கள் முஸ்லிம்கட்கு விசேட சலுகைசெய்கிறோம் என்று நாள் தவருமற் பறையடிக்கிருர்கள். என்ன விசித்திரம் இது!

### பாடசாலைகளின் பரிதாபகரமான நிலை

அடுத்ததாக இந்தத் தொகுதியின் மிகப் பெரிய கிராமமான பெரிய கிண்ணியாவிலேயே வசதியான பாடசாலை கிடையாது. ஆண் பாடசாலையும் பெண் பாடசாலையும் அரைஅரை நேரங்களாக ஓர் 'கோழிக் கூண்டில்' நடைபெற்று வருவது பகிரங்க ரகசியம். அதே நேரத்தில் நேற்றுக்கொண்டு வந்து குடியேற்றப்பட்ட சிங்களச் சகோதரர்கள் வாழுமிடங்களில் அரண்மனை போன்ற பாடசாலைகள்! எங்கள் கல்வி வளர்ச்சிக்கு அரசாங்கம் சலுகையும் வசதியும் செய்துதருகிறது என்று நம்பும் இஸ்லாமியச் சகோதரர்கள், குடியேற்றத் திட்டங்களில் கட்டப்பட்டிருப்பதைப் போன்ற சிறந்த பாடசாலைகள் தங்கள் கிராமங்களிலும் இருக்கிறது என்று தைரியமாகச் சொல்ல முடியுமா?

**வ. அ. இராசரத்தினம்**

### உத்தியோகஸ்தர்கள்

அடுத்ததாக இந்தத் தொகுதியின் கல்விப் பிரச்னையை நாம் சற்று ஆராய்ந்து பார்ப்போம். உலகக் கல்வியறிஞர்களிடம் கல்வியின் பயன் என்ன என்று கேட்டால் 'சமூகத்தோடு ஒட்டி வாழ்தல், சூழ்நிலைக்கியைய தன்னை வசப்படுத்துதல்' என்றெல்லாம் பெரிய தத்துவங்களைச் சொல்வார்கள். ஆனல் இலங்கையைப் பொறுத்தவரையில் அரசாங்க உத்தியோகமே கல்வியின் பயனாக இதுவரை காலமும் இருந்துவந்திருக்கிறது. எனவே கல்வியின் தரத்தை அளவிட நம் தொகுதியில் இருக்கும் அரசாங்க உத்தியோகங்களை நாமும் பார்ப்போம். நம் தொகுதி மக்கள் வகிக்கும் அரசாங்க உத்தியோகங்களின் தொகை இவை. வாசித்தால் நமக்கு வெட்கமும் துக்கமும் உண்டாகும். ஆனலும் படித்துத்தானே ஆகவேண்டும்.

| | |
|---|---|
| சிவில் சேவையாளர்: | 0 |
| டாக்டர் | 0 |
| பொலீஸ் | 0 |
| நொத்தாரிஸ் | 0 |
| சேர்வேயர் | 0 |
| பட்டதாரிகள் | 0 |
| சுகாதாரப் பரிசோதகர் | 0 |
| ரயில்வேஉத்தியோகத்தர் | 1 |
| அப்போதிக்கரிகள் | 4 |
| போஸ்டல் உத்தியோகத்தர்கள் | 5 |
| பொது லிகிதர்கள் | 4 |
| கூட்டுறவுப் பகுதியினர் | 0 |
| இலங்கை வானெலி | 1 |
| பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர் | 0 |
| பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்கள் (தமிழர்) | 9 |
| பயிற்றப்பட்ட தமிழாசிரியர்கள் (முஸ்லிம்கள்) | 17 |
| ஆசிரியைகள் | 2 |

மேலே குறிப்பிட்ட பட்டியலின்படி நம் ஊரில் இருக்கும் ஆகக் கூடிய உத்தியோகத்தர்கள் ஆசிரியர்களே. ஆனல் இந்த ஆசிரியர்களே நம் தொகுதிப் பாடசாலைகளை நிரப்பப் போதுமானவர்களாயில்லை.

### சிங்களக் கல்வி

இந்நிலையிற்தான் சிங்களம் மட்டும் சட்டம் நம் கழுத்தையறுக்க வந்திருக்கிறது. இனிமேல் நம் தொகுதியில் இருக்கும் மக்கள் எந்த உத்தியோகத்திற்குப் போட்டி போடுவதாக இருந்தாலும் அதற்குச் சிங்களம் தெரிந்திருக்கவேண்டும். தற்போது ஆங்கில எஸ். எஸ். சி. சித்தியடைந்திருக்கும் சிலர் அரசாங்க உத்தியோகங்களை அடைவது எப்படி? அந்த ஆசையையே விட்டுவிட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நாம் கொண்டுவரப்பட்டிருக்கிறோம். தற்போது எஸ். எஸ். சி. சித்தியடைந்திருக்கும் விரல் விட்டெண்ணத்தக்க மாணவர்கள் சிங்களம் படித்து வருவதற்கிடையில் வயதெல்லை கடந்துவிடும்.

இன்னும் அரசாங்கம் கொடுத்திருக்கும் இரண்டு வருட அவகாசத்தில் நாம் எல்லோரும் சிங்களம் படித்து விட முடியுமா? அப்படி ஒருகால் முடிந்தாலும் கூட நாம் சிங்களம் படிக்கலாமா?

ஆகவே சிங்களச் சட்டத்தை மிக மிக மூர்க்கமாக எதிர்க்கக் கடமைப்பட்டவர்கள் நாங்கள். இல்லாவிட்டால் 'இப்போதே மிக மிகப் பிற்போக்கான நிலையிலிருக்கும் நம் தொகுதி இனிமேல் அரசாங்க உத்தியோகங்களையிட்டுக் கனவுகூடக் காண முடியாது!

### விவசாயத் திட்டங்கள்

உத்தியோகங்கள் போகட்டும், விவசாயத்தை எடுத்துக் கொள்வோம். அல்லையிலும் கந்தளாயிலுமாக இரண்டிலும் பெரிய விவசாய அபிவிருத்தித் திட்டங்களைக் கண்டது இந்தத் தொகுதி. இந்த இரண்டு திட்டங்களாலும் இந்தத் தொகுதி மக்களிற் பெரும்பான்மையினராக இருக்கும் முஸ்லிம்கள் கண்ட பயன் என்ன?

### குடியேற்றத் திட்டத்தில் முஸ்லிம்கள்

புள்ளிவிவரங்களோடு பார்ப்போம். இத் தொகுதியில் தற்போது இருக்கும் சுமார் 11000 முஸ்லிம் வாக்காளர்களில் சொந்த நிலம் இருப்பவர் ஆயிரமும் இராது. மீன்பிடி, வியாபாரம், வண்டியோட்டல் போன்ற தொழில்களில் சுமார் ஆயிரம் பேர் போய்விட்டால் மீதியுள்ள 9000 பேர் நிலமற்ற விவசாயிகள். இந்த 9000 பேரில் எத்தனை பேருக்கு இந்தக் குடியேற்றத் திட்டங்களிற் காணி கிடைத்திருக்கிறது? 25 பேருக்கு ஒரு ஏக்கர் விகிதப்படி கிடைத்தாலும் மொத்தம் 360 ஏக்கர் காணி கிடைத்திருக்க வேண்டும். எத்தனை பேருக்குக் காணி கிடைத்திருக்கிறது? அல்லை

(11-ம் பக்கம் பார்க்க)


# சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 36.

# ரொக்கப் பரிசு ரூ. 1,500

**முதலாவது பரிசு ரூ. 1000. | இரண்டாவது பரிசு ரூ. 400**

**அதிகப்படியான விடைகள் அனுப்புபவருக்கு விசேஷ பரிசு ரூ. 100-00**

**முடிவு திகதி 10-4-57 பி. ப. 5மணி சரியான விடை 14-4-57ல் பிரசுரிக்கப்படும்**

பரிசு பெற்றேர் விபரம் 21-4-57ல் பிரசுரிக்கப்படும் | பரிசு பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை 29-4-57ல் செக் மூலம் அனுப்பப்படும்

## இடமிருந்து வலம்

1. எந்த ஒரு சுபகாரியமும் முடிவடையும் போது இது பாடுவது தமிழர் வழக்கம்.

3. யுத்த காலத்தில் பஞ்சமும் பட்டினியும் ஏற்படும் போது இவன் பாடு கொண்டாட்டந்தான்.

6: மீன் முட்டை

8: ஒரு நரம்பு வாத்தியம்

10. பயங்கர ரூபிணியாகச் சித்திரிக்கப்படும் சிவசக்தி:

11: இருள்சூழ்ந்த இடத்தில்தான் சினிமா......சாத்தியப்படும்.

12. மூன்று அடிகொண்ட இந்த அளவையினுல்தான் துணியின் நீளத்தை மட்டிடுவார்கள்.

17. நிறைவானது

20. முனிவர்

22. எட்டுத் திசைகளுக்குமுரிய காவல் தெய்வங்கள்

24. பூக்கூடை

25. இது நன்ருயில்லாவிட்டால் சினிமாவை நன்கு ரசிக்க முடியாது.

## மேலிருந்து கீழ்

1. முருகக் கடவுளின் வாகனம்

2. பெண்கள் கையிலணியும் ஆபரணம்

3. மலர்தல்

4. பழத்தைப் பிழிந்தெடுத்தால் இது கிடைக்கும்.

5. பெண் மானின் கண்களில் எப்போதும் இது காணப்படும்.

7. தாளுண்ட நீரைத் தலையாலே தரும் விருட்சம்

8. இலையின் குருத்து

9. சிலம்பொலித்த காவிரிப்பூம்பட்டினம்

10. திருமாலை இந்த வண்ணன் என்றும் சொல்வதுண்டு.

13. மனப்பேதம்

14. கிழேமுலகி லொன்று

15. இந்திய தேச பக்தர்கள் விரும்பி அணிந்த ஆடை


16. முகில்.

18. மன்மதன் மனைவி.

19. நீர்க்கலையம்உடைந்து கிடக்கிறது.

21. விஞ்ஞான யந்திரக் கலையில் இந்தப் பழங்கால முனிவர் கைதேர்ந்தவர் என்று சொல்லப்படுகிறது.

23 ஐந்திணை நிலங்களில் கொடியது.



பிரவேசக் கட்டணம் ஒரு கூப்பனுக்கு சதம் 50
மூன்று கூப்பன்களுக்கு ரூபா 1-00

பெயர்..........................................

விலாசம்..........................................

..........................................

அனுப்பும் மொத்த கூப்பன்களின் தொகை..............

கட்டணத்தின் தொகை ரூ......ச......

போஸ்டல் ஆடர் வவுச்சர் இலக்கங்கள்...........

போட்டி அனுப்பும் விலாசம்:

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 36,

த. பெ. இ. 1183, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை:

# வண்டியில் வெறியாட்டம்

—இளம்பூரணன்

நடுநிசி. அமைதியின் ஏக அதிகாரம் எங்கும் நிலவிற்று. காற்றின் அசைவினுல் தென்னை மரங்கள் தங்கள் சிரத்தைச் சிலுப்பும் ஒலியைத் தவிர வேறெவ்வித சத்தமும் எழவில்லை. வெண்மதியின் விண்பவனியின்மையால் அகில உலகுமே இருளின் கருமையிலே தோய்ந்து கிடந்தது.

புரண்டு படுத்தான் செல்லப்பன். அந்த அறையிலே சிணுங்கி எரிந்துகொண்டிருந்த விளக்கின் மங்கிய பிரகாசத்தில் அவனுடன் இன்னும் இரு ஜீவன்கள் சயனித்துக்கொண்டிருப்பது தெரிந்தது ஒன்று அவனின் காதல் மனையரசி மட்டுமல்லாமல், இல்ல அரசியாகவும் வந்துவிட்ட மெனிக்கா. மற்றது ஒட்டிய அந்த இரு உள்ளங்களின் அன்புப் பெருக்கிலே விளைந்த நன்முத்து. ஆம், அவர்களின் ஆண் குழந்தை அந்த ஒரு வயதுக் குழந்தையின் பட்டு மேனியைத் தன் வளைக்கரத்தால் இறுக அணைத்திருந்தாள் அவள். அந்த அணைப்பிலே பெற்ற தாயின் பேரன்பு பொங்கித் ததும்பிற்று.

செல்லப்பனின் சொந்த ஊர் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு கிராமம். நொடித்துப்போன குடும்பத்திலே பிறந்து, வறுமையின் அரவணைப்பிலேயே தன் இளமைப் பருவத்தைக் கழித்தான் அவன். ஒவ்வொரு கட்டத்திலும் துன்பத்தின் கோரத் தாண்டவமேயன்றி இன்பத்தின் சாயல்கூடப் படாமல் அவன் வாழ்நாள் ஓடிற்று. அவனை ஏதோ இரண்டெழுத்துப் படிக்க வைத்தனர் பெற்ருேர். ஆனுல் பொருளாதாரப் பற்ருக்குறை சுண்டிப் பிடித்ததினுல் மேற்கொண்டு கற்று, இன்று எல்லோரும் நாட்டம்கொள்ளும் உத்தியோக அந்தஸ்திற்கு அவனுல் உயர முடியவில்லை. எனவே தாய் தந்தையர் அவனை அம்பாந்தோட்டையிலுள்ள யாரோ ஒரு உறவினரின் கடைக்கு அனுப்பி வைத்தனர். கடை ஊழியத்தில் காலம் கரைந்தது; அறிவும் விரிவடைந்தது. இருபது வயதையடைந்ததும் செல்லப்பன் தான் அதுகாலவரை சேமித்து வைத்த சொற்பதொகையைக்கொண்டு சொந்தத்திலேயே ஒரு கடையை ஆரம்பித்தான்.

வியாபாரக் கலையின் நெளிவு சுளிவுகளையெல்லாம் நன்கறிந்திருந்த அவன் வெகுசீக்கிரத்திலேயே ஒரு ஸ்திரமான நிலையை அடைந்துவிட்டான். பெற்ருேருக்கும் மாதம் இருபது, முப்பது என்று அனுப்பத் தவறுவதில்லை. இந்நிலையிலேதான் மெனிக்காவின் உறவு அவனுக்குக் கிட்டியது. கண்களின் ஜாடை வீச்சிலே வேரூன்றிய காதல், அவர்களின் அந்தரங்கச் சந்திப்பிலே குருத்தெறிந்து, கிளை பரப்பி வளர்ந்து உறுதியாயிற்று. அவர்களின் இதயபூர்வமான விருப்பத்திற்குக் குறுக்கே அவனின் தந்தை வேலியிடாமல் போகவே, வெகுசீக்கிரத்திலேயே அவர்களின் மணமும் இனிது நடந்தேறியது. அவன் பெற்ருேரும் அவன் போக்கிலேயே போகவிட்டுவிட்டனர்.

உள்ளத்தால் ஒன்றிய அத்தம்பதிகளின் வாழ்வு வேதனையைக் கிளப்பும் சுளிகளெதுவுமில்லாத ஆற்று வெள்ளம்போல் ஆனந்தமாக ஓடிற்று. காலம் ஒரு வருடத்தை ஈன்றுவிட்டுச் சென்றது. ஒளியுடன் விளங்கிய அக்குடும்பத்தை மேலும் துலங்கச் செய்யத் தங்க விக்கிரகம்போன்ற ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள் மெனிக்கா. தான் தந்தையாகிவிட்ட பூரிப்பிலே செல்லப்பனுக்குத் தலைகால் புரியவில்லை.

★

இரவு ஆகாரத்தை முடித்துக்கொண்டு நாற்காலியில் வந்தமர்ந்தான் செல்லப்பன்.

"அப்பாடா என்ன ஆயாசம். அது சரி ஜயசுந்தர் உறங்கிவிட்டானு?"

'ஓம்' என்று கூறிக்கொண்டே மடித்த வெற்றிலையை நீட்டினுள் மெனிக்கா. வெற்றிலையை வாங்கினவன் அவள் கரத்தையும் சேர்த்துப் பற்றி இழுத்து அவளை அந் நாற்காலியின் கைப்பிடியில் அமர்த்தினுன்.

"சும்மா போங்கள்" என்று செல்லமாகக் கடிந்துகொண்டே அவ்விடம்விட்டு நழுவ முயன்ருள் அவள். எட்டி இழுத்தவன் கைககு அவள் மேலாக்கே அகப்பட்டது. அந்த இழுப்பின் வேகத்தில் மேலாக்குச் சரிந்து விழுந்ததுமன்றி அவளும் அவனின் பரந்த மார்பில் வந்து விழுந்தாள்.

"இன்னும் குழந்தைப் பிள்ளை மாதிரி......" என்றிழுத்தவள் சட்டென்று, "அடடே உங்களுக்கு ஒரு கடிதம் வந்திருந்தது, மறந்துவிட்டேனே" என்று கூறிவிட்டு அவனின் பிடியினின்றும் விடுபட்டுச் சென்று ஒரு கடிதத்தைக் கொணர்ந்து கொடுத்தாள்.

முதல் முறை பூராவையும் வாசித்துமுடித்தான். இரண்டாவது தடவை "அன்னைக்குச் சிறிது சுகமில்லை. அத்துடன் குடும்ப விஷயங்கள் பல பெரிய சிக்கலில் இருக்கின. ஆகவே இது கிடைத்தவுடன் புறப்பட்டு வந்தால் நல்லது" என்ற வாக்கியங்களை மட்டும் வாசித்தான்.

ஆனந்தம் களிகூத்தாடிய அவன் முகபாவத்தில் துயரத்தின் ரேகைகள் கோடு கிழித்தன.

"மெனிக்கா நாளைக் காலை எல்லோரும் ஊர் புறப்பட வேண்டும். வேண்டிய ஆயத்தங்களைச் செய்" என்று ஆக்ஞாபித்தான் செல்லப்பன்.

★

மருதானை ஸ்டேஷனில் ஒரு பெரிய கூட்டம். "தமிழன் எங்கள் விரோதி. எங்களை அடக்கியாளப் பார்க்கிருன். அவனை ஒழிப்போம். தனிச் சிங்களமே எமக்கு வேண்டும்" என்று கத்தி ஆர்ப்பாட்டம் செய்தனர் கூட்டத்திலுள்ளோர். 'அடியுங்கள் தமிழனுக்கு, பிளவுங்கள் மண்டையை' என்ற வெறிக் கூச்சல் எங்கும் ஒலித்தது.

புகைவண்டி வந்து நின்றது. பெட்டிக்குப் பத்துப் பதினைந்தாகச் சிதறிப் பறந்தனர் அங்கு கூடி நின்ற வெறியர்.

அன்று ஆகஸ்ட் 20 என்பது அவனுக்கு அப்பொழுதுதான் ஞாபகத்துக்கு வந்தது. மெனிக்கா பீதியால் கையைப் பிசைந்துகொண்டு மிரள மிரள விழித்தாள். குழந்தை உறங்கிக்கொண்டிருந்தது. அவர்களின் துரதிர்ஷ்டம் அப்பெட்டியில் வேறெருருவரும் இல்லை.

ஏனைய பெட்டிகளிலுள்ள பிரயாணிகளின் அவலக் குரல்கள் அங்கு கேட்டன. அவமானம் தாங்கமாட்டாமல் அலறும் பெண்கள்; அடியுண்டு ஓலமிடும் ஆண்கள்; சின்னஞ் சிறிசுகளின் பயங்கரக் கூச்சல். அப்பப்பா ஒரே அமர்க்களம்!

அந்தப் பெட்டியின் கதவு படீர் என்று திறக்கப்பட்டது. 'தமிழனடா அவன்' என்று கத்திக் கொண்டே உள்ளே பாய்ந்தனர் நாலைந்துவெறியர்கள். மெனிக்கா கணவனின் கழுத்தைக் கட்டிப் பிடித்தாள். பயனென்ன அவளைப் பிடுங்கி ஒரு மூலையில் தள்ளிவிட்டனர். "யாழ்ப்பாணத் தமிழனுக்கு இங்கென்னடா வேலை? எங்களை இனிமேலும் கட்டி ஆளமுடியுமா?" என்று கேட்டுக் கொண்டே அடி, உதை, மிதி எல்லாம் சரமாரியாக விழுந்தன.

தமிழினத்தின் தனிப் ... னுக்கு இரக்கம் ... டும் இயல்பு அளவு கடந்து சோதிக்கப்பட்டுவிட்டது. செல்லப்பன் அக்கணமே தமிழனுன். பரம்பரை வீரம் தடம்புரண்டுவந்து அவன் முகத்தில் ஒளி பரப்பியது. வெறியர்களை உற்றுப்பார்த்தான் ஒரு கணம். "நெருங்காதீர்கள்—நாசமாவீர்கள் —துணிந்துவிட்டேன்" என்று முழங்கியவாறு இடுப்பில் பணப்பையோடு செருகியிருந்த 'றிவோல்வரை' எடுத்து நீட்டினுன்.

வெறியர்கள் யாரும் ஆயுதபாணிகளாய் வந்ததாயில்லை. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளையடிக்க வந்த வீதிசுற்றும் சோதாக்கும்பலிடம் ஆயுதமேது? மிரள மிரள விழித்தார்கள். செல்லப்பன் நீட்டிய கையை நீட்டியபடியே வைத்திருந்தான். றிவோல்வர் பொறியில் விரல் முட்டியது. ஒருகணம் தாமதித்திருந்தால் றிவோல்வர் தன் வேலையைச் செய்திருக்கும். உணர்வு திரும்பப்பெற்ற மெனிக்கா "பொறுங்கள்!" என்று கத்தியவாறு குறுக்கிட்டாள். தம்பி...பியதாசா அவனைக் கொல்லாதீர்கள் என்று உரத்துச் சத்தமிட்டாள். ஆவேசத்தோடு நின்ற செல்லப்பனுக்கு ஆளை அடையாளம் கண்டுபிடிப்பது எப்படி? கண்ணை வெட்டி முழித்துப் பார்த்தான். மூடிய கண் திறக்கு முன் பியதாசா உட்பட அனைவரும் திடுதிப்பென்று குதித்தோடினர்.

எங்கே ஓடுவது? ஒரு தமிழர் பட்டாளமே அங்கு வந்துவிட்டது. எப்படித்தான் தகவல் கிடைத்ததோ எங்கிருந்து வந்ததோ அது யாருக்கும் தெரியாது. மருதானை ஸ்டேசனென்ருல் அது என்ன சிங்களவர் கோட்டையா? தமிழ் அதிகாரிகள்தானே அங்கு அதிகம். வெறியர்களுக்குத் தப்பி ஓட இடம் கிடைக்கவில்லை. ஸ்தலத்துக்கு விரைந்துவந்த பொலீஸாரின் ஜீப்பில் அவர்களுக்கு 'மதிப்பான' இடம் கிடைத்தது. அங்கு கூடிய தமிழர்கள் அனைவரும் ஆளுக்கொரு பிளாற் பாரம் ரிக்கட் பெற்றுக்கொண்டு உள்ளே போய் இம்சிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டுவெளியே வந்தார்கள். அப்பொழுது ரேடியோவில் சொல்லப்பட்ட செய்தி அனைவரின் காதுகளுக்கும் இன்விருந்தாய் அமைந்தது.

"திருமலை கொள்ளமுடியாத அளவுக்குத் தொண்டர்கள் கூடிவிட்டார்கள். மேலும் நாலா பக்கங்களிலிருந்தும் தொண்டர்கள் பவனிவந்து கொண்டிருக்கிருர்கள். கூட்டத்தைப் பொலீஸாரால் சமாளிக்க முடியவில்லை. வடக்குகிழக்கு மாகாணங்களில் அரசாங்கத்தின் சகல சட்டங்களும் மறுக்கப்பட்டு வருகின்றன. தலைநகரிலும் பிற இடங்களிலும் தமிழ் அதிகாரிகளின் ஒத்துழைப்பு இன்று அதிகாலையிலிருந்து அரசாங்கத்துக்கு மறுக்கப்பட்டு வருகிறது.

இதையடுத்து மந்திரி சபை அவசர அவசரமாகக் கூட்டப்பட்டிருக்கிறது. முடிவு இன்னும் அரைமணி நேரத்தில் தெரியும். — நீங்கள் கேட்பது இலங்கை வானெலியின் செய்தியறிக்கை.'

★

வண்டி விரைந்தது. வழக்கத்துக்கு மாருக மூன்று மணிநேரம் முன்னதாகவே வண்டி யாழ்ப்பாணத்தை அடைந்தது. தமிழ் முழக்கம் வானைப் பிளந்தது. அங்கு காலடி எடுத்து வைப்பதில் மெனிக்காவே செல்லப்பாவைக் காட்டிலும் மிகுந்த மகிழ்ச்சி யடைந்தாள். தனித்துவமுடைய தமிழ்ப் பண்பு சிங்கள மெனிக்காவை ஈர்த்ததில் வியப்பொன்றுமில்லையே.

## முஸ்லிம்களுக்கு எம். ஈ. பி....

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

யிலே முஸ்லிம் குடும்பங்கள் குடியிருக்க வழியின்றி வெளியேறிவிட்டன. கந்தளாயில் ஒரு சில குடும்பங்கள் எப்படியோ வாழ்கின்றன. சிங்களக் குடியேற்றக் காரரின் நெருக்குதலுக் கிடையில், ஆமாம், சில மாதங்களுக்கு முன் முஸ்லிம்களின் பள்ளிவாசல் ஒன்று கந்தளாயிற் சிங்கள மக்களாற் தீ மூட்டப்பட்டது. அப்படியான கஷ்டங்களுக்கிடையிற்தான் வாழ்கிருர்கள் கந்தளாய்க் குடியேற்றப் பகுதியிலிருக்கும் முஸ்லிம்கள்.

### மக்களைப் பலியிடுவதா?

இப்படியாகக் கல்வியிலும், மற்ற எல்லாத்துறைகளிலுமே அரசாங்கம் நம்மை ஒதுக்கித் தள்ளுகையில் ஒரு சிலர் ஒத்துழைம்புக் கோருகிருர்கள்! இந்த ஒத்துழைப்புக் கோருபவர்களின் இலட்சியம் எல்லாம் ,ஊரில் இருக்கும் பாடசாலைக்குத் தலைமையாசிரியராய் இருப்பதைத் தவிர வேறு ஏதுவாயிருக்க முடியும்?

பதினைந்து பதினுறு ஆசிரியர்கட்காக, 11000 மக்களின் வாழ்வு ஒரு போதும் பலியிடப்படக்கூடாது. அப்படிப் பலியிடப்படுவதைப் பொது மக்கள் விளங்கிக் கொண்டு இந்த அரசாங்கத்தை ஒழித்துக்கட்ட அவர்கள் விரையும் காலம் வெகு தூரத்திலில்லை.

## சூரியன்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பது அறியக் கிடக்கிறது. அங்ஙனமாஞல் விரைவில் கதிரவனின் தாங்கமுடியாத வெம்மையால் பூமி எரிக்கப்பட்டு அழிந்தொழிவது திண்ணமல்லவா? மற்றெருரு ஆய்வுப்படி, 'கதிரவனிடத்துள்ள வெம்மை நாளடைவில் குறைந்து கொண்டே வருகிறது' என்பதும் 'ஒரு காலத்தில் கதிரவன் ஒரு வெறும் சாம்பலாகக் கூட மாறலாம் என்பதும்' அறியக்கிடக்கின்றன. இவை உண்மையாஞல் என்ன நிகழும் என்பதை எண்ணிப் பார்க்கக் கூட அச்சமாயிருக்கிறது.

—

## பொலீஸ்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர்: (கோபாவேசத்துடன்) போதும் போதும் உங்கள் அதிகப் பிரசங்கம் இந்த 'சிறீ' விஷயத்தை இன்றேடு கடையைக் கட்டுங்கள். (You may close the chapter on the Sri affair) (இப்படிச் சொல்லிவிட்டு பிரதமர் மகாநாட்டிலிருந்து அவசரமாக வெளியேறிவிட்டார் என்று தெரிகிறது.)

## தமிழ்த் தென்றல்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய முடியும். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் போன்ற அகராதித் துறையில் ஈடுபட்ட இக்காலத்தவர்களும் பிள்ளை அவர்களின் அகராதிக்கே முதலிடம் கொடுத்திருக்கிருர்கள். பிள்ளை அவர்களின் விரிவான நைடத உரைக்கு ஒப்பான உரையை தமிழகம் இன்னமும் காணவில்லை.

### ஆற்றல் என்னே!

பிள்ளை அவர்கள் நிகரற்ற உரை யாசிரியராய் விளங்குகின்ருர். வைசபூஷண சந்திரிகையில் பிள்ளை அவர்கள் ஒரு ஒப்பற்ற தருக்க ஞானி என்பதையும் நன்கு புலப்படுத்தி இருக்கிருர். சுப்பிரமணிய பராக்கிரமம், கதிர்காமக் கலம்பகம், ஆகிய நூல்களில் அவருடைய பக்தி நெறியும், பக்திச் சுவையும் பிரதிபலிக்கின்றன. சுப்பிரமணிய பராக்கிரமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முருகையன் கோயில் இன்னும் மேலைப்புலோலியில் இருப்பது குறிப்பிடத்தக்கது. பிள்ளை அவர்கள் தேவியின் அருளால் "இம்" என்ருல் கவி 'உம்' என்ருல் உரை என்னும் அளவிற்கு பெரும் ஆற்றல் பெற்றவர். கவி வன்மையில் காளமேகம் போன்றவர். புத்தமத கண்டனம் என்னும் நூலை ஆறு நாட்களிலும், பழநித்தல புராண உரையை பதினைந்து நாட்களிலும் எழுதினுரென்ருல் அவர் ஆற்றல்தான் என்னே!

### திரு வி. கவின் ஆசான்


இவர் காலத்துக்கு முந்திய ஒரு சமுதாய சீர்திருத்தவாதியாகவும் வாழ்ந்தார். முற்போக்கான கருத்துக்கள் அவரிடம் நிறையக் காணப்பட்டன. அந்த நாளிலேயே அவர் பிராமணியத்தின் கொடுமையை எதிர்த்துப் போராடினுர். நிமிர்ந்த நன்நடை, நேர் கொண்ட பார்வையும், நெஞ்சில் உரமும், நேர்மைத் திறமும், புவியில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், நிமிர்ந்த ஞானச் செருக்கும் செம்மையும் பூண்டு ஒழுகிய இந்தப் பெரியார் 1907-ம் ஆண்டு பங்குனி மகத்தில் அமரபதம் அடைந்தார். இது குறித்து இவர் மாணுக்கரான திரு. வி. க. நெக்குடிகப்பாடினுர். திரு வி. க.வுக்கு தமிழிலும் சைவத்திலும் ஆர்வமூட்டி இரண்டையும் ஐயம் திரிபற உணர்த்தி அறிவியலில் ஈடுபடச் செய்தவர் பிள்ளை அவர்களேதான். இதை வி. க. வின் பாடலிலேயே காணலாம்.

"மெய்யருட் பாவெங்கே மெய்
கண்ட நூலெங்கே
தெய்விக நீறெங்கே செந்
தமிழின்-மெய்யெங்கே
கந்தனடி போற்றுங்
கதிரைவே ஞவல நீ
இந்த நிலந் தோன்றுயே
லிங்கு
உன் போல் இலக்கணமும்
உண்மை இலக்கியமும்
நன் ஞான நூல்களும்
ஞாலத்தில்-எந்தனுக்குச்
சத்தியமாய்ப் போதிக்கும்
சற்குரவர் வேறில்லை
பித்தனேன் என் செய்வல்
பேசு"!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல் வீசிக் கலாட்டா செய்த ரஸிகர்களுக்கு சாவித்திரிசாட்டை!

'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்..'



தந்தி பிக்ஷர்சாரின் தயாரிப்பான ''சௌபாக்கியவதி''யில் ஜெமினிகணேசனும் சாவித்திரியும்

## ஆர்ப்பாட்டத்தைக் கண்டு அஞ்சாது வீரத்தோடு விறைப்பாகப் பேசினார்

வணங்கா முடி, என்ற சினிமாப் படப்பிடிப்புக்காக ஊட்டியில் ஒரு கிராமத்துக்குச் சென்றிருந்த பிரபல நடிகை சாவித்திரிக்கு ரஸிகர்கள் கல்லெறிந்து கலாட்டா செய்தார்கள். ஏறியப் பட்ட கல்லிலொன்று சாவித்திரியின் நெற்றியில் விழுந்தது.

''இதற்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன்'' ''அவுட்டோர் ஷூட்டிங்'' (வெளிப்புற படப்பிடிப்பு) என்றாலே, இது போல ஏதாவது நடக்கும் என்பது எனக்குத் தெரியும் மீண்டும் 2 மணிக்கு இதே இடத்துக்கு ஷூட்டிங்குக்காக வரப்போகிறேன். நாளையும் இங்கே இருப்பேன்'' என்று ரசிகர்களைப் பார்த்து துணிவுடன் அவர் அப்போது சொன்னார்.

சாவித்திரியோடு ஜெமினி கணேசனும்சென்றிருந்தார், எம். சரோஜா என்ற நடிகையும். ''சரவணபவா—யூனிட்டி'' என்ற சினிமா கம்பெனியைச் சேர்ந்தவர்களும் போயிருந்தார்கள்.

### ரஸிகர் கூட்டம்

அவர்கள் ஊட்டியில் உள்ள நீல ''ஏரி'' என்னும் ஏரியில், சாவித்திரியும், எம். சரோஜாவும் உல்லாசமாக படகில்போகும் காட்சியை படமாக்கினார்கள்.

நடிகை சாவித்திரி வந்திருக்கிறார் என்பதை கேள்விப்பட்டதும், வாலிபர்களும், இளைஞர்களும் விழுந்தடித்துக்கொண்டு ஓடி வந்தார்கள். வயதானவர்கள் கூட சாவித்திரியை பார்க்க விரைந்து ஆசையோடு வந்தார்கள். கொஞ்ச நேரத்துக்குள், அந்த ஏரிக்கரையில் ஏராளமான ஜனங்கள் கூடி விட்டார்கள்.

மத்தியானம் படப்பிடிப்பை நிறுத்தினார்கள். சாவித்திரியும் சரோஜாவும், படகை விட்டு கரையேறினார்கள்.

உடனே ஜனங்கள் திபு, திபு என்று முன்னேறினார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்த பெரும் பாடுபட வேண்டி இருந்தது.

### கல்வீச்சு

அந்த சமயத்தில் யாரோ ஒருவர் சாவித்திரி மீது கல்லை வீசினார். அந்த கல் சாவித்திரியின் நெற்றியில் பட்டது. ஆனால் அதிர்ஷ்டவசமாக சாவித்திரிக்கு காயம் படவில்லை.

ரசிகர்கள் செய்த இந்த கலாட்டாவில் சாவித்திரி மிரண்டு விடவில்லை; கல் விழுந்ததற்காக கவலைப் படவும் இல்லை. துணிவோடு அவர்களைப் பார்த்து விறைப்பாகப் பேசினார்.

''பாருடா எவ்வளவு தைரியம் பாருடா!'' என்று அதைக் கேட்டு ரசிகர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

### படமுதலாளியை ஆசுவாசப்படுத்தினார்

''என்னடா! இங்கே வந்து இப்படியா கிவிட்டதே'' என்று கவலைப் பட்டுக்

(13-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் குரல்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பித்தலாகாது. அவர்கள் யாவருக்கும் முழுப் பாடசாலையையும் முன்னேற்றும் உரிமையுண்டொழிய ஒரு சமூகப் பிள்ளைகளை மாத்திரம் கல்வியில் முன்னேற்ற உரிமை கிடையாது. இது தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஒன்றே. ஏனெனில் அவர்கள் யாவரும் அரசாங்க ஊழியர்கள்.

### எஜமானனை ஏவுவதா?

சமீபத்தில் முஸ்லிம் சமூக ஆசிரிய சகோதரர்கள் எழுதுவதையும் பேசுவதையும் பார்த்தால் அரசாங்கம் முழுவதும் தமக்கே சொந்தமானதாகவும் அரசாங்க பாடசாலைகளை நிர்வகிப்பவர்கள் தாங்களாகவும் எண்ணுவதாகத் தெரிகிறது. உதாரணமாகச் சிலவற்றை இங்கு குறிப்பிடல் நலம். தமிழ்ப் பெண்ணாசிரியர்கள் முஸ்லிம் பெரும்பான்மைப் பாடசாலைகளில் கடமையாற்ற விரும்பாவிடின் வேலையை ராஜினாமாச் செய்ய வேண்டுமாம். தமிழர் ஆசிரியர்களை அப்புறப்படுத்த வேண்டுமாம். தமிழ்ப் பிள்ளைகளைப் பிரித்து வைத்துப் படிப்பிக்கக்கூடாதாம். தமிழர் எத்தனை பள்ளிக்கூடங்களும் பெறட்டுமாம். இன்னும் இதுபோன்ற பல. இவற்றையெல்லாம் கூற முஸ்லிம் சமூக ஆசிரியர்களுக்கு என்ன உரிமையிருக்கிறதென்று தெரியவில்லை. அன்றித் தமிழர் ஆசிரியர்களுக்கும் பாடசாலைகளைப் பிரிக்கும்படி கேட்க உரிமையுண்டா? இவற்றைக் கவனிக்கவே அரசாங்கமிருக்கிறது. ஆசிரியர்கள் அரசாங்க சேவகர்கள். அவர்கள் எஜமானனை ஏவ முடியுமா?

### தகுதிக்கேற்பபதவிஉயர்வு

அரசாங்க தமிழ்ப் பாடசாலைகளின் நிர்வாகத்தில் அரசாங்கம் பாகுபாடு காண்பிக்க நியாயமில்லை. எனவே ஆசிரியர்களின் அட்டவணையில் முதலாவதாயிருப்பவரை அவர் எச்சமூகத்தைச் சேர்ந்தவராயினும் சரி அடுத்ததாக வரும் பாடசாலைக் காலியான இடத்திற்கு (தலைமையாசிரியராகவோ உதவியாசிரியராகவோ) நியமித்தலே முறையானது. இவ்வாறு தமிழர் முஸ்லிம் பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளுக்கும் முஸ்லிம்கள் தமிழ்ப் பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளுக்கும் நியமிக்கப்படலாம். இதனால் வகுப்பு ஒற்றுமையும் நிலவும். இதை மறுக்கவும் ஆசிரியர்களுக்குரிமையில்லை. ஆசிரியர்கள் பட்சபாதகமாக நடந்தால் அதை விசாரித்து நீதியை நிலை நிறுத்த அரசாங்கம்—கல்விப்பகுதி— இருக்கிறது. உண்மையில் குற்றவாளியானவரைத் தண்டிக்கலாம்.

### சமய வளர்ச்சிக்கு சொந்தபாடசாலை

இதுதவிர முஸ்லிம் சமூகம் தமது சமயம் கலாசாரம் ஆகியவற்றை மாத்திரமே விருத்தி செய்ய வேண்டின் தங்களுக்கெனச் சொந்த (உதவி நன்கொடைபெறும்)ப் பாடசாலைகளையாக்க வேண்டியதுதான். ஏனெனில் அரசாங்கம் பட்சபாதகமாக நடக்க இயலாது. இதைவிட்டு அரசாங்கத்தையே ஏவ முற்படலாமா?

### உண்மையான தடை எது?

முஸ்லிம் சமூகம் சலுகைகள் பெறுவது அவர்களின் முன்னேற்றத்திற்கே பாதகமானது என முன் ஒருமுறை ஜனாப் அசீஸ் அவர்களே கூறியதாக ஞாபகம். சி. பா. த. பெற்ற முஸ்லிம்கள் போதிய அளவு இல்லாததால் 7-ம் 8-ம் வகுப்புச் சித்தி யெய்தியோரையும் பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவு செய்யலாமெனக் கூறப்பட்டது. சி. பா. த. சித்தியெய்திய சிலரும்பிழையற நன்கு பேசவும் எழுதவும் இயலாதவர்களாயிருக்கக் காணக்கூடியதாகயிருக்கிறது. இவ்வாறிருக்க 7-ம் 8-ம் வகுப்புச் சித்தியெய்தியோர் பயிற்சிக் கலாசாலைக்குச் சென்று எதனைப் பயில முடியும்? இது அவர்களுக்கே பெருஞ் சுமையாக இருக்காதா? அன்றியும் அவர்கள் வெளிப்பட்டு மாணவர்களைப் பிழையறப் பயிற்ற முடியுமா? கற்பித்தல் அவர்களுக்கே கஷ்டமாயிருக்காதா? இதனால் பாதிக்கப்படுவது முஸ்லிம் சமூகமா தமிழர் சமூகமா? அன்றியும் இவ்வாசிரியர்களை சி. பா. த. பெற்றுப்பல அறிவாளிகளுடன் (வித்துவான் போன்றவர்களுடன்) போட்டியிட்டுத் தெரிவு பெற்றுப் பயிற்றப்பட்ட தமிழர் ஆசிரியர்களுடன் ஒப்பிட முடியுமா? இன்னும் இவர்கள்

(13-ம் பக்கம் பார்க்க)

நாடக விமர்சனம்:

## அண்ணாவின் தங்கை

'அண்ணாவின் தங்கை'— இதுதான் நாடகத்தின் பெயர். மட்டக்களப்பு நகரசபை மண்டபத்திலே, பிரதிநிதி திரு செ. இராஜதுரை தலைமையிலே சென்ற 10—3—57-ல் இந்நாடகம் நடைபெற்றது.

நாடகத்தை எழுதித் தயாரித்தவர், செல்வன் கா. சிவாநந்தன்—இவர் ஓர் கல்லூரி மாணவர். நாடகத்தில் பங்கெடுத்துக்கொண்டவர்களே மாணவ மாணவிகள் தான்!

கதை மிகவும் சாதாரணமானதுதான்! என்றாலும் தமது பேனாவின் பலத்தால் ஆங்காங்கே சிகப்புச் சட்டைக்காரர்களான 'முற்போக்கு' வாதிகளுக்கு கூசாமல் சாட்டையடி கொடுத்திருக்கின்றார் நாடக ஆசிரியர்...... 'என்னதான் என்றாலும் தனது தங்கையையே காதலிக்க அண்ணனுக்கு உணர்ச்சி வருமா......? உள்ளுணர்வு உறவை வெளிப்படுத்தியிருக்குமே......?'' என்று எழும் கேள்வியை மட்டும் மறந்துவிட்டால் கதையில் குறையில்லை; வசனங்களிலும் குறையில்லை.....

அன்பரசாக நடித்த எஸ். இரத்தினசிங்கமும், முடிக்குரிய வழக்கறிஞராக நடித்த செல்வி லில்லி செபஸ்தியானும் பாராட்டுக்குரியவர்கள்...... ஒரு வழக்கறிஞருக்கு வேண்டிய கம்பீரத்துடன் அழகிய தமிழில் பேசி நடித்தார் செல்வி லில்லி செபஸ்தியான்.

அன்பரசின் காதலியின் பாகத்தை ஏற்று நடித்தவர் செல்வி எஸ். லீலாவதி. கணீரென்ற இவரது குரலும் இயற்கையான நடிப்பும், கவர்ச்சிமிக்க அலங்காரமும் பாத்திரத்திற்கு சோபையளித்தன.

இவர்களைவிட. நீதிபதியாக எஸ். மாணிக்கவாசகர், டாக்டரின் மனைவியாக செல்வி பொ. சிவயோகம், எதிர்தரப்பு வக்கிலாக பி. எம். கருணைரெத்தினம், டாக்டராக கே. தங்கவடிவேல், துரையாக எம். கைலாயபிள்ளையும், துரையின் கைவிடப்பட்ட மனைவியாக செல்வி பொ. சிவலட்சுமியும் நடித்தார்கள்!

பெரியவரின் குணசித்திர பாத்திரத்தை ஏற்று நடித்

(13-ம் பக்கம் பார்க்க)



அண்ணாவின் தங்கை நாடகத்தில் பங்கு பற்றிய மாணவ மாணவிகள். நாடக விழாவுக்குத் தலைமை வகித்த மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை மத்தியில் வீற்றிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் குரல்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சையின்றித் தெரியப்படவும் குறைந்த புள்ளியுடன் சித்தியடையவும் கேட்கிறதாகத் தெரிகிறது. இதனல் யாருக்கு நஷ்டம் அவ்வாசிரியர்களுக்கும் (இப்போதுள்ள முறையில்) அவர்களிடம் கற்கும் முஸ்லிம் பிள்ளைகளுக்கும் தானே? இவற்ருல்தான் முஸ்லிம் சமூகம் கல்வியில் பின் தங்கி நிற்க வேண்டியிருக்கிறதென்பதும் சிந்திக்கற்பாலது. இதனைமாற்றித் தமிழர் ஆசிரியர்களால்தான் முஸ்லிம் சமூகத்தின் கல்வி முன்னேற்றம் பாதிக்கப்பட்டதாகக் கூறுவதாகத் தெரிகிறது. இதன் உண்மையின் அளவு மாராயற்பாலது.

## சங்கம் ஒன்று போதாதா?

இப்போது அரசினர் தமிழ் ஆசிரியர்கள் தங்களுக்கு இரு சங்கங்களை யாக்கிக் கொண்டு ஒரு சாரரை மற்ருேர் சாரார் தாக்கி வருகின்றனர். அரசினர் தமிழ் ஆசிரியர்களுக்கு இரு சங்கங்கள் தேவையில்லை. இரு சங்கங்களை யாக்க ஊக்கமளித்தவர்களும் முஸ்லிம் சமூக ஆசிரியர்களேயெனத் தெரிகிறது. அவர்கள் தங்களுக்கெனத் தனியான பிரச்னைகளையும் தமிழாசிரியர்களுக்கெனத் தனியான பிரச்னைகளையும் நேராகவும் புறவழிகளாலுமாக்கித் தமிழர் ஆசிரியர்களைத் துரத்தப்படும் பிராணி தப்ப வழிதேடுவது போலத் தனியான சங்கமமைக்க ஊக்கப்படுத்தியதாகவும் தெரிகிறது. இது துரதிருஷ்டமானதே.

## தலைமைப் பதவியாசை யாருக்கு?

தமிழர் ஆசிரியர்கள் தலைமையாசிரியர் மோகமுள்ளவர்கள் எனக் கூறப்படுகிறது. சென்ற ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னர் பத்து அல்லது பதினைந்து வருட சேவையுள்ள தமிழர் ஆசிரியர்களின் தலைமை ஆசிரியர்களாக ஐந்து, ஆறு வருடச் சேவையுள்ள முஸ்லிம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். இது நியாயமற்றதென அரசினர் எண்ணிப் பதவி உயர்வுகளெல்லாம் சிரேஷ்ட ஒழுங்கின்படியே செய்யப்படவேண்டுமெனத் தீர்மானித்து ஒரு சிரேஷ்ட அட்டவணையையும் தயாரித்து அவ்வொழுங்கில் பதவி உயர்ச்சியும் கொடுத்தார்கள். அப்போதும் முஸ்லிம் சமூக ஆசிரியர்கள் தாமும் தமிழ் ஆசிரியர்களே யென்பதை யறியாது தமக்குப் பிறிதாக ஒரு அட்டவணையும் முஸ்லிம் பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளுக்கு அவ்வட்டவணைப்படி பதவி உயர்வும் கேட்டனர். இதுமுஸ்லிம் நாடொன்றைச் சிருஷ்டிப்பதாகவே யமையும். இதன் உட்பொருளை யாராய்ந்தால் அது முஸ்லிமாசிரியர்கள் தமிழர் ஆசிரியர்களுடன் சேர்த்துக் கணிக்கப்படுகையில் மிகக் கனிஷ்ட ஆசிரியர்களாயிருப்பதும் தனி அட்டவணை மூலம் அவர்கள் சிரேஷ்ட ஆசிரியர்களாகி முஸ்லிம் பாடசாலைகளைச் சிருஷ்டிப்பதன் மூலம் தலைமையாசிரியர் பதவிகளை மிக விரைவில் பெற முடியு மென்பதும் தெளிவாவதாக ஏன் கொள்ளக்கூடாது? இவற்றைஉற்று நோக்கின் பதவி உயர்வையே கருத்தாகக் கொண்டோர் யாரென்பது புலப்படும்.

முஸ்லிம் சமூக ஆசிரியர்களை எமது சகோதரர்களாகவே கருதுகிறேன். அவர்களும் விளங்காத விடயங்களைத் தெளிவாக்குவது நன்மை பயக்கும். அவர்களைத் தாக்குவதோ அவர்களிடம் பாரபட்சம் காண்பிப்பதோ எனது எண்ணமன்று. இவற்றை அவர்கள் விளங்காது வீண் வாதம் (குதர்க்கம்) செய்வார்களாயின் அதுவே அவர்கள் தங்கள் கல்வி முன்னேற்றத்தைச் சலுகைகளால் பாழாக்கிக்கொண்டார்களென்பதை நிரூபிப்பதாயிருக்கும். இனிமேலாவது உண்மையை யுணர்ந்து இரு சமூக ஆசிரியர்களும் ஒரே சங்கத்தின் கீழ் ஒரே சமுதாயமாகி (அரசினர் தமிழ் ஆசிரியர்) இலங்கை மக்களின் கல்வி முன்னேற்றத்திற்கு இயன்ற பணிபுரிய இரு பகுதியாசிரியர்களையும் முன்வரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

க. மாணிக்கவாசகர்.

தெல்தெனிய,
14—3—57.

## அண்ணுவின் ...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

தவர் நாடகக் கதாசிரியர் கா. சிவாநந்தன். எந்த நடிகரை மறந்தாலும் இவரது நடிப்பை மறக்கவே முடியாது! 'மேக்கப்'பில் சிறிது நிறைவில்லாத போதிலும் இவரது நடிப்பு சிறப்பாக அமைந்திருந்தது.

மாஸ்டர் சிவலிங்கமும் இரா. பத்மநாதனும் நகைச்சுவை விருந்தளித்தார்கள்...... கொஞ்சம் அதிகமாகத்தான்!

காட்சி சோடனைகள் மட்டும் சோபிக்கவேயில்லை. பூஞ்சோலைக் காட்சி மட்டும் பரவாயில்லை. கவனித்த போது, காணப்பட்ட குறைகள்கூட குறைகளாகவே தோன்றவில்லை!

''என்ருலும் இந்தப் பாடசாலைப் பையன்கள் வெகு திறமைசாலிகள்தான்......'' என்று கூறிக் கொண்டே பல ரசிகர்கள் மண்டபத்தைவிட்டு வெளியேறியதை மட்டும் நன்ருகக் கவனிக்க முடிந்தது!

— 'தேன் மொழி'

## புங்குடுதீவு சமூக வளர்ச்சிச் சங்கம்

புங்குடுதீவு சமூக வளர்ச்சிச் சங்கம் அண்மையில் கொழும்பு கொச்சிக்கடையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

உத்தியோகத்தர் தெரிவில், திருவாளர்கள்: எஸ். லோறன்ஸ் செல்வராஜ் தலைவராகவும், ஜி. வில்லியம் காரியதரிசியாகவும், டி. லேயந்தின் பொக்கிஷதாராகவும், ம. டேவிற் உபதலைவராகவும், பிலிப் மிக்கேல் உப காரியதரிசியாகவும், பி. கபிரியேல் உப பொக்கிஷதாராகவும், தெரிவு செய்யப்பட்டனர்.

## கல்வீ சிகலாட்டா..

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு இருந்த பட முதலாளிகளிடம் ''இதென்னங்க பிரமாதம்! இதெல்லாம் சகஜமுங்க'' என்று சாவித்திரி சொன்னுர்.

சாவித்திரி ரசிகர்களிடம் சொன்ன படியே மத்தியானம் வந்து, படகில் ஏறினுர். அந்த காட்சியை படமாக்கினுர்கள்.

ஜெமினிகணேசனும் சாவித்திரியோடு சென்றிருந்தார். ''வணங்காமுடி''யில் ஜெமினிகணேசன் நடிக்கவில்லை என்ருலும் அவர் சும்மா சாவித்திரியோடு போயிருந்தார்.


எல்பின்ஸ்டன் றெக்ஸி

இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கிறது!

எம். ஜி. ராமச்சந்திரன், பி.பானுமதி, பி.கண்ணும்பா, டி. எஸ். பாலையா

நடித்துள்ள

தாய்க்குப் பின் தாரம்

விரைவில் வெளிவருகிறது! சிலோன் எண்டர்டெயின்மென்ட் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் திரைகளில்

தேவதாஸ் புகழ் நக்ஷத்திரங்களான நாகேஸ்வரராவ், சாவித்திரி

எங்கள் வீட்டு மகாலக்ஷிமி

மற்றும் பி. கண்ணும்பா, எம். என். நம்பியார், கே. ஏ. தங்கவேலு, சுந்தரிபாய், ஈ. வி. சரோஜா, ராஜசுலோசன முதலியோர் நடித்தது.



மகிழ்ச்சியூட்டும் 8வது வாரம்!

சென்ட்ரல் (கொழும்பு) சென்ட்ரல் (நாவலப்பிட்டி) ஜோதி (திருகோணமலை)

சென்ட்ரல் (பருத்தித்துறை) போகம்பரை (கண்டி)

எம். ஜி. ராமச்சந்திரன், அஞ்சலிதேவி, வீரப்பா, கே. ஏ. தங்கவேலு, டி. பி. முத்துலட்சுமி, கிருஷ்ணன்-மதுரம்

முதலியோர் நடிக்கும்

சக்கரவர்த்தித்திருமகள்

2வது வாரம்! முருகன் (ஜிந்துப்பிட்டி)

தினசரி மாலை 6., இரவு 9-30 மணி
சனி, ஞாயிறு பகற் காட்சி பிற்பகல் 2 மணி,
ஞாயிறு காலை 10 மணிக்கும்

என். டி. ராமராவ் ஸ்ரீரஞ்சனி, ராஜசுலோசன, ரேலங்கி நடிக்கும்

கன்னியின் சபதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாக்கியசாலிகள் யார்?

இவ்வுலகில் பல தேசங்களுண்டு. பல சாதி மக்களுளர். பல மொழிகள் பேசப்படுகின்றன. கடிய சூடுள்ள இடங்களுமுண்டு. மிகக்குளிரான தலங்களுமுண்டு. மழையறியாத் தேசங்களுமுண்டு. வெயில் காணு நாடுகளுமுண்டு நாம் பிறந்த நாடோ குளிரும் சூடும் சமமாயுள்ள நாடு. இரவும் பகலும் மட்டாகவுள்ள இயற்கை எழில் மிகு தேசம்.

இந்து என்னும் ஆழிச் சுந்தரியின் நுதலில் சிந்துரத் திலகம் தீட்டினுற் போல் உள்ள ஈழ நாட்டிற் பிறந்த நாம் உண்மையிற் பாக்கியசாலிகளே! ஆதியிற்தோன்றி ஆயிரக்கணக்கான இலக்கியச்சிருர்களை ஈன்ற அமுதத் தமிழ் அன்னையின் அன்பிற்கு பாத்திரராய்ப் பிறந்த எம்மைவிடப் பாக்கியசாலிகள் யாரிருக்கிருர்கள்? மாந்தர் வன வாழ்வு நடாத்திய காலத்திற் பிறவாது இந்த விஞேத விஞ்ஞான காலமான இருபதாம் நூற்ருண்டில் பிறந்த யாம் பாக்கியசாலிகள் இல்லை என்று யாரார் கூறமுடியும்? இவ்விதம் இனத்தால்-மொழியால்-இருப்பிடத்தால்-காலத்தால் யாவற்ருலும் மேன்மையுடன் பிறந்த எம் பெருமை இலேசானதா? எம் நாட்டில் எது இல்லை? மலையா?-நதியா?-கடலா?-குளமா?-வயலா?-காடா?-சமவெளியா?-நீர் வீழ்ச்சியா?-தென்னையா?-றப்பரா?-நெல்லா?-தேயிலையா? யாவுமுள்ளனவே! மழையுண்டு-வெயிலுண்டு-காற்றுண்டு-பனியுண்டு, யாவுமுண்டே! எமக் கென்ன குறை? இப்போது தான் ஈழத்தில் எமக்குச் சிறு துன்பம் வந்துள்ளது. அது விரைவில் நீங்கிவிடும். யாம் அஞ்ச வேண்டியதில்லை. மேற் சொன்னவற்ருேடு செந்தமிழ்ச் சிம்மம் சுதந்திரனின் நட்புறவும் பெற்ற யாம் இவ்வுலகில் உண்மையான பாக்கியசாலிகளா? இல்லையா? சொல்லுங்கள் பார்ப்போம்! எமது புகழ் பரவி இலங்குக!

—சோ. இராசேந்திரம்;
(வ. ம. இ. 105)
கந்தகெதரை.

## உயிர் எழுத்துக்கள் கூறுகின்றன!

அறிவை வளர்க்க ஆராய்ந்து கல்.

ஆபோல் மீட்டல் கல்விக் கழகாம்.

இலிபிகளை உறுப்புடன் எழுதி இன்புற்ருெழுகு.

ஈறிலி தனை வணங்கேல் இன்புருய் கல்வியால்,

உயர்ந்திட ஊக்கத்தோடு உணர்ந்து கல்.

ஊன்கணுர் உழைப்பில் குறையாச் செல்வம் கல்வியாம்.

எடுபிடி இல்லாதார் கல்வியால் ஏற்றமடையார்.

ஏற்பது நலம் கல்வியைக் கற்ருேரிடம்

ஐயம்திரக் கேட்டறிவோனே ஐசுவரியம் உடையாளும்.

ஒரிணை கண்களாம் எண்ணும் எழுத்தும்.

ஓதி ஓகை பெற ஒழுகுக அவ்விரண்டையும்.

ஔத்தியம் காணும் வரை அயராது கற்க.

யோ. மேரி பிலோமினு
மூதூர். (வ. ம. இ. 902)

# வளர்மதி
# சுதந்திரன் மாணவர் மன்றம்

## உண்மை நட்பு

இரு உள்ளங்களின் உணர்ச்சியால் ஏற்படும் பரஸ்பர ஒற்றுமையே நட்பு என்பதாகும். நம்முடைய அன்ருட வாழ்க்கை வழி நலன்களுக்கு ஒவ்வொருவரும் மற்றவருடன் தொடர்புகொள்ளுகிருேம். இத்தகைய தொடர்பை நட்பு என்று கூறிவிட முடியாது.

நட்பு ஒருவகை தொடர்பு என்ருலும், நட்பு அதிக நெருங்கிய தொடர்பையே சுட்டிக்காட்டுகிறது. இப்படிப்பட்ட நெருங்கிய தொடர்பில் ஒவ்வொருவரும் மற்றவர்களுடை உள்ளன்பைப் பெறுகின்றனர்.

இப்படி உள்ளன்பை அறிந்து ஒவ்வொருவரும் மற்றவரின் உள்ளத்தை அறிந்து, இருவரும் ஒருமையால் இணைந்து எங்கும், எவ்விடத்திலும் எப்பொழுதும் ஒரேவிதமாகப் பழகும் பழக்கமே உண்மை நட்பாகும்.

நீக்கமறு மிருவர் நீங்கிப்
புணர்ந்தாலும்
நோக்கினவர் பெறுமை
நொய்தாகும்- பூக்குழலாய்

தன்னுடைய உயிர் நேசன் ஆபத்தில் சிக்கி இருந்தால் உடனே அவனைக் காப்பாற்ற வேண்டும். இதுவே உண்மை நட்பு என்பதற்கு அறிகுறியாகும். இதையே வள்ளுவர் பெருந்தகை தனது ஈரடிக் குறளால்,

உடுக்கை இழந்தவன்
கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

என்று நயம்படத் தெள்ளு தமிழிலே, தித்திக்கும் தேனமுது மொழியிலே அருமையாகக் கூறியுள்ளார்.

மணக்கோலத்தில் வீற்றிருந்து முகமதுகான் தன்னுடைய சிநேகிதன் தேசிங்கு ஆபத்திலிருக்கிருன் என்று கேள்விப்பட்ட மாத்திரத்தே, மணக்கோலம் களைந்து மாற்ருனைப் போர் தொடுக்கப் பறந்து சென்று தன்னுடைய நண்பனுக்காக உயிர் துறந்தான். இத்தகைய நட்பே உண்மை நட்பாகும்.

— துரை தங்கவேலு
(வ. ம. இல: 467)
ஆறுகாமம்

## குயிலே வா

குயிலே குயிலே பறந்து வா
கொஞ்சி மகிழ விரைந்து வா
உயிரைப் போலே நேசிப்பேன்
உலகம் உள்ள நாளுமே

காற்றில் கானம் பாடி வா
கற்ருேர்த் தேற்ற கடுகி வா
ஆற்றல் மிக்க மக்களை
நாட்டில் பெருகச் செய்ய வா

பண்டைப் பெருமை நாட்ட வா
பாரில் பண்பைச் சொல்ல வா
அண்டை அயலார் அறியட்டும்
அமுதத் தமிழின் தன்மையை

தூற்றிக் காலம் கழிப்போர்
தூயத் தமிழைத் தெரியாதோர்
போற்றி அவரே நாட
கற்றுக் கொடுக்க குயிலே வா!

கொழும்பு—13. "வில்லவன்"

நெல்லினுமிசிறிது நீங்கிப்
பழமைபோற்
புல்லினுந் திண்மை
நிலைபோம்

பிரிவு இல்லாத சிநேகர் இருவர் (பகைத்துச் சிறிது காலம் பிரிந்து முன் போலவே) கூடினுலும், பார்க்குமிடத்து அவருடைய பெருமை அற்பமாகும். நெல்லினின்றும் உமியானது சிறிது நீங்கி முன் போலவே கூடினுலும் (அதற்கு முன்னே முளைத்தற்குக் காரணமாக அந்நெல்லினிடத்து இருந்த) வலியினது நிலையானது கெட்டுப்போம் என்று நந்நெறியில் ஓர் செய்யுள் அழகாக நட்பின் திண்மையை விளக்கிக் காட்டுகிறது. இஃது உண்மையே!

ஒன்று சேர்ந்து உண்மை நட்புக்கொண்டவர்கள், தன்னுடைய ஆடை நெழிந்து விழும்போது தன்னுடைய கைகள் [illegible] விரைவாகப் பற்றிக் காக்கின்றனவோ, அதுபோலவே

## தமிழ்

குழலும் யாழும்
குழைத்திடும் தமிழ்
குயிலும் கிளியும்
கூவிடும் தமிழ்
மயிலும் மானும்
மயங்கிடும் தமிழ்
மலரும் வண்டும்
மகிழ்ந்திடும் தமிழ்
இசையும் ஒலியும்
இணைந்த தமிழ்
அசையும் அணியும்
ஆர்ந்த தமிழ்
கல்லும் கனிந்து
கனியும் தமிழ்
சொல்லும் பொருளும்
துள்ளும் தமிழ்
சங்கம் வளர்த்த தமிழ்
சந்தம் முழங்கு தமிழ்
துங்கம் மிகுந்த தமிழ்
தூய தெய்வத் தமிழ்
வீரம் செறிந்த தமிழ்
மானம் ஊட்டும் தமிழ்
கானம் பொழியும் தமிழ்
கற்பு மிகுந்த தமிழ்

—தே. சுந்தரராசன்

## வளர்மதி புதிய மருமக்கள்

1391 எம். இஸ்மாயில் லெவ்வை, சம்மாந்துறை
1392 இ. சதாபக்தி, சுந்தப்பளை
1393 க. சிவாநந்தன், தாவடி வடக்கு
1394 பி. எஸ். மின்ஞெளி மீனு, வனகப்புவ
1395 ஏ. எம். அப்துல் அஜீஸ், மருதமுனை
1396 வ. மாணிக்கவாசகர், பள்ளம்புலம்
1397 மு. நாரராயணசாமி வெள்ளம்பிட்டிய
1398 குகப்பிரியைகணேச லிங்கம்.
1399 தி. ஜெயதேவி, சண்டிலிப்பாய்
1400 சோ. பாலசரஸ்வதி ஆனைக்கோட்டை
1401 த. வீரசிங்கம், மட்டக்களப்பு
1402 கு. நாகேஸ்வர சர்மா, அராலிவடக்கு
1403 தி. விமலாதேவி, சண்டிலிப்பாய்
1404 மு. கனகரெத்தினம் கொழும்பு-11.
1405 செ. புஸ்பராணி, திருகோணமலை
1406 எம். எம். எம். இஸ்மாயில், காத்தான்குடி
1407 சி. ம. பாலசுப்பிரமணியம், புங்குடுதீவு
1408 க. பத்மநாதன், மட்டக்களப்பு
1409 பொ. ஜெகதீஸ்வரன், திருகோணமலை
1410 த. மு. குணநாயகம் திருநெல்வேலி
1411 எம். ஐ. எம். ஜமீல் சாய்ந்தமருது
1412 க. சிவலிங்கம், மாத்தளை
1413 சி. கனகசிங்கம், கொழும்பு-9.
1414 தா. சீ. விஜயராஜன், நிந்தவூர்
1415 இ. ராமநாதன், வெல்லம்பிட்டியா
1416 எம். ரி. எம். மன்சூர், காலி

சிறுவர் கதை (17)

## தூங்க முடியுமா?

இனியன் போய்ப் படுத்துக் கொண்டான். தூக்கமே வரவில்லை...... அப்போது மழை கொட்டியது...... வெளியே பேரிரைச்சலுடன் மழை பெய்து கொண்டிருந்தது.

சிறிது நேரத்திலெல்லாம் மழை ஓய்ந்து எங்கும் நிசப்தம் நிலவியது. "இனியாவது நிம்மதியாகத் தூங்கலாம்" என எண்ணிக் கொண்டே புரண்டு படுத்தான் இனியன். அப்போது—?

பக்கத்திலிருந்து, அந்தக் குரல் அவன் காதில் பட்டுத் தெறித்தது.

"ஐயோ...... நீ இந்த நேரத்திலா பாடத்தொடங்கவேண்டும்? உனக்கு நல்லதாக மழையும் கொட்டிவிட்டதல்லவா? கடவுளே இனித் தூங்கினுற்போலத் தான்...... அப்பப்பா...... ஒன்று இரண்டு மூன்று...... நா...லு...... பலர் பாடத் தொடங்கிவிட்டனரே........ மனிதன் இந்தப் பாட்டைக் கேட்டுக்கொண்டு தூங்க முடியுமா?"

"என்ன இனியன்...... இன்னும் தூங்கவில்லை? ஏதோ பாட்டைப்பற்றித் தனியே கத்திக்கொண்டிருக்கின்ருயே......" என்று கேட்டுக்கொண்டு இனியனின் தாயார் உள்ளே வந்தா[illegible]

"பின்னே என்னம்மா இது...... இந்த மாரிகாலத்திலே, தவளைகளின் கீதத்தைச் சகித்துக்கொண்டு யாரால்தான் நிம்மதியாகத் தூங்க முடியும்" என்று சொன்னுன் இனியன்!

— "தேன் மொழி"

1417 த. சண்முகநாதன் இனுவில்
1418 சி. மகேஸ்வரி, பன்னுலை
1419 சி. சின்னராசா, எழுதுமட்டுவாவடக்கு
1420 நா. விஸ்வலிங்கம், அக்கரல்லை
1421 க. அ. தியாகராஜா கண்டி
1422 அ. சுதானந்தன், இமையாணன்
1423 எம். சகுந்தலா தேவி, யட்டவரை
1424 க. இராசரெத்தினம் பழுகாமம்
1425 நா. சிவநாதன் கொழும்பு
1426 மா. குமாரசுவாமி, கல்முனை
1427 செ. மைக்கல், நாஜு ஓயா
1428 சி. காசிலிங்கம். நீர்வேலி வடக்கு

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 4.

பெயர்.................................................

பாடசாலை.............................................

விலாசம்.................................................

.................................................

.............................................. ..............................................
பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகச் செய்திகள்:

# "அமைச்சரே! மேடையேறி நேர்மையையும் நியாயத்தையும் நிரூபிப்பீரா?"

# பேட்டிகள் அளிப்பதாகத் தம்பட்டம் அடிக்கும் கல்வி அமைச்சருக்கு ஆசிரியர்கள் சவால்!

## வேலியே பயிரை மேயும்போது விளைவு...?

"மந்திரிப் பதவியேற்றதின் பின் இவ்வளவு நாட்களுக்கிடையில் எத்தனையோ சங்கங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் பேட்டியளித்தேன் எனப் பெருமை சாற்றித் திரியும், எங்கள் கல்வியமைச்சரவர்கள் எங்கள் சங்கப் பிரதிநிதிகளுக்குப் பேட்டியளிப்பதற்கோ அன்றேல் நாங்கள் கூட்டும் ஒரு மகாநாட்டில் சமூகமளிப்பதற்கோ ஏன் தயங்குகின்றார் எனத் தெரியவில்லை. தமிழர் ஆசிரியர்கள் விஷயத்தில் தான் நேர்மையாக நடப்பவராய் இருந்தால் எங்களாற் கூட்டப்படும் மகாநாட்டிலே பகிரங்க மேடையிலே தனது நியாயத்தை நிலை நிறுத்திக் காட்டும்படி கௌரவ கல்வி மந்திரியவர்களுக்கு நான் சவால் விடுகின்றேன்"

இவ்வாறு சென்ற 23-3-57 ல் நுவரெலியா செண் சேவியர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நுவரெலியாக் கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசும்போது மேற்படி சங்கத்தின் கண்டிக் கிளையின் கௌரவ செயலாளர் திரு. வ. மாகாலிங்கம் கூறினர்.

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழாசிரியர் சங்கத் தனாதிகாரி திரு. ஆ. சு. சுப்பிரமணியம் பேசுகையில் "எந்த வீரனும் ஒரே சமயத்தில் பல திசையில் பல பேரால் தாக்கப்பட்டால் அவன் எவ்வாறு வெற்றி பெற முடியும். இன்று தமிழர் ஆசிரியர்கள் பல திசையிலே தாக்கப்படுகிறார்கள். ஒரு புறம் அகில இலங்கை அரசினர் இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் தாக்குகின்றது. அடுத்த பக்கத்தில் அதற்கு ஆதரவு கொடுத்துத் தட்டிக் கொடுக்கும் கல்வியமைச்சு நையப் புடைக்கின்றது. இத்துடன் பாஷைச் சட்டம் பயங்கரத் தாக்குதல் நடத்துகின்றது. வேலியே பயிரை மேயும் நிலையேற்படின் விளைவைப் பற்றிக் கூறுவானேன்" என்று கூறினர்.

தலைமையாசிரியர் திரு. வே. முருகேசு தலைமையில் நிகழ்ந்த இக் கூட்டத்தில் நுவரெலியாக் கிளைச் சங்கத்திற்குரிய நிருவாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வே. முருகேசு, கௌரவ காரியதரிசி: திரு. நா. சு. கார்த்திகேசு, கௌரவ தனாதிகாரி: திரு. செ. மயில்வாகனம். இவர்களைவிட இரு உபதலைவர்கள் இரு உபகாரியதரிசிகள், ஒரு உபதனாதிகாரி, ஐந்து நிருவாக சபை அங்கத்தவர் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்கூட்டத்தில் பின்வரும் பிரேரணைகளும் நிறைவேறின:-

(1) சிங்கள ஆசிரியர்களின் தலைமையின்கீழ் இருக்கும் தமிழ்ப் பகுதி வேறாகப் பிரிக்கப்பட்டு அவைகள் தமிழ் தலைமை ஆசிரியரின் கீழ் இயங்க வேண்டும். அல்லது தமிழ் சிரேஷ்ட உதவி ஆசிரியரின் தலைமையின்கீழ் இயங்க வேண்டும்.

(2) நுவரேலியா போன்ற குளிர் பிரதேசங்களிற்றொடர்ந்து பல வருடங்கள் ஆசிரியர்கள் வேலை செய்வதால் அவர்களது தேக நிலை பாதிக்கப்படுகிறது. எனவே மற்ற அரசாங்க ஊழியர்களைப் போல ஒரு குறிப்பிட்ட (2 வருடம், 3 வருடம்) காலத்திற்கு மேல் வேறு சுவாத்தியப் பிரிவுகளுக்கு ஆசிரியர்கள் கட்டாய மாற்றம் செய்யப்படவேண்டும்.

### இளங்கோ படிப்பக திறப்பு விழா

"இன்று நாட்டில் படித்தவர்களில்கூட இலக்கிய அறிவும் அரசியலறிவும் இல்லாதோர் பலர் இருக்கிறார்கள். இவற்றை மாற்றி படித்தவர்களும் படியாத பாமரர்களும் சிறந்த இலக்கிய அறிவும் அரசியல் அறிவும் பெற்று விளங்கச் செய்ய வேண்டியது நாட்டின் இன்றைய நிலையில் மிக அவசியம். இத்துறையில் இளங்கோ படிப்பகம் ஓர் பல்கலைக் கழகம்போல் திகழ்ந்து அறிவு புகட்டும் என நம்புகிறேன்"

இவ்வாறு சென்ற 23-3-57 சனிக்கிழமை 135 செக்கடித் தெருவிலிருக்கும் மேற்படி படிப்பகத்தைத் திறந்து வைத்து பேசிய "பூங்கா" ஆசிரியர் திரு இரா. அதிமணி குறிப்பிட்டார்.

விழாவுக்கு படிப்பகத் தலைவர் திரு அ. லாரன்சு தலைமைவகித்தார். திருவாளர்கள்: உ. சுப்பையா, நாச்சியப்பன் ஆகியோர் பேசிய பின் படிப்பகச் செயலாளர் திரு மு. கருப்பையாவின் நன்றிஉரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

### "தொழிலாளர் ஒன்று பட்டிருக்க வேண்டும்"

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பதுளைக் கிளையின் சார்பில் சென்ற 24—3—57-ல் வெளிமடைக் குருப்பில் பிரமாண்டமான பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. மேளவாத்தியங்கள் கண்டியர் நடனங்களுடன் சுமார் ஒரு மைல் தூரம் தலைவர்களை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

ஜில்லாத் தலைவர் திரு டி. ராம்கோபால் பேசுகையில் தொழிலாளர் குறைகளைத் தீர்க்க இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எந்நேரத்திலும் தயாராக இருக்கிறதென்றும் கூறினர்.

வெளிமடை நகரசபைத் தலைவர் திரு வால்டர் பெரேரா பேசுகையில் "அரசியல் நிலைகள் எப்படி இருந்தபோதிலும் தொழிலாளர்கள் ஒரே இயக்கத்தில் ஒன்றுபட்டிருக்க வேண்டும். முதலாளித்துவக் கொடுமைகளிலிருந்து நீங்கள் விடுதலை பெற வேண்டுமானுல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசில் உறுதியுடன் ஒன்றுபட்டிருக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறினர்.

திருவாளர்கள் எஸ். எஸ். லோகநாதன் (மாவட்ட உப பிரதிநிதி), ஆர். எம். சிவசாமி (காரியதரிசி), சாமுவேல், களப்பன், எஸ். சுப்பிரமணியம், ஏ. தங்கராசன் ஆகியோர்கள்பேசிய பின் செல்விகள் பாப்பு, செல்லம் ஆகியோர்கள் தேசியப் பண்ணிசைத்தார்கள்.

### அ. இ. ப. இயக்கம் பலாங்கொடை

அகில இலங்கை பகுத்தறிவு இயக்கம் பலாங்கொடை கிளையின் சார்பில் கடந்த 23—3—57ல் திரு. தங்கராசா தலைமையில் ஓர் ஆரம்ப - பொதுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு இரத்தினபுரி கிளையின் செயலாளர் வே. தங்கவேலர், இ. தி. மு. க. இரத்தினபுரிக் கிளையின் தலைவர் திரு. அண்ணுதாசன் ஆகியோர் சமுகமளித்து சொற்பெருக்காற்றினர்.

பின்னர் கீழ்க் கண்டவர்கள் இயக்க உத்தியோகத்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:

தலைவர்: சி. தங்கராசா, உபதலைவர் சு. ப. கருப்பையா, பொருளாளர்: த. கதிர்வேலு. செயற்குழு அங்கத்தினர்களாக திருவாளர்கள்: முத்துச்சாமி, நா. சின்னையா, ச. முத்தையா, பி. ஏ. லிங்கம், மு. சுந்தவடிவேலு முதலியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### பேனு நண்பர்கள் கூட்டம்

வடமராட்சிப் பேனு நண்பர் கழக மாதாந்தக் கூட்டம் சென்ற 24—3—57-ல் கரணவாய் தெற்கில் நடைபெற்றது. கூட்டத்தில் 'தென்கருணைத்தாசில்' பேசுகையில் "இந்திய சோதரர்களை நாடற்றவர்களாக்கி, தமிழன் பலத்தைக் குறைத்துவிடலாம் எனப் பகற் கனவு கண்டனர் முன்னைய ஆட்சியாளர். ஆனுல் அவர்களால் தம் ஆவலைப் பூரணமாக நிறைவேற்ற முடியவில்லை. அதேபோன்றுதான் இன்றைய ஆட்சியாளரும் முஸ்லிம் மக்களையும் எம்மையும் பிரிக்க முற்படுகின்றனர். இதிலும் இவர்கள் படுதோல்வி அடையப் போகின்றனர் என்பது நிச்சயம்" என்று கூறினர்.

பின்னர் திருவாளர்கள் சா. கணேசன், எம். முத்து, காளிதாசன் ஆகியோரும் பேசினர்.

# கல்வி மந்திரியின் சிங்கள கோட்டையில் செந்தமிழ்!

## களுத்துறை புகையிரத நிலைய அட்டவணைப் பலகையில் தமிழ் பொறிப்பித்த பெருமை

### பொ வா. மன்றத்துக்கு உரியது

"இந்நாட்டில் மொழி வெறி தலைவிரித்தாடிய தருணத்திலே களுத்துறை புகையிரத நிலையத்தில் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும்தான் அதன் அட்டவணைப் பலகை எழுதப்பட்டிருந்தது. ஆனுல் தமிழிலும் அந்த அட்டவணையை எழுதிய பெருமை களுத்துறை பொதுநல வாலிப மன்றத்திற்கே உரியதாகும். திரு தஹநாயகாவின் கோட்டையாகிய காலியிலே பொது நல வாலிப மன்றக் கிளை தமிழ் மொழியை வளர்ப்பதில் அரும் பாடுபட்டு வருகின்றது என்றால் மன்றத்தின் சேவையைப் பாராட்டாமலிருக்க முடியாது"

இவ்வாறு மட்டக்களப்பு பொது நல வாலிபர் மன்ற மகாநாடு 17—3—57-ல் மன்ற அலுவலகத்தில் கூடியபோது மன்றப் பொதுச் செயலாளர் திரு. அ. தருமராஜா பேசுகையில் கூறினர்.

அடுத்து இணைச் செயலாளர் திரு. செ. புவனேந்திரன் பேசுகையில் மன்றம் ஆரம்பமாகி ஒருவருடத்திற்குள்ளே அதிக தொண்டுகளைச் செய்திருக்கிறதென்றும் மன்றம் எத்தகைய இடர்கள் வந்தபோதிலும் தொடர்ந்து பணியாற்றி வருமென்றும் கூறினர்.

திரு எச். எம். இராசேந்திரம் பேசுகையில் இலங்கையிலே எத்தனையோ அரசியல் கட்சிகள் இருந்தபோதிலும் அவைகளினுல் தமிழர்களுக்கு எவ்வித பயனுமில்லை என்றும் தமிழர்களுக்கென்று ஒரு கட்சி இருக்குமாயின் அது தமிழரசுக்கட்சியே என்றும் கூறினர்.

மற்றும் பலர் பேசிய பின்னர் மன்ற போஷகராக மட்டக்களப்பு நகரசபைத் தலைவர் திரு ஏ. எஸ். ரீ. கனகசபை தெரிவு செய்யப்பட்டார். இதர உத்தியோகஸ்தர்கள் பின்வருமாறு:-

பொதுச் செயலாளர்: திரு அ. தருமராஜா, இணைச் செயலாளர்: திரு செ. புவனேந்திரன், துணைச் செயலாளர்: திரு ஏ. தயாநிதி, கலை வளர்ப்பாளர்: திரு எச். எம். இராசேந்திரம், தனாதிகாரி: திரு கு. நாகராசா, உடற் பயிற்சியாளர்: திரு இவனுடித் செல்லப்பிள்ளை கணக்குப் பரிசோதகர்: திரு வி. [illegible]நாதன்.

### விற்பனவுச் சங்க வருடாந்தக் கூட்டம்

திருகோணமலைப் பகுதி விளைபொருள் விற்பனவுச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் சமீபத்தில் முகாந்திரம் த. பாலசுப்பிரமணியம் தலைமையில் சாம்பற்றீவு மிஷன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. தலைவர் பேசுகையில் தமிழர்கள் இன்று மட்டும் கூட்டுறவு முறையில் நடக்கவில்லை என்றும் பண்டைகாலம் தொடக்கம் தங்கள் தொழில் முறைகளில் கூட்டுறவு முறைகளை அனுசரித்தே நடந்து வந்திருக்கிறார்கள் என்றும் கூறினர்.

கூட்டுறவுப் பரிசோதகர் திரு ஈ. ஆர். பி. பெஞ்சமின் பேசும்போது கூட்டுறவுச் சங்க நடைமுறைகளை விளங்கப் படுத்தினர். கிருஷிக போதனுசிரியரும் கூட்டத்தில்பேசினர். சங்கக்காரியதரிசி திரு நா. கந்தையா கூட்ட அறிக்கையை வாசித்தார்.

புதுவருட உத்தியோகஸ்தர்களாக கீழ்க்கண்டவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர்: முகாந்திரம் த. பாலசுப்பிரமணியம், உபதலைவர் திரு க. தியாகராசா, காரியதரிசி: திரு நா. கந்தையா [கி. மு. ச. தலைவர்], உபகாரியதரிசி: திரு இ. நடராசா, தனாதிகாரி: டாக்டர் சி. சிவானந்தம். நாலுபேர்கொண்ட நிர்வாகசபையும் நிறுவப்பட்டது.

### "தொழிலாளரை அடக்கியாள முடியாது"

"பலஆண்டுகளுக்குப் பின் இத்தோட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உருவாகி இருப்பது தொழிலாளர்களின் விழிப்புணர்ச்சியைக் காட்டுகிறது. தொழிலாளர்கள் விழித்துவிட்டால் அவர்களை அடக்கியாள யாராலும் முடியாதென்பதை உறுதியோடு கூறுகிறேன்" இவ்வாறு பதுளை மாவட்ட உபபிரதிநிதி திரு எஸ். எஸ். லோகநாதன் பங்கு தோட்டத்தில் நடைபெற்ற இ. தொ. கா. பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

கடந்த 23—3—57-ல் தோட்டக் கமிட்டித் தேர்தலையொட்டி நடந்த கூட்டத்தில் திரு லோகநாதன் மேலும் பேசுகையில், தொழிலாளர் இயக்கத்தை நசுக்கிவிட எவரும் நினைத்தால் அது பகற்கனவாகவே முடியும் என்று கூறினர்.


திருவாளர்கள் தங்கராசன், என். எஸ். இராசசுந்தரம் ஆகியோர் பேசிய பின்னர் கீழ்க்கண்ட தோட்டக்கமிட்டி தெரிவுசெய்யப்பட்டது:

தலைவர்: கே. எஸ். வேலு, உபதலைவர்: ஏ. சின்னையா, காரியதரிசி: கே. எஸ். தம்பிரட்ணம், இணைக்காரியதரிசி: எஸ். கணேசன், தனாதிகாரி: வி. பால்சாமி.

### அழகிரி நினைவு நாள்

அழகிரி மன்ற சார்பில் சென்ற 24-3-57ல் கழகப் பணிமனையில் அஞ்சா நெஞ்சன் "அழகிரி நினைவு நாள்" தோழர் மா. சு. முருகசாமி தலைமையில் கொண்டாடப்பட்டது. அதுபோது செல்வி: மு. அன்புமலர் தோழர்கள்: ஆ. இளங்கோ, நலம்விரும்பி, எஸ். ஏ. செல்லப் பாண்டியன், எம். பி. மாதவன், பி. ஏ. மாறன், பி. எம். ஜலால் ஆகியோரும்மற்றும் பலரும் அழகிரியின் அரும்பெரும் பணிகள்பற்றியும் தமிழகத்தில் தி. மு. க. தேர்தலில் வெற்றி ஈட்டியதைப் பாராட்டியும் சொற்பொழிவாற்றினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் அளிக்க விருக்கும் புது வருட திரை விருந்து!

அஞ்சலிதேவி, என். டி. ராமராவ், ரேலங்கி, ஆர். நாகேஸ்வரராவ், சௌகார் ஜானகி மற்றும் பலர் நடித்துள்ள



ஜோதி பிலிம்ஸாரின்

# வெற்றி வீரன்



டைரக்ஷன்: **பிரகாசராவ்.**

பின்னணி இசை: ஜிக்கி, சுசீலா, டி. எம். சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன்.

**உணர்ச்சி யூட்டும் சம்பங்கள் நிறைந்த திரை ஓவியம்!**




இப்பத்திரிகை கொழும்பு தட்டார தெரு 196ம் [illegible] யகம் அவர்களால் சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டார தெரு சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1957 ஏப்ரல் மாதம் 7ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org